ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீமகாபாரதவிலாசம்.

சூது துகிலுரிதல்

இயலிசைநாடகமென் முத்தமிழ்வல்லவராகிய

இராயவல்லூர்

இராமச்சந்திரகவிராயரால்

இயற்றப்பட்டது

இஃது

மயிலம்

ஸ்ரீ

சுப்பிரமண்ணியசுவாமிகளால்

பார்வையிடப்பட்டது

ஷை - வெங்கடாஜலமுதலியார்- குமாரர்

முனிசாமிமுதலியாரது

மாதவநிவாசவச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

பிரமாதி ௵

O-,, 892MRR,M
N79

115760

உ

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

ஸ்ரீமகாபாரதவிலாசம்.

சூது - துகிலுரிதல்.

(*)

விநாயகர்தோத்திரம்.

வெண்பா-இ-ம்-சங்கராபரணம்.

ஓதுமகாபாரதத்தி லுள்ளபடிநாடகமாய்ச்
சூதுந்துகிலுரிவுஞ் சொல்லவே-ஆதரவாய்ச்
தஞ்சமென்றிரங்குமெங்கள் தர்மவேழமாமுகனார்
கஞ்சமஞ்சுஞ் செஞ்சரணங்காப்பு.

முருகர்தோத்திரம்

விருத்தம் - இ-ம் - தோடி.

சரவணபவனேபோற்றி சங்கரன்மகனேபோற்றி
அரிதிருமருகாபோற்றி ஆறுமாமுகனேபோற்றி
திருவளர்குகனேபோற்றி செங்கைவேலவனேபோற்றி
கரிமுகற்கிளையவெங்கள் கந்தனேபோற்றிபோற்றி.

சிவபிரான்தோத்திரம்.

விருத்தம்-ஆனந்தபைரவி.

திங்கள்செஞ்சடையாய்போற்றி திரிபுரமெரித்தாய்போற்றி
மங்கையோர்பாகாபோற்றி மான்மழுதரித்தாய்போற்றி
துங்கவெண்விடையாய்போற்றி துலங்குமுக்கண்ணாய்போற்றி
எங்கள்நாயகனேபோற்றி யீசனேபோற்றிபோற்றி

மகாவிஷ்ணு தோத்திரம்.

விருத்தம் - இ-ம்- பைரவி.

ஆரணப்பொருளேபோற்றி அகிலநாயகனேபோற்றி
பாரளந்தவனேபோற்றி பாண்டவர்தூதாபோற்றி
காரணமறைத்தபோது வந்துகாத்தவனேபோற்றி
காரிணேவஸ்துவான கண்ணனேபோற்றி

உமைக்கும்-இலட்சுமிக்கும்சரஸ்வதிக்கும்-தோத்திரம்.

விருத்தம்-இ-காம்போதி.

திருவளவிலகம்போற்றுஞ் சிவகாமித்தாயேபோற்றி
மருமலர்கமலமேவு மாதுலட்சுமியேபோற்றி
மருவளர்கலைகலைகள்சொல்லி மகத்தானமதுரவாக்
தருஞ்சரஸ்வதியேயுந்தன் றுளிணைக்கமலம்போற்றி

தரு-தோடையம்-இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளசாப்பு

௧. விநாயகர்தோத்திரம்-தரு-இ-ம்-பைரவி.

நீதாசரணம்வி-நோதாசரணம்
ஆதாரமாக்கண-நாதாசரணம்
ஏதேதுமில்லாம லிந்தத்தமிழுக்குத்
திருவருள்செய்து-தினங்காக்கவேணுமு
சிவசங்கரி யுலகங்களை யுதவுந்தனி யுலருந்தருள் (நீதா)

௨. சுப்பிரமணியர்-தோததிரம்,

துய்யாதரண்மென் னையாசரணம்
மெய்யானவேல்முரு கையாசரணம்
ஒய்யாரமாமயி-லேறிவந்தேயேழை
உரைக்குந்தமிழுக்-குதவிசெய்யவேணும்
ஒருமாங்கனி யதுகொண்டிட-உலகந்தனைவலம்வந்திடுந்(துய்யா

௩. பரமசிவம்தோத்திரம்

ஏகாசரணம்வி வேகாசரணம்
வாகானதோகையோர் பாகாசரணம்
பாகானவிந்தத் தமிழுக்குதவிசெய்து
பாலிக்கவேணுங்கிர்பை பாலிக்கவேணும்
பணியுந்திகழ்-மதியும்புன லருகுந்தனை சடைதங்கிய (ஏகா

௪. ஓமையவள்,தோத்திரம்

மாலிசரணங்-கபாலிசரணஞ்
சிலிவிசாலத் திரிசூலிசரணம்
நாணிலந்தனிலிந்த நாடகம்பாடவென்
னைவிலிருந்துநீ நன்மைதரவேணும்
நவகண்டமு மதிரும்படி நடனம்புரிபதபங்கய (மாலி

௫. விஷ்ணுதோத்திரம்

நந்தாசரணமு குந்தாசரணங்கோ
விந்தாசரணர விந்தாசரணம்
எந்தாயிதற்கொரு விக்கினமுமில்லாம
லின்னருள்தந்துநீ முன்னிற்கவேணும
இடமங்கையருடனிங்கிதமுடன்மங்களமடர்கின்றிடும் (நந்த

௬. சரஸ்வதி தோத்திரம்

வாணிசரணஞ்சொல் வேணிசரணமிந்தி
ராணிசேர்புத்தகபாணிசரணம்
வாணுதலாலே,சரஸ்வதியேயிந்த

வண்டமிழ்சொல்லநல்வாக்குத்தாவேணும்
மலர்தங்கிய பிரமன்றிரு வுளமிங்கிர்தமுடனேமகிழ் (வாணி)

மங்களம்

தரு-இ-ம்-அசாவேரி-திரிபுடைதாளம்.

பல்லவி

மங்களம்,ஜெயமங்களஞ்-சுபமங்களம்.மங்களம்

அநுபல்லவி

திங்களிளம்பிறையுந் தங்குஞ்சடைமுடியுந்
தேசுலாவுநாகா பரணமுங்கொன்றையும்
வாசமேவுமெய்ஞ் ஞானகியென்னுஞ்
சித்தர்கள்தவ முத்தர்கள்தத்துவ
நித்தர்கள்புரி சுத்தர்கள்பரவிய
திரிநயனவிலாச மெய்யோர்க்கும்
மலைமகளொனுமா துமைபாகர்க்கும் (மங்க)

சரணங்கள்

செகமேலவருமாயை யனைத்துந்
தவறுமல்வகைகருணா யளிக்கும்
வருதேசிகனாக விருக்குங்
குருநாதன்செல்வேள் முருகர்க்குஞ்
சிறுபிறைநுதல்குற மகவள்ளிக்குஞ்
சுரர்பதிதருமகள் தெய்வயானைக்கும்
திசைமுகனுக்குங் கலைமகளுக்குந்
திருமகளுக்குப் முயல்வண்ணனுக்கும்
சீருலாவுகுதாடல துகிலுரிதலைப்
பேருலாவுநனை டைகமுறைசெய்த
சொந்தமிழ்க்கவிராமச சந்திரன்றனக்குஞ்
செந்தமாய்ப்பாட மனங்கொண்டவர்க்கும் (செயம)

விநாயககர்வரும்பொதுவிருத்தம்-இ-ம்-தோடி

அந்தமுமாகியாகியருமறைபொருளுமாகி
விந்துவுநாதமாகி மெய்ப்பொருடானேயாகும்
இந்துவேணியளித்தவிறையொருமுதலவனை
கந்தமாமலர்தாள்திவ்வியகணபதிவருகின்றாரே

விநாயகர்வருகிற-தரு-இ-ம்-பூரிகல்யாணி,ஆதிதாளம்

பல்லவி

தர்மவிநாயகர்தானிதோவந்தார் அருள்புரிந்திட
தர்மவிநாயகர்தானிதோவந்தார்

அநுபல்லவி

நன்மைசேர்சென்னை முத்தியாலுபேட்டையில்
வன்னியர்வீதியில் வந்துகுடிகொண்ட
வல்லமைப்பெண்மணவாளர்நல்ல
கல்விதருங்கிர்பையாகரஎழில்

வானகத்தினில்-மேவுமுக்கிய-தேவருக்குமேல்-யாவருக்குநல்
வளமிகுமபல-கலைபுயின்றிட-
வுளமிதங்கின-னருள்சுரந்திதோ (தர்ம)

சரணங்கள்.

மங்கையுமையருளங்குச பாசா-கருணாவிலாசர்
மல்லன்மருகுழல் வல்லமைப்பிராணேசர்
தங்கும்பலகலைதந்தருளும் நேசர்-கோடிசூரியப்பிரகாசர்
தஞ்சமென்றோரிடநெஞ்சந்தனில் வாசர்
பொங்குகஜமுககூரனை வாட்டிய
பூரணவெற்பினிற்பாரதந் தீட்டிய
ஐங்கரனேநல்லமுதுசெய் ஊட்டிய
ஒளவைக்கிக்கைலாயத்தைக் காட்டிய
ஆகமெய்ச்சதுர்வேதமெய்ப்பொரு
ளாயிருப்பவர் தாய்சிறப்பவர்
அங்குமிருப்பவரெங்குமிருப்பவ
ரானைமுகத்தவர்மோனமிகுத்தவர் (தர்ம)

கட்டியக்காரன்வருகிறபொதுவிருத்தம்.

இ-ம்-சங்கராபரணம்.

மட்டில்லாக்கீர்த்திபெற்ற மதிகுலக்கொழுந்தோனிந்த
அட்டதிக்கெல்லாங்காக்கு மடல்பெருமரசர்கோமான்
துட்டரையடக்கும்வீமன் துரியமாராசன்வாசற்
கட்டியக்காரன்வந்து களரியிற்றோன்றினனே.

கட்டியக்காரன்வருகிற-தரு-இ-ம்-சங்கராபரணம்-மிசுரதாளம்

பல்லவி,

வாசற்கட்டியக்காரன்வந்தான் மக
ராஜன்துரியோதனராஜராஜகெம்பீர (வாசற்)

சரணங்கள்.

தலையிற்பொன்னுருமாலை துலங்க-கையிற்
சமுதாடுபளபளென் றிலங்க-வாகு
வலயங்களிருதோளில் தரித்து-சரிகை
வஸ்திரவல்லவாட்டு விரித்து
வனுவாய்ச்சல்லடங்கட்டி-வரிசையாய்க்கச்சைகட்டி
வலதுகையில்மீசை முறுக்கி-வந்த
மறுமன்னர்பயப்பட வுறுக்கி
மகுடமண்டலாதிபதிகளெங்கெதிரி ரதிபணிந்திடவிடவிதன்மிகுந்துள
மதிகுலந்தனில் வருதுரந்தர துரியனென்றிடுமகிபன்வந்திடு
சமயமிதுவெகு-சமயமிதுவென்ன சபையிலேவரும்-புகழஇதமுத

வாசற்கட்டியக்காரன்.

(கட்டியக்காரன்-வசனம்) அசோ தெப்படியென்றால் ஏகசக்ராதிபதியா
னசந்திரவம்ச உதாரகுணராஜயகாராசகெம்பீரராசமார்த்தாண்
டராசபரமேஸ்வர ராசாதி ராசன் துரியோதனமகாராசன்கொலுவு

க்குவருகிறார், பட்டவர்த்தனர்மகுடவர்த்தனர்சகலதேசத்துராசாக்களெல்லோருமெச்சரிக்கைஆரடாகொலுவாசற்காரரேசீக்கிரமய்க்கொலுவை அலங்காரம்பண்ணும்பிள்ளாய்

பொதுவிருத்தம்- இ-ம், தோடி.

ஒலிகடல்சூழுமிந்த உலகெலாமொருகுடைக்கீழ்
இலகவேயாளவல்லராஜாதிராஜனை
வலுமையில்மிகுந்தவீரன் மகாதுரியோதனனென்றன்
குலவியவழகின்மிக்கக் கொலுவுக்குவருகின்றானே

(வ-ம்) அகோதெப்படியென்றால் பஞ்சபாண்டவர்கள்செய்தஇராசசுயாகத்துக்குதுரியோதனாதிகள்போயிருந்தபடியினாலேஅவர்களிடத்திலேநடந்தசிறப்புகளனைத்தையுந் துரியோதனமகாராஜன்பார்த்துபொறாமையினாலேமனந்தளர்ந்து அஸ்தினாபுரம்வந்துசேர்ந்துஎவ்விடத்தினாலேயும்பாண்டவர்களைமோசஞ்செய்துஅவர்களுக்குகொடுத்தஇராச்சியத்தையும்செல்வத்தையும்பறிக்கவேணுமென்று ஆலோசனைசெய்யும்படியாய்துரியோதனமகாராசன்கொலுவுக்கு வருகிறவிதங்காண்க

துரியோதனாதிகள்வருகிற-தரு இ-ம் தோடி, ஆதிதாளம்பல்லவி

ராஜாராஜன்மகாராஜன் துரியோதன
ராஜமார்த்தாண்டன்வந்தான் கொலுவிருக்க

அநுபல்லவி:

பேசும்வீஷ்மன்னவிதுரன்சகுனிகர்னன்துற்சாதனன்
மாசிலாத்துரோணன்கிர்பன்அஸ்வத்தாமன்மெய்ப்பாய்பாய்வரராஜா

ஏகப்பூச்சக்கிரக்குடை கவிக்க
எதிரெதிர்மன்னர்கரங் குவிக்க
வாகையரவக்கொடி பிடிக்க
வைரியர்வெற்றிகளைப் படிக்க
தோகையர்வெண்சாமரம் வீச
சொற்கடிகையர்துதிகளைப் பேச
மோனமாதரால மேந்த
மொய்குழலார்காளாஞ் யேந்த
போகதேவேந்திர னென்ன
யோகராசேந்திர னென்ன
பூரிகைபேரிகைநாககுராதிகள்
நீடியவார்கடல்போலேஎழீறவே
அந்தரமின்றெதிர்கந்தர மென்றிட
முந்திய துந்துமிதிந்திமி யென்றிட
பம்பையதிர்ந்திடசங்கு முழங்கிட
இங்கிதமுடன்வெகு மங்களகரமுடன் (ராஜாதி)

கட்டியக்காரன்னெச்சரிக்கை

ஆசிரியவிருத்தம்

மணிமகுடமன்னவர்களிருபுரநெருங்கவே
மருவலர்வணங்கிவரவே

வயிசியர்கள்விருதுகள்படிக்கவேவிலேமாதர்
வரிசைநடனம்புரியவே
அணிகொண்டகுதிரைப்பெரும்படைநெருங்கவே
ஆனையின்திரள்சூழவே
அமைச்சர்களிணங்கவேபிரதானிதானைபதிக
ளங்கங்குதங்கிவரவே
பணிவிடைக்காரருந்திருவடிவணங்கவே
பார்த்திபர்வணங்கிவரவே
பாவையர்கள்வெண்சாமரங்கள்தமைவீசவே
பம்பைதுந்துமிகுமுறவே
திணிகொண்டரத்தினசிம்மாசனக்கொலுவில்
சிருடனேயரசுசெய்ய
தீரன்துரியோதனமகாராஜன்வருகிறார்
ஜெனங்களெச்சரிக்கை

துரியோதனன்-கடவுளைத்துதிக்கும்.விருத்தம்

தக்கவோரண்ட சராசரமேவையுந்தந்து
மிக்கவேயளித்துக்காக்குமேன்மைமுததொழில்நடாத்தி
பக்குவமுடையஞானபாதத்தைப்பெற்றோர்க்கெல்லாங்
கைக்கனிபோல்விளங்குங்கடவுள்செஞ்சரணம்போற்றி

துரியோதனன்சொல்-விருத்தம்,

பஞ்சபாண்டவர்களுக்குப்பாதிநாடளித்ததாலே
மிஞ்சினார்செர்வங்கொண்டார்வீரமும்பலமும்பெற்றார்
எஞ்சலில்லாதராசசூயாகமுஞ்செய்தாரின்னங்
கொஞ்சநாட்சென்றாலிந்தகுவலயமுழுதுங்கொள்வார்

(வ-ம்)கேட்டீர்களோ இராச ராசாக்களேபாண்டவர்களுக்குநா
பாதிநாடுகொடுத்தபடியினாலேசெர்வத்தினாலும்வீரத்தினாலும்செல்வ
த்தினாலுமிஞ்சிப்போனார்களொருவராலுஞ்செய்யப்போகாத இராச
யாகமுஞ்செய்தார்களின்னங்கொஞ்சநாட்போனால் இந்தஉலகமெ
லாம்அவர்களேகைக்கொள்ளுவார்கள் இனிஎன்னசெய்யப்போகிறே
ன்இராஜாக்களே

கர்ணன்துரியோதனனுக்குச்சொல்விருத்தம்

மன்னவன்தருமராச மகாராசன்சூயயாகம்
இங்கிலந்தனிற்செய்தாற்போலெவர்செய்துகீர்த்திபெற்றார்
இன்னுமங்கவர்க்கொப்பாகவொருவருமுலகிலில்லை
அன்னுமிவ்வுலகையெல்லாந்துசங்கட்டியவரேயாள்வார்

(வ-ம்)கேளுந்துரியோதன மகாராசனே தருமராசன்செய்தராச
சூயாகத்தைப்பேலஆர்தான்செய்யப்போறார்கள் அவர்களுக்குச்சாம
னம்ராகயாரைச்சொல்லலாம்இன்னஞ்சிலநாளைக்குள்உலகமெல்லாம
வர்களேயாள்வார்கள்போலத்தோற்றுதுஉங்கள்நிர்வாகமிப்படியிருந்
தாலென்னசெய்யலாம் துரியோதனமகாராசனே

சகுனி துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

ஏருழுமவனிளைத்தா லெருதுமச்சினங்கொண்டாடும்
பாரித்தேள்கொட்டாவிட்டால் பகர்பிள்ளைப்பூச்சியாகும்
சூரியசிங்கஞ்சும்மா குகைக்குள்ளேயொடுக்கங்கொண்டால்
வீரியஞ்செலுத்தியானை மேல்விழுந்தடித்திடாதோ;

(வ.ம்) கேளும் என்னுடைய மருமகனை துரியோதனமகாராசனே உழுகிறவன் இளப்பமானால் எருதுமச்சினங்கொண்டாடாதா ஒடுங்கிருந்தால்பாண்டவர்கள் அடித்ததுஆட்டந்தான்;பிடித்ததுபெண்டுதான் துரியோதனமகாராசனே.

துற்சாதனன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

செழிப்புடனவர்பெற்ற செல்வமும்புகழுங்கண்டு
பழிப்புடனீயிருக்கும் பருவமுமெண்ணிப்பார்த்தால்
வழிபடுங்கதிரோன்முன்னே வன்பகல்மழுகினாற்போல்
இழிப்படுஞ்சந்திரன்போ லிருக்குதுன்செங்கோலண்ணே.

(வ-ம்)கேளும் அண்ணாவே தருமபுத்திரர்கள்பெற்றிருக்கிறசெல்வத்தையும் கீர்த்தியையுமுன்னையும்பார்த்தால்பகற்காலத்திலேசூரியன்முன்னேமழுங்கிப்போன சந்திரன்போலிருக்கின்றதுஉன்னுடையசெங்கோல் அண்ணேஇதற்கென்னசெய்யலாம்.

துரியோதனன்-துற்சாதனனுக்குச்சொல்-விருத்தம்

ஆமிதுமெய்தான்தம்பி யடங்கினுமிருந்தோமானால்
பூமியைமுழுதுந்தர்ம புத்திரனேயரசுசெய்வான்
தாமிஷஞ்செய்தாற்பின்பு சாதிக்கக்கூடாதந்த
நேமமாமவர்செல்வம் நீக்கவோருபாயஞ்சொல்வீர்

(வ-ம்) ஆம்துற்சாதனா இனிநாம்சும்மா யடங்கியிருந்தால்பூமியெல்லாம்பஞ்சபாண்டவர்களே யாள்வார்கள் இனிநாமசும்மாயிருக்கலாகாது தர்மபுத்திராதிகளை எந்தவிதத்திலேயும் வெல்லும்படிக்கு ஒருபாயத்தைத்தேடிச்சொல்லுங்கள்பார்ப்போம்சபையோர்களே

துற்சாதனன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

குஞ்சரங்குதிரைதேராற் கொல்வதற்குபாயமுண்டு
நஞ்சினையூட்டிக்கொல்லா நமக்குள்ளேசமர்த்தருண்டு
வஞ்சனையாலேசொல்ல மாமனார்சகுனியுண்டு
பஞ்சபாண்டவரைக்கொல்ல பாரமோசொல்வாயண்ணே

(வ-ம்) கேளும் அண்ணாவே ஆனையின்பேரிலும குதிரையின் பேரிலும்ரதத்தின்பேரிலும்ஏறிக் கொல்லுகிறதற்கு அனந்தம்உபாயமுண்டு விஷங்களையூட்டிக்கொல்லுகிறதற்குநமக்குள்ளேசாமர்த்தியமுண்டுவஞ்சனை துரோகஞ்செய்து கொல்லுகிறதற்குசகுனிமாமனுண்டுபாண்டவர்களைவெல்லுகிறதுவெகுபெரிதாய்ச்சொல்லவேண்டாம்அண்ணே

கர்ணன்-துற்சாதனனுக்குச்சொல்-விருத்தம்

ஒருகணையாலேயந்த வுயர்பஞ்சபாண்டவரைக்
கருவறுத்திடசமர்த்தன் கர்ணனுனிருக்கும்போது

மருவென்னமாமனென்ன வஞ்சனைவிஷங்களென்ன
பருவமில்லாதவார்த்தை பார்த்திபன்முன்னேசொன்னாய்

(வ.ம் கேளுந்துற்சாதன மகாராசனே இந்த ஒருகணையினால்பாண்டவர்களைக்கருவறுத்துப்போட சமர்த்தனான கர்ன்ன னிங்கேயிருக்க வஞ்சனையாலும்விஷத்தினாலுஉபாயசர்ப்பனையினாலும்கொல்லலாமென் றுசாரமில்லாத வார்த்தையைஇந்தராசசபையிலேபேசலாமோதுற்சாதனமகாராசனே.

சகுனி-கர்ன்னனுக்குச்சொல்-விருத்தம்

மைக்கண்துரோபதைக்காயன்று வளைத்தவில்லடிப்பட்டங்கே
மிக்கதோள்சலித்துப்பாரில் விழ்ந்ததுமறந்திட்டாயோ
அக்கணம்விசயன்செய்த ஆண்மையைப்பார்த்திருந்து
வெக்கமில்லாமற்கர்ன்னா வீண்பேச்சுபேசலாமோ.

(வ-ம்) கேளுங்கர்ன்னமகாராசனேஒரு துரோபதைக்காகவில்லைவளைக்கப்போம்போது அந்தவில்லினாலே அடிபட்டு கீழேவிழுந்துஉதைத்துக்கொண்டது மறந்துவிட்டையா அந்தட்சணத்திலே அர்ச்சுனராசன்தன்னுடையதிராணியைச்செலுத்தினதைப் பார்த்திருந்தும் வீண்பேச்சைபேசலாமோ கர்ன்னமகாராசனே

சகுனி-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

தப்புறுபாண்டவரை சண்டையால்வெல்லநம்மால்
இப்பிறப்பிலுமாகாது யெழுபிறப்பிலுமாகாது
துப்புறுகபடவஞ்ச சூதினால்வெல்லலாகும்
ஒப்புறவிதுவல்லாம லொன்றிலும்வெல்லமாட்டோம்.

(வ-ம்) கேளும என்னுடைய மருமகனான துரியோதனமகாராசனே அந்தப்பாண்டவர்களைச் சண்டைசெய்து வெல்லநம்மாலே இப்பிறப்பிலுமாகாது இன்னமிப்படியேழுபிறப்புப்பிறந்தாலும் வெல்லக்கூடாது வஞ்சனைபண்ணிசூதினாலேவெல்லலாமேயல்லாமல்மற்றபடி ஒன்றிலும்வெல்லமாட்டோம் என்னுடையமருமகனான துரியோதனமகாராசனே

துரியோதனன்சகுனிக்குச்சொல்-விருத்தம்.

ஆமாமாமெய்தான்மெய்தானப்படிதானேசெய்வோம்
மாமாசொன்னதுவேபுத்தி மாமாவென்னருகேவாரும்
ஏமாத்திசூதினாலேயெப்படிவெல்வோம்நல்ல
சாமார்த்தியமின்னதென்று சட்டமாயுரைசெய்வீரே.

(வ-ம்) ஆஹா, ஆஹா, ஆஹா, அதுவேசரி, அதுவேசரி, தகும், தகும் அதுவேபுத்தி ஓய்மாமா என்னருகேவாரும் சூதாடி வெல்லலாமென்று சொன்னீரல்லவா அந்தவுபாயத்தைநன்றாய்த்தெரியும்படிசொல்லவேணும் என்மாமாவே.

சகுனி-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

மண்டபமொன்றுசெய்து மற்றந்தமண்டபத்தை
கண்டிடவாவழைத்துக் காண்பித்துப்பொழுதுபோக்கி
அண்டியேசொக்கட்டானை யாடுதற்கிசையச்செய்து
வண்டிநலவர்தங்கள்வாழ் வெலாங்கெலித்துத்தாரேன்

(வ,ம்) கேளும் என்னுடைய மருமகனான துரியோதனமகாராசனே புதிதாய்ஒரு அலங்காரமண்டபஞ்செய்து அதைபார்க்கும்படியாய்ப்பாண்டவர்களையழைப்பித்து அதைக் காண்பித்துப்போசனஞ்செய்தபின்பு பொழுது போகவேண்டுமென்று சொக்கட்டாடச்செய்து பாண்டவர்களைத்தோற்கடித்து அவர்கள்சேனை நாடுநகரம்பண்டாரங்களையெல்லாம்உனக்கே வரும்படியாகக்கெலித்துத்தருகிறேன் என்சமர்த்தைப்பாருமருமகனே.

பொதுவிருத்தம்.

வெற்றிசேர்கர்ன்னன்சொல்லும்வினவியதம்பிசொல்லும்
மற்றவர்சொன்னசொல்லும் மறுத்துதன்மாமன்சொன்ன
குற்றமாஞ்சகுனிசொல்லைக் குருமொழியாகவெண்ணி
கொற்றவன்துரியனாசை கொள்ளுவான்துள்ளுவானே

துரியோதனன்-சகுனிக்குச்சொல்-தரு

இ-ம்கண்டா-அட தாளசாப்பு

கண்ணிகள்

உன்னாலேயல்லோநா னுலகத்தையாள்வது சகுனிமாமா- இனி
உன்னையல்லாலெனக்குற்றதுணையுண்டோ சகுனிமாமா
என்னாலேயாகுமோ விந்தமோசஞ்செய்ய சகுனிமாமா நான்
எண்ணினெண்ணத்தை யீடேறவைப்பாயோ சகுனிமாமா
சமயத்துக்கேற்ற தருவெடுத்துச்சொன்னாய் சகுனிமாமா அந்த
தந்திரஇந்திரசாலமெவர்சொல்வார் சகுனிமாமா
நம்மைப்போலும்பாண்டவர்நாடாளலாச்சுதே சகுனிமாமா அந்த
நாடுநகரமு நாமாளவேணுமே சகுனிமாமா
சிங்காரமாயாகஞ் செய்தழைப்பித்தாரே சகுனிமாமா நாம்
செல்வமாய்கூடிக்கொண்டெல்லோரும்போனோமேசகுனிமாமா
பங்காளியென்றெண்ணி பாராமற்போனாரே சகுனிமாமாநம்மை
பத்திற்பதினொன்றாய்ப் பார்த்திருந்தார்களே சகுனிமாமா
துன்னியபாண்டவர்சின்னஞ்செய்தார்களே சகுனிமாமா அந்த
துற்சனற்கிப்போ துரைத்தனம்வந்துதே சகுனிமாமா
மன்னவனென்றெண்ணி மதியாமற்போனாரே சகுனிமாமா என்னை
மரியாதைசெய்து வணங்காதிருந்தாரே சகுனிமாமா
பஞ்சவரேவிதம் பண்ணனுமபோதாமல் சகுனிமாமா அந்தப்
பட்டிதுரௌபதைஎன்னைப்பார்த்துநகைத்தாளேசகுனிமாமா
கொஞ்சமாயெண்ணிக்குலுங்கநகைத்தாளே சகுனிமாமா அந்த
குக்கசிறியென்வெட்கங்கெடுத்தாளே சகுனிமாமா
தீயிபழிக்ககிலத்திவிருந்தேனே சகுனிமாமா அத்தை
நினைக்கநினைக்கநெருப்பாயெரியுதே சகுனிமாமா
வேலிக்குமுட்போடகாலுக்குதைக்குதே சகுனிமாமா அந்த
வெஞ்சினந்தீர்ந்திட வேளைக்கிடைத்துதே சகுனிமாமா
எத்துகளுஞ்சூதுவித்தைகளுங்கற்ற சகுனிமாமா என்னை
எப்படியாகிலும்ஈடேற்றவேணுமென் சகுனிமாமா
தத்தினைசபாண்டவர் குடியைக்கெடுத்தாலென் சகுனிமாமாஉன்னைக்

குலதெய்வமாயிலேவந்துக் கும்பிட்டிருப்பேனென் சகுனிமாமாமா
சொக்கட்டான்பாண்டவர் தோற்றிடச்செய்தால்சகுனிமாமாவுன்னை
துரையாகவைத்துநாட் சொன்னபடிகேட்பேன் சகுனிமாமா
கைக்குக்கண்ணாடியென் கண்ணுக்குக்கண்ணேயெனசகுனிஎன்னைக்
காத்தாலும்நீகரைசேர்த்தாலும்நீயேன் சகுனிமாமா

பொதுவிருத்தம்,

இப்படிதன்மனத்திலிருந்திடும் பொறாமையெல்லாம்
ஒப்புடன்துரியன்சொல்லஉளமதுமகிழ்ந்துகேட்டு
தப்புறுசகுனிமுன்னேசாற்றியமந்திரத்தை
துப்புறவெவருங்கேட்கச் சொல்லுவான்சொல்லுவானே

சகுனி-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம

மண்டபமொன்றுண்டாக்கிப் பாண்டவரை
வரவழைத்துக்காண்பித்துமகிழப்பேசி
வுண்டுமுதலானபின்புபொழுதுபோக
வொருதாஞ்சூதாடுவமென் றுரைத்தோமானால்
தண்டிவருந்தருமனும்பின் வாங்கமாட்டான்
சபைதனிற்சூதாடுதற்குச்சம்மதிப்பான்
வண்டினலாயாடியபோதென்சமர்த்தால்
வாழ்வையெல்லாமவர்தோற்க வகைசெய்வேனே.

(வ-ம்) சேளும் என்னுடையமருமகனை துரியோதனமகாராசனே நான்சொன்னபடிஒருசபாமண்டப முண்டாக்கினியேயானால்அதனை க்கண்ணும்மடியாப்பாண்டவரையழைப்பித்து போசனாதிகளசெய்த பின்புபொழுதுபோகவேண்டுமென்று ஒருஆட்டம் சொக்கட்டானுட வேண்டுமென்றால்தருமராசனும் சம்மதிப்பான் அப்போதுபந்தயம வைத்தாடுங்காலத்திலேஅவர்கள்நாடுநகரம்ஆனைசேனைபண்டிபண்டா ரம்பொக்கம் சோசனை இதுமுதலாகியதெல்லாம்வுனக்கேவரும்படியா ய்வெலித்துத்தருகிறேன்பாரும் என்சமர்த்தைதுரியோதனமகாராச னே.

துரியோதனன்-விதுரனுக்குச்சொல் விருத்தம்

மிகுவிறல்சிறியதந்தை விதுரனேநின்றுள்போற்றி
சகுனியென்மாமன்சொன்னதந்திரவுபாயத்தாலே
நகும்புகழவர்நாடுநகரமுனாமேகொள்ள
தகுந்ததுமிதுவுமக்குச்சம்மதித்தானேசொல்வீர்

(வ-ம்)சாணம்சாணம்விதுரமகாராசனேஎன்மாமனுனசகுனிசொ ன்னவுபாயத்தினாலே பாண்டவர்களுடையசெல்வத்தைநானேயனுப விக்கப்போகுதுபோலேதோணுது அது உனக்குச்சம்மதிதானேதெ ரியச்சொல்லுமையா.

விதுரன் துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

பாதிநாடளித்தபின்பு பரித்துடனினைத்துவஞ்ச
சூதினால்வெல்லவோமென்றுசொல்வதுதருமந்தானே
நீதியோநிரையோர்துயோ நச்சொல்லுசகோடியவார்த்தை
காதிலுங்கேட்கலாமோ கல்விநூனினைக்கலாமோ.

(வ-ம்)கேளுமப்பா துரியோதனபாண்டவர்களுக்குப்பாதிநாடுகொ
டுத்தோமே இப்போதவர்களை இங்கேயழைப்பித்துகபடமார்க்கமாச்
சொக்கட்டாணுடச்செய்துமறுபடியும் அவர்களுக்குக்கொடுத்துவிட்ட
நாட்டை அபகரித்துக் கொள்ளுகிறது தருமமா இதுநீதியா அரி அரி இந்
தவார்த்தையைகாதிலுங்கேட்கப்போகாது கனவிலு நினைக்கப்போகா
து துரியோதனா,

துரியோதனன்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்

சித்ரகவெனதுவாழ்வுஞ் சிறப்பையுங்கொடுத்துந்தாங்கள்
மித்ரகனிக்குந்துஷ்டவிரோதிக்குக்கொடுத்தநாட்டை
வாதாடிபறித்துக்கொள்ள மனுநீதியிருக்கமேலுஞ்
சூதாடிபரித்துக்கொண்டாற் றோஷமென்றுரைக்கலாமோ

(வ-ம்)ஆஹாநன்றாகசொன்னீர் பிழைத்துப்போகட்டுமென்றுபா
திநாட்டைகொடுத்தால் அதைவைத்துக்கொண்டு அடக்கமாயிராமல்
ஒருவராலுஞ்செய்யப்போகாத இராஜசூயயாகமுஞ்செய்யலாமாஒரு
பெண்ணாய்ப்பிறந்தவள் விரலத்தனைசிறுக்கி அந்ததுரோபதைஎன்னைபா
ர்த்துநகைக்கலாமாநான்போனால்மரியாதைசெய்யாமலிருக்கலாமா அ
ப்படிப்பட்ட துஷ்டருக்குக்கொடுத்தநாட்டை அடித்துப்பறித்துக்கொ
ள்ளவேண்டும் அப்படிச்செய்யாமல்சொக்கட்டாணுடிப்பறித்துக்கொண்
டால்இது அதர்மமா பளா பளா நன்றாச்சுது,

விதுரன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

காவானசூதுவேண்டாம் கருதினுங்கொடுத்தநாட்டை
தரவேணுமெனக்கென்றுந்தன் தகப்பனைக்கையோலைபோனால்
பரிவாகநாட்டைவிட்டு பாண்டவர்வனம்போவார்கள்
வரமாகவுலகுநீயே யொருமிக்கயாள்வாயப்பா

(வ-ம்)கேளுமப்பா துரியோதனா சொக்கட்டாணுடிவுபாயமாய்நாட்
டைப்பறித்துக் கொள்ள வேணுமென்று தேவையில்லை நாம்கொடுத்த
நாட்டைமறுபடியுங்கொடுத்துவிடச்சொல்லிவுன் தகப்பனைகையோலை
போனால்சந்தோஷமாகத்தானேநாடுநகரத்தையுங்கொடுத்துவிட்டுபாண்
டவர்கள் காட்டுக்குப்போய்விடுவார்கள் அப்பால் நீயேயிந்தவுலகத்
தையாளலாம்மற்றபடிசூதாடிபறித்துக்கொள்ளுகிறது தருமமல்ல
வே துரியோதனா.

துரியோதனன்-விதுரனுக்குச்சொல்விருத்தம்.

வாசலின்மரத்தைவைத்து வளர்த்திடமரம்வளர்ந்து
பேசவுந்தெருவிற்போற போக்கருநிழல்தந்தாற்போல
வாசமும்வாழ்வுமன்னே வஸ்திரமெல்லாமிங்கே
ஆசையுமன்புமங்கே யாகிலநீயதுவோசொல்வாம்.

(வ-ம்) கேளுஞ்சிற்றப்பா வாசலிலேநிழலிருக்கவேண்டுமென்றுமர
த்தைவைத்து தண்ணீர் வார்த்துவளர்த்தால்மரமுழுதும்வளர்ந்து வ
ளர்ந்துதெருவிற்போகிறபோக்குநிழல்கொடுத்தாற்போலிருக்கிறது உ
ன்னுடையநடத்தை அதெப்படியென்றால்உனக்குஅன்னமும்வஸ்தி
ரமுமிங்கே ஆசையுமன்புமங்கேபாண்டவாள்பேரிலே அப்படியானு

ல் இதுமாத்திரமா சொல்லுவாய் இன்னமும் அனேகஞ்சொல்லுவாய.

விதுரன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

உற்றனுஞ்சொன்னேனீங்களொருவருக்கொருவர்நெஞ்சில்
பற்றியேபகையைக்கொண்டால் பாரில்மன்னவர்நகைப்பார்
மற்றுமுன்மொழிதடுத்து வஞ்சனைசொன்னேனென்று
குற்றமுமென்மேற்சொன்னால் கூறுவதினிவேறுண்டோ.

(வ-ம்) கேளுமப்பா துரியோதனா பாண்டவர்களும்நீங்களும்ஒருவருக்கொருவர்சண்டைசச்சரவுபட்டால்மற்றராசாக்களெல்லாம்பழிப்பார்கள்நடக்கிறகாரியத்தைச்சொன்னால்சொன்ன சொல்லுங்கேளாமவஞ்சனையாகசொன்னேனென்று சொன்னால் இனிநான் வேறென்ன சொல்லப்போகிறேன் துரியோதனா.

துரியோதனன்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்.

துன்னியகபடுஞ்சூதுந் துற்புத்திதம்மமெல்லாம்
என்னிடத்தினிலேதானேயிருக்குதுமெய்தான்மெய்தான்
சொன்னசொல்மறுத்துவிட்ட துஷ்டனானதனாலே
பொன்னடிகமலம்போற்றி பொறுத்துக்கொண்டேகுவீரே.

(வ-ம்) அப்பா சிற்றப்பா அந்தமட்டிலே போதுஎன்னிடத்திலேகபடும்சூதும்துற்புத்தியும்தர்மமுங்குடிகொண்டிருக்கிறதுபெரியோர்கள்சொல்லப்பட்டவார்த்தையை தள்ளிவிடப்பட்டதுதுஷ்டதனமுமிருக்கிறது ஆகையால் என்குற்றத்தையெல்லாம்பொருத்துக்கொள்ளவேண்டும் சரணம்சரணம் எழுந்திரும் போய்வாரும் போய்வாரும்.

விதுரன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

ஆன்றதோருன்குடிக்கு அஷ்டமச்சனிபோல்வந்து
தோன்றியசகுனிமாமன் துற்புத்தியாலேயுந்தன்
என்றனன்னரசும்வாழ்வு மிழந்திடக்காலம்வந்தால்
ஊன்றியபெரியோர்வார்த்தை யுரைக்குமோவுரைத்திடாதே.

(வ-ம்) அடா துரியோதனா உன்னுடையகுடிக்கு அஷ்டமச்சனிபோல்வந்து வாய்த்தசகுனியினுடையதுற்புத்தியில் உன்னுடையசெங்கோலும்வாழ்வும்இழந்து போகுறகற்குகாலம்வந்து சேர்ந்துதானால் நல்லோர்கள்வார்த்தையுஞ்செவிக்கேறுமா ஏற்காறுமற்றதெல்லாம் அனுபவிக்கவேணும் துரியோதனா.

பொது-விருத்தம்.

விதுரனுங்கொலுவைவிட்டு வெகுண்டுமேபோனபின்பு
கதிர்முடிவேந்தனுனுங் கபடுசெய்சகுனிதானும்
சதிசெய்யுந்தம்பிதுற்சா தனனுமற்றவருங்கூடி
நிதிதருமண்டபத்தை நிர்மிக்கத்தொடங்கினரே.

துரியோதனன்-துற்சாதனனுக்குச்சொல்-விருத்தம்.

தம்பிதுற்சாதனனே தாமிஷமாயிராமல்
கம்பிதசித்திரசிற்பன் கனவிசித்திரமுந்தோய்ந்த
வம்பருமகிழத்தக்க வொருசிற்பசாரிதன்னை
நம்மிடகொலுவுக்கிப்போ கடினமாயழைப்பிப்பாயே.

(வ-ம்) அடா தம்பி துற்சாதனா இப்போதாயிஷேமாயிராமல் சிற்பசாஸ்திரமெல்லாம் நன்றாய்க்கரைகண்டவனாகிருக்கிற சிற்ப சாஸ்திரியையழைப்பியும் தம்பி துற்சாதனா

துற்சாதனன் சொல்-வசனம்.

அப்படியே யழைப்பிக்கிறேன்-அண்ணா

துற்சாதனன்-சேவைக்காரனுக்குச் சொல்-விருத்தம்.

ஆரடா சேர்வைக்காரா அதிசீக்கிரமாகவோடி
பாரடா புகழைப்பெற்ற பார்த்திபனழைத்தானென்று
சாரமாஞ்சொந்தசிற்பாசாரியையிட்சணத்தில்
சீருடன் கொலுவுக்கிப்போ சீக்கிரமாய்வரச்சொல்வாயே.

(வ-ம்) ஆரடா சேர்வைக்காரா ராஜாதிராஜனான துரியோதனமகாராஜன் அழைத்தானென்று நம்முடைய சிற்பாசாரியை இந்தசணங்கொலுவுக்குவரச்செய்யும்பிள்ளாய் சேர்வைக்காரா

சேர்வைக்காரன் சொல்-வசனம்

அப்படியே வரச்செய்கிறேன். சுவாமி

சேர்வைக்காரன் சேவகனுக்குச் சொல். கவி

மற்புயவீரா-சிற்பனையிப்போ
ஒப்புடனழைத்துக்கொப்பனவாடா

(வ-ம்) ஆரடா சேவகா சிற்பாசாரியை அதிசீக்கிரத்தில் அழைத்துவாடா

பொது விருத்தம்.

விதித்தமுன்னூலும்பூண்டு விபூதியட்சதையுமிட்டு
துதித்தநீர்காவிச்சோமன் சொகுசுடனுடுத்திநன்றாய்
மதிதகிடுஞ்சிற்பநூலு பட்டனற்பலகையேந்தி
கதித்திடுஞ்சபையில்விஸ்வக் கர்மனும்வருகின்றானே.

கட்டியக்காரன் சொல்-வசனம்

அகோ தெப்படியென்றால் இராஜாதிராஜனான துரியோதனமகாராஜன் கொலுவுக்கு சிற்பாசாஸ்திரி வருகிறவிதங்காண்க.

விஸ்வகர்மன் வருகிற-சங்காபரணம்-ஆதிதாளம்.

பல்லவி

இசையும்பாரிலெட்டுத்திசையுங்கீர்த்திபெற்ற (விசுவ

சரணம்

வேதியரெல்லோருஞ்செய்கின்றதொழில்களும்
வேள்வியும் தென்னாலே

மேதினியாள்கின்றவேந்தர்கைசெங்கோல்
விளங்குவ தென்னாலே

நீதில்லாநாலுவைசியர்களுஞ்செய்யுஞ்
சீவன மென்னாலே

திரமானசூத்திரர்யாவரும்போற்றிடும்
செல்வமு மென்னாலே

பூதலமீதில்தேவாலய மானதும்

புனல்சேர்தடாகப்பிரதிட்டைக ளானதும்
சோதிதருமாமாளிகை யானதும்
சூக்ஷாதிசூக்ஷதுரைகளுண் டானதும்
சகதெல்லா மென்றலே-உலகம்
ஈரேழு மென்றலே
தாதவிழ்மாலைகுருகுலபாண்டவர்
தப்பிப்பிழைத்திட்டதங்கிர மென்றலே
ஆதலாலுள்ளதுசொன்னேன்சொன்னேன் காணும்
ஓதினேன்பொய்யல்லவுறுதிப்பார்க்க வேணும் (விசுவ)

சிற்பன்-துரியோதனனுக்குப்போற்-விருத்தம்,

மன்னர்கள்மன்னாபோற்றி மகுடாபிஷேகாபோற்றி
கன்னல்வில்மதனாபோற்றி கண்டகர்மிண்டாபோற்றி
பொன்னணிமார்பாபோற்றி பூச்சக்கிரவர்த்திபோற்றி
என்னையிக்கழைத்தசேதி யியம்புவீர்போற்றிபோற்றி

(வ-ம்) சரணம்சரணம்இராஜமார்த்தாண்டராஜாவுந்தண்டராஜகெம்பீர தேவரீர் அடியேனையழைப்பித்த காரியம் அருளிச்செய்யவேணும்சுவாமி.

துரியோதனன்சிற்பாசாரிக்குச்சொல்-விருத்தம்

சிற்பனேகேளாய்நல்ல சித்திரவிசித்திரமாக
அற்புதமாகயாரு மதிசயப்படுவதாக
உற்பனமண்டபந்தா னென்றிங்கேசெய்யவேண்டும்
விற்பனமாகச்செய்தால் வெகுமதிசெய்வேன்பின்னாய்.

(வ-ம்)வாரும்சிற்பசாஸ்திரிஇங்கேமகாஉன்னதமாக ஒருசபாமண்டபஞ்செய்யவேண்டும்அந்தப்படிசெய்தால்உனக்கு நல்ல வெகுமதிகள்செய்வேன்பின்னாய்.

சிற்பாசாரி-துரியோதனனுக்குச்சொல்விருத்தம்

மூவருமெச்சமற்ற முனிவருமெச்சவானிற்
றேவருமெச்சவெங்கள் தேவரீர்நீருமெச்ச
யாவருமெச்சநல்ல வெழில்மண்டபத்தைச்செய்வேன்
நாவருமெனதுசிற்ப சமர்த்தைநீர்பாருஞ்சுவாமி

(வ-ம்) கேளும்சுவாமிமும்மூர்த்திகளும் முனிவர்களும்தேவர்களும் மற்றவர்களுந்தாங்களும் மெச்சும்படியாச் சபாமண்டபஞ்செய்கிறேனென்னுடையசாமார்த்தியத்தைப் பாருஞ்சுவாமி.

துரியோதனன்-துச்சாதனனுக்குச்சொல்-விருத்தம்;

அருமைதுச்சாதனனே யாசாரிமனதுக்கேற்ற
மருவியவெள்ளிபொன்னு மாணிக்கமுதலாயுள்ள
பெருநவரத்தினங்கள் பின்னும்வேணதுகளெல்லாம்
ஒருகுறைவந்திடாம லொருமிக்கக்கொடுத்திடாயே

(வ-ம்) தம்பிதுச்சாதனா சிற்பாசாரி கேட்டவெள்ளிபொன்மாணிக்கமுதலான நவரத்தினங்களும் மண்டபத்துக்குவேண்டியசாமான்களும்குறைவில்லாமல் கொடுப்பாய் தம்பி துச்சாதனா.

துற்சாதனன்சொல்-வசனம்.

அப்படியேகொடுக்கிறேன் என் அண்ணாவே

சிற்பாசாஸ்திரி-மண்டபஞ்செய்துவந்துசொல்-விருத்தம்.

செவ்வையாயுலகுசெங்கோல் செலுத்தியமன்னர்மன்னா
முவ்விதவுலகுமெச்ச முழுநவரத்தினத்தால்
ஒவ்வியசித்திரமாகஉன்னிதமிகவேநல்ல
திவ்வியமண்டபந்தான் செய்திதோமுடிந்ததையா

(வ-ம்) கேளும் இராஜாதிராஜபரமேஸ்வரா தேவரீருத்தாரப்படிக் குமகாஉன்னிதமாக சபாமண்டபஞ்செய்து முடிந்ததுசுவாமி,

துரியோதனன்-சகுனி முதலானவர்க்குச்சொல்-விருத்தம்

தந்திரசகுனிமாமா தம்பிதுற்சாதனைசூழ்
சுந்திரகர்னவீஷ்ம துரோணரேசொலவேன்கேளீர்
விந்தையாய்செய்துவந்த வியன்புறுமண்டபத்தை
புந்தியில்மகிழ்ச்சிகொள்ளப் போயுடன்பார்ப்போம்வாரீர்

(வ-ம்) கேளும்சகுனிமாமா தம்பிதுற்சாதனுகர்னராஜனே ஐயா வீஷ்மரே துரோணாச்சாரியாரேநாமெல்லோருஞ்சிற்பாசாரிசெய்த மண்டபத்தைப்போய்ப்பார்ப்போம்வாரீர் சபையோர்களே

சபையோர்-வசனம்.

அப்படியேபோவோம்-துரியோதனமகாராஜனே.

துரியோதனன்சொல்-ஓடி-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி

அதிசயத்தைப்பாரும்பாரும்-இந்த-அதிசயத்தைப்பாரும்பாரும்

சரணங்கள்.

சகுனிமாமாவிங்கே — விரும்-சிற்பா
சாஸ்திரிசெய்ததைப் — பாரும்
பளிங்கினாற்றாலுக — ளமைத்தான்-மேலே
பவழத்தாற்போதிகை — வைத்தான்
இளங்கிளிபச்சையாற — செய்தான்-அதி
னிடைக்கிடை தங்கத்தைப் — பெய்தான்
வச்சிரகொடுங்கையைச் — சேர்த்தான்-அதின்
வரம்பெல்லாம்பொன்னிரை — வார்த்தான்
உச்சிதப்பச்சையை — நுழைத்தான்-அதி
ஞேரமெல்லாமிரத்ந — மிழைத்தான்
கொத்துசித்திரவேலை — யடித்தான்-நான்
குறித்தப்படியே — முடித்தான்
இத்தனையுமெத்த — தொல்லை-நா
மிதைப்போலெங்கும்பார்த்த — தில்லை (அதிசய)

துரியோதனன்-சகுனிக்குச்சொல்-விருத்தம்,

சகுனியென்மாமசிற்பா சாஸ்திரிகெட்டிக்காரனே
புகலும்நாம்நினைத்தாய்போலப் பொருந்தமண்டபத்தைச்செய்தான்

திகழுமென் றம்பிவாடா சிற்பசாஸ்திரிக்குவேண
வெகுமதியெல்லாந்தந்து மேன்மையாயநுப்புவாயே

(வ-ம்) சேளும்என்சகுனிமாமா இந்தச்சிற்பசாஸ்திரிமெத்தகெட்டிக்காரன், நாம்நினைத்தபடியேவெகுசட்டதிட்டமாய்மண்டபத்தைச்செய்தான் அடா தம்பிதுற்சாதநா இந்தசிற்பாசாரிக்கு வேணுமென்றவெகுமதியெல்லாங்கொடுத்து சந்தோஷமாயனுப்பும்தம்பிதுற்சாதநா.

துற்சாதனன்-வசனம்.

அப்படியேகொடுத்தனுப்புகுறேன்-அண்ணே

துரியோதனன் சகுனிக்குச்சொல்-விருத்தம்

மண்டபமுடிந்தவாறு மனதினில்நினைந்தவாறும்
அண்டகப்பாண்டவாளை சூதினால்வெல்லும்வாறும்
கொண்டவன்பிதாவுக்கித்தை கூறியேயவர்கையோலை
அண்டியேபாண்டவர்க்கு வனுப்பிடவேணும்வாரீர்

(வ-ம்) சேளும்என்சகுனிமாமா நாம்மண்டபம்கட்டினதும் பஞ்சபாண்டவர்களைச்சூதினாலேவெல்லவேண்டுமென்றுநினைத்திருக்கிறதும் இதுகளைஎன்பிதாவாகிய திருதராட்டிரமகாராஜனுக்குச்சொல்லி அவர்கைப்பட ஓலையனுப்பி பாண்டவர்களை அழைப்பிக்க வேண்டுமே ஆனபடியினாலேஎன்பிதாவினிடத்துக்குப் போவோம்வாரீர்.

சபையோர்-வசனம்

அப்படியேபோவோம்வாருந் துரியோதனமகாராஜனே

துரியோதனன்திருதராட்டிரனுக்குப்போற்றிவிருத்தம்

என்னையீன்றவனேபோற்றி யென்னையாண்டவனேபோற்றி
என்னையுமுலகையாள வெழில்முடிதரித்தாய்போற்றி
என்னையிட்டேற்றவேண்டி யார்தொன்றுந்தடைசொல்லாமல்
என்னுள்ளேநினைத்துவந்த வெண்ணத்தைமுடிப்பாய்போற்றி

திருதராட்டிரன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

ஐயனேவாடாயெந்தனமுருகண்மணியேவாடா
வையகமுழுதுங்காக்கு மன்னர்மன்னவனேவாடா
துய்யதோர்குருகுலத்து துரைகள்ராத்தினமேவாடா
செய்யசெங்கோல்செலுத்துஞ் செல்வனேவாடாவாடா

(வ-ம்) மகனே துரியோதனா-ஏன்சுவாமி-உன்னுடனேகூடயார்வந்திருக்கிறார்களப்பா (ஐயா-துரோணாசாரிவந்திருக்கிறார்;) தெண்டந்தெண்டமையா-உட்காருங்கள்-வீஷ்மாசாரிவந்திருக்கிறார் சரணம்சரணமையா-உட்காருங்கள்- கர்னமகாராஜன்வந்திருக்கிறார், வாடா அப்பா எங்கள்சகுனிமாமன்வந்திருக்கிறார், அப்படியா-அப்படியா அத்தான் வாரும்வாரும், எங்களைத்தானிருக்கும்போது எங்களுக்கென்னகுறைச்சலு ஒருகுறைச்சலுமில்லையே

துரியோதனன்-திருதராட்டிரனுக்குச்சொல்,விருத்தம்.

வல்லபிதாவேசித்திர மண்டபமொன்றுண்டாக்கி
இல்லைபிப்பாண்டவாளை யெத்துசெய்தழைத்துக்காட்டி
தொல்லைசூதாடியவர் துரைத்தனம்பறித்துக்கொள்ள
ஒல்லையில்நாங்கள்கல்ல யோசனைசெய்தோமையா

(வ-ம்)கேளும்என்பிதாவே நவரத்தினகசிதமாகிய ஒருமண்டப முண்டாக்கி பாண்டவர்களை யழைத்துக்காண்பித்து சூதாடும்படியாய்ச்செய்து அவர்கள்வாழ்வையெல்லாம்பறித்துக்கொள்ளயோசனை செய்திருக்கிறேனையா

திருதராட்டிரன்-விருத்தம்

ஒசந்துபோனார்களவரொடுங்கினார்மக்களென்று
இசைந்திராப்பகலுமையோ வேக்கங்கொண்டிவயிற்றைப்
பிசைந்துகொண்டழுதுகொண்டு பிரட்டல்கொண்டரட்டைகொண்டு
அசந்துநித்திரையில்லாமலேயானுன்றவிக்கின்றேனே

(வ-ம்)அடாஎன்கட்டிமகனேபாண்டவர்கள்பேச்சுஉயர்ந்துபோச்சுதென்றுதிகில்விழுந்து ஏக்கங்கொண்டு அடிவயிற்றைப்பிசைத்துகொண்டு அழுதகண்ணீருஞ்சிந்தையுமாயிருக்கிறேன் அன்னமுண்டாகிநித்திரையுண்டாநீங்க ளிந்தயோசனைசெய்தது சரிசரி தரும்த-தும்-ஆ,ஆ,

இதுவுமவன்-விருத்தம்

உடந்தையாய்நீங்கள்செய்த யோசனைப்படிக்குத்தானே
நடந்தையேயானலிப்போ நமக்கிணையொருவருண்டோ
அடந்திடுபாண்டவரை யதோகெதியாக்கிநீயே
கடந்துலகாண்டாலெந்தன் கண்கள்வந்தாற்போலப்பா

(வ-ம்)மகனேதுரியோதனா நீங்கள்செய்தயோசனைப்படிக்கு தெய்வகடாட்சத்தினாலே அப்படியேவந்தால்உலகத்திலேநமக் கெதிருண்டாபாண்டவர்களையோட்டிவிட்டு ஒருத்தனுமே இந்தஉலகத்தையாள்வையேயானால்எனக்குப்போனகண்கள்-திரும்பிவந்தாற்போலல்லவா இந்தயோசனை ஆர்சொன்னார்களப்பாமகனே

துரியோதனன்திருதராட்டிரனுக்குச்சொல்விருத்தம்

போர்செய்வோமென்றுகர்னன் பொருந்துமென்றுரைத்தான்றம்பி
சீர்செய்யுமற்றுள்ளோருஞ்செய்யலாமென்றுசொன்னார்
கூர்செய்யுஞ்சூதாலேவர் குடியைநான்கெடுப்பேனென்று
பேர்செய்யுஞ்சகுனிமாமன் பிரமாணிக்கமாகச்சொன்னார்

(வ-ம்)கேளும்பிதாவேகர்னமகாராசன்சண்டையினால்வெல்லலாமென்றுசொன்னார்தம்பிதுற்சாதனும்மற்றபேருமப்படியேசெய்யலாமென்றுசொன்னார்கள்அதுகூடாதென்று எங்கள்சகுனிமாமன்சொன்னதுசூதினால் பாண்டவர்களைவிட்டு ஓடும்படியாய் செய்கிறனென்றுபிரமாணிக்கமாய்ச் சொல்லியிருக்கிறாரையா

திருதராட்டிரன்-சகுனிக்குச்சொல்விருத்தம்

உச்சாயப்பாண்டவரை யோட்டிவிட்டவர்கள்தன்னை
வைச்சாலுமுந்தன்பார மாய்த்தாலுமுந்தன்பாரம்
பிச்சானபிள்ளையேயென் பிள்ளையுன்பிள்ளைகாணும்
மச்சானுன்னருளிருந்தால் வையகமகனேயாள்வான்

(வ-ம்)ஐயமச்சானேநானுள்ளபடியேசொல்லுகிறேன் அந்தப்பா
டவரை ஓட்டிவிட்டுஎங்களைப்பூமியில்வைத்தாலு மூந்தன்பாரந்தா
மாய்த்தாலுமுந்தன்பாரந்தான் என்பிள்ளைகள்கள்ளங்கபடுசூதுவா
தெரியாதபிள்ளைகள் என்பிள்ளைகளல்லஉன்பிள்ளைகளெப்படியாகி
ம் இவர்களைமுன்னுக்குவரும்படியாய்ச்செய்யவேணும் அத்தானே

சகுனி-திருதாட்டிரனுக்குச்சொல்-விருத்தம்,

அத்தானுனையல்லா,உற்றுரினியுமுண்டே
இத்தாரணியெல்லாம்.எத்தாவெலவேனே

திருதாட்டிரன்துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

பெருத்ததொட்டிலையுமாட்டி பிள்ளையுங்கிள்ளிவிட்ட
திருத்தமாயிருப்பாரந்த திருடரைநம்பவேண்டாம்
வருத்தமேனசகுனிமாமன் வார்த்தையைகடந்திடாமல
கருத்துடனடந்துகொண்டாற் கடத்தேறிப்போவாயப்பா

(வ-ம்) கேளும்துரியோதனா நம்மிடத்திலே பிள்ளையையுங் கிள்
தொட்டிலையும்ஆட்டுகிறவர்போலிங்குமங்குமா யிருப்பவர்களுண்டு
ந்தத்திருடரைநம்பவேண்டாம்உன்சகுனிமாமன்சொன்னபடிநடந்
கொண்டாயேயானால்கடத்தேறிப்போவாய்மகனே.துரியோதனா.

துரியோதனன்-திருதாட்டிரனுக்குச்சொல்-விருத்தம்

மந்திரமுனிவர்சொன்ன வார்த்தையைமறந்திடாலுங்
தந்திரமாமன்சொல்லைத் தப்பேனேதடுக்கமாட்டேன்
சந்திரபாண்டவரை சுருக்கினில்வரவேசொல்லி
எந்தையேபுள்ளைகையோலை யெழுதியேயனுப்புவீரே

(வ-ம)கேளும்பிதாவே காமதானுக்கிரகசாமார்த்தியராளமகாத்து
ரக்களுடைய வார்த்தையைதடுத்தாலும்என்சகுனிமாமன்சொல்லை
டுக்கமாட்டேன்இப்போதுபாண்டவர்களைவரச்சொல்லிஉன்கைமே
லையாக எழுதியனுப்பவேணும் பிதாவே

திருதாட்டிரன்சொல்-விருத்தம்.

நல்லதப்படியாசட்டும் நாளையதினத்திற்குள்ளே
வல்லபாண்டவர்களிங்கே வந்திடச்செய்கிறேன்யான்
சொல்லுந்துற்சாதனநீ தூதனையனுப்பிவைத்து
விஸ்கினில்வலுமைபெற்ற விதுரனை வரச்செய்வாயே

(வ-ம்)கேளுமப்பாதுரியோதனா உன் சொற்பிரகாரம்நாளையதின
த்திற்குள்ளேபாண்டவர்களிங்கேவரும்படிசெய்கிறேன் அப்பாதுற்ச
தனாநீசீக்கிரமாயஒருதூதனையனுப்பிவில்வினில்வல்லவனானஎன் தம்
பிவிதுரனை யழைத்துவரச்சொல்லடாதுற்சாதனா.

துற்சாதனன்வசனம்,

அப்படியே அழைப்பிக்கிறேனையா.

துற்சாதன்சேவகனுக்குச்சொல்-கவி

பேசியவீரா, வீசியேயோடி
பூசியவிதுரா; ராசனையழைப்பாய்,

(வ-ம்) ஆடா தூதா எங்கள் சிறியதகப்பனாகிய விதுரமகாராசனையழைத்துக்கொண்டுவாடா

(சேவகன்-வ-ம்) அப்படியே அழைத்துவருகிறேனசுவாமி

திருதராட்டிரன் சொல், விருத்தம்

மக்களேசகுனியெந்தன்மைத்துனா துரியாகேளாய்
மிக்கவேயிந்தசேதி வெளிப்படப்போகுதப்பா
அக்கரைப்பாண்டவாள் வந்தகப்படுந்தனிலு நீங்கள்
பொக்கெனக்கிணற்றில்கல்லைப்போட்டாப்போலிருங்களப்பா

(வ-ம்) கேளும் என்மகனே துரியோதனா அப்பாகர்ணா அடா துச்சாதனா சகுனிமச்சானே இங்கே ஆலோசனைபண்ணினது வெளிப்பட்டால் மோசம் பாண்டவாள் நம்மிடம் கையிலகப்படுந்தன்னிலும் கிணற்றிலேகல்லைப்போட்டாப்போலிருங்கள் போய்வாருங்கள்

துரியோதனன்-வசனம்

சரணஞ் சரணம் அப்படியே போயிருக்கிறோமையா

சேவகன்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்

துதிபெறுவிதானசூரா போற்றிவிதிதருமநுவின்வேதா போற்றி
சதிர்பெறுமநநெறிதாதா போற்றி மதிமிகுவிதுரமகிபா போற்றி

(வ-ம்) சரணம் சரணம் விதுரமகாராசனே சுவாமியராக்கு

விதுரன்-சேவகனுக்குச்சொல்கவி

வீரியசூரா-காரியமென்ன
சீருடனுன்னை-யார்வரவிட்டார்

(வ-ம்) ஆடா தூதா உன்னையாரனுப்பிவைத்தார் சொல்லும்பின்னாய்

சேவகன்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்

அத்தனேகேளாயுந்த னாவிக்கப்பா தம்போற்றி
இத்திசைமுழுதும்போற்று மிலங்குமுன்றமையனான
வித்தகன்றிருதராட்டிர வேந்தனுன்னையிப்போது
மெத்தவுமாவலாக விரைவுடனேவரச்சொன்னாரே

(வ-ம்) கேளுமையா விதுரமகாராசனே ராஜாதிராஜராஜபரமேஸ்வர ராசமார்த்தாண்ட உத்தண்ட கோலாகலமான திருதராட்டிரமகாராசன் தங்களை அழைத்துக்கொண்டுவரச்சொன்னார் சுவாமி

விதுரன்வருகிற-தரு-இ-ம்-புன்னாகவராளி-மிசுரதாளம்

பல்லவி.

சத்யவிதுரராசன்வந்தான்-படை-சுற்றும்புடை-சூழ
புவிமுற்றும்புகழ்படைத்த (சத்ய)

ஒருவருமெதிரில்லா — வில்லான்-இந்த
உலகமுழுதினுமொருபொய்யுஞ் — சொல்லான்
விரகுள்ளபேர்களுமுன் — னில்லான்-மேலும்
மெய்யானபொருளல்லால் — வீண்பொருளாகல்லான் (சத்ய)

தருமத்தைமறவாத — சீலன்-ஒன்றும்
தவறில்லாநிலைபெற்ற — சாச்சனர்க்கனுகூலன்

அருமைப்புகழினில் விலாசன்-தினம்
அனைவர்க்குந்தயாளன் அப்தபரி பாலன் (சத்ய)
வந்தவன் றன்னை யெள்ளாமல்
மாயவார்த்தையென்றுமறுவார்த்தைவிள்ளாமல்-இது
சந்தேகமேதுங் கொள்ளாமல்
தமையனழைத்ததற்குத்தடைசொல்லித்தள்ளாமல்-அந்த (சத்)

விதுரன்-திருதராட்டிரனுக்குப்போற்றி-விருத்தம்

மண்ணெலாம்புகழு மகிபனேபோற்றி
கண்ணெலாமுலவாக் காண்பவனேபோற்றி
எண்ணெலாம்படைத்த விறைவனேபோற்றி
தண்ணெலாம்போற்றுமென் றமையனேபோற்றி

திருதராட்டிரன்-விதுரனுக்கு-வாழ்த்துகவி

கதிரார்முடிசேர்சதுராவாழி
மதுராமிர்தசொல்-விதுராவாழி

விதுரன்சொல்-கவி

மின்னியேநடுவேல் வேந்தர்கள்வேந்தே
மன்னிலமுதல்வர் மதிகுலவரசே
தன்னமையான சபைதனிலிப்போ
என்னையழைத்த தியம்பிடுவீரே

திருதராட்டிரன்-விதுரனிக்குச்சொல்-விருத்தம்

விதுரனேகேளாய்நீதான்விக்கினஞ் சொல்லவேண்டாம்
மதுரமாமோலையொன்று வாகுடனெழுதித்தாரேன்
இதமுடனோலைகொண்டே யிட்சணம்நீதான்சென்று
பதமுடன்பாண்டவரைப் பரிவுடனழைத்துவாராய்

(வ-ம்) கேளுந்தம்பிவிதுரா நீயாதொருதடையுஞ்சொல்லாமல்பாண்டவாள் இவ்விடம்வரும்படியாய்ஒருவோலையெழுதித்தருகிறேனதை எடுத்துக்கொண்டுபோய் பாண்டவாகளை அழைத்துவரவேணுந்தம்பி

விதுரன்-வசனம்

அப்படியே அழைத்துவருகிறேன் அண்ணாவே

திருதராட்டிரன்-இராயசக்கனக்கனுக்குச்சொல்-கவி

பொழுதுபோமுனனே தொழுதராயசனே
பழுதிலாவோலை எழுதடாநீதான்

இராயசன-வ-ம் அப்படியேஎழுதுகிறேன்சுவாமி

இராயசக்காரன்-ஓலையெழுதி-வாசிக்கும்விருத்தம்

சிரஞ்சீவிபாண்டவர்க்குச் செயங்கள்மென்மேலுமுண்டாம்
வாஞ்செறிதம்பிமார்கள் மண்டபமொன்றுசெய்தார்
நிரஞ்சனமாகவந்து நீங்களும்பார்க்கவேண்டுந்
தாஞ்செறிவிதுரனபின்னே தடையின்றிவருகுவீரே

திருதராட்டிரன்வசனம்.

ஆரடா இராயசக்காரா இவ்வோலை செந்திரிகைப்போட்டுனங்கள் தம்பிவிதுராச்சனைகயில்கொடும்பிளளாய்

இராயசக்காரன் (வசனம்) அப்படியேகொடுக்கிறேன்சுவாமி,

விதுரன்- ஓலைகொண்டுபோகும்போது- விசனப்பட்டுச்சொல்லுகிற

தரு-இ௩ம்-நீலாம்புரி-திரிபுடை-தாளம்

பல்லவி.

ஐயையோ இப்படியுஞ்செய்வாரோ துரோகம்
ஹரிஹரிவிஸதகிலோந்தக்காலா றுமோ சோபம் (ஐயை)

அநுபல்லவி

ஐயையோவிது சகுனியால்விளைந்த மூலமே
அகமிகுந்தகவுரவற்குமுடிவு காலமோ (ஐயை)

சரணங்கள்

கர்ணன் துற்சாதனன் சகுனி துரியோதனன் சூது
கருதியரவக்கொடிமுடிந்தகபட வஞ்ச மீது
சின்னஞ்சிறுபாண்டவர்க்கு இன்னங்கருத்தெரி யாது
திருவுளமேதுணையல்லால் திக்கொருவரினி யேது (ஐயை)

நத்துந்திருதராட்டிரனுக்கு நாவுதா னிரண்டோ
நமபவைத்துக்கழுத்தறுக்கும் ஞாயமெதைக் கொண்டோ
சூத்திரஞ்செய்சகுனியிதைக் குறித்ததென்ன கண்டோ
கொலைசெய்துவாழ்ந்தவர்கள் குவலயத்தின் முன்பிறுண்டோ ()

தருமபுத்திரனுக்குக்கிரக சாரமும்பொல்லாதோ
சதிகாரர்கிவினைமுன் தருமமும்நில்லாதோ
அருமையெண்ணைப்பாவிகளை யக்ரமும்வெல்லாதோ
அரசனைறுகொன்றுக்கால்தெய்வம்நின்றுகொல்லாதோ ஐயை

பாண்டவர்கள்தேசத்திற்கு-விதுரன்போகும்போது

தூதர்கள்முன்னோடி-தருமராசனுக்குச்சொல்லுகிற-விருத்தம்.

தரணியிலுதித்தோர்க்கெல்லாந் தாயகமாயிருந்து
கருணையால்குளிக்குமபஞ்ச கர்த்தனேநின்றுள்போற்றி
திருவெலாம்படைத்தவுங்கள் சிற்றப்பன்விதுராசன்
வருகிறுரையாவுங்கள் மலர்ப்பதம்போற்றிபோற்றி

(வ-ம்) சுவாமிபராக்கு உங்கள் சிற்றப்பனை விதுரமகாராசன் அஸ்தி
னபுரத்திலிருந்து தங்களிடத்திற்கு இதோவருகிறுர் சுவாமி

பாண்டவர்கள்-விதுரனுக்குப்போற்றிவிருத்தம்.

காவியக்கடலேபோற்றி கார்முகத்தலைவாபோற்றி
கோவியல்முழுதுந்தேர்ந்த குற்றமற்றவனேபோற்றி
மேவியெங்களைரட்சிக்கும் வித்தகாபோற்றிதர்ம
தேவதையாளவெங்கள் சிற்றப்பாபோற்றிபோற்றி

விதுரன்பாண்டவர்க்குவாழ்த்துவிருத்தம்

மெய்வருநீதிதேர்ந்த மிகுவிதரணரேவாழி
கைவருஞ்சிலையில்வெற்றி கண்டவீரர்களேவாழி
பொய்வருமொழிசொல்லாத புருஷவுத்தமரேவாழி
ஐவரும்வாழியெந்த னருமைமைந்தர்களேவாழி

துரோபதை-விதுரனுக்குபோற்றி-கவி

நேமாகருணைநிதியேபோற்றி-வாமஅடியார்வாழ்வேபோற்றி
பூமாதகலாப்புயனேபோற்றி-மாமாவுன்றன்மலர்த்தாள்போற்றி

விதுரன்-துரோபதைக்குவாழ்த்து-விருத்தம்

கற்பினுக்கரசேயெந்தன் கண்ணினுண்மணியேவாழி
மற்றொருமைவர்சிந்தைமகிழ்குலக்கொழுந்தேவாழி
பொற்புறுமாதர்க்கெல்லாம் பொருந்துபூஷணமேவாழி
சொற்பொருளுணர்ந்தநல்ல துரோபதைதாயேவாழி

பாண்டவர்கள்- விதுரனுக்குச்சொல்- விருத்தம்

நீதியுநெறியுநல்லநிலைமையும்நிசமுமன்பும்
ஓதுமிதெல்லாமுள்ள வுத்தமாநின்றாள்போற்றி
தீதிலாதவனேயிந்த சிறியோரைப்பொருட்டாயெண்ணி
ஏதுகாரணமாவந்தீ ரெந்தையேயுரைசெய்வீரே

(வ-ம்) கேளுமெங்கள்சிறியதகப்பனான விதுரமகாராஜனேஎங்கள்பேரில் கடாக்ஷம்வைத்துவந்தகாரியமென்னதேவரீர் சொல்லவேண்டுமையா

விதுரன்-பாண்டவர்களுக்குச்சொல்-விருத்தம்

காலரேசொல்லக்கேளீர் பாண்டுராஜனுக்குமூத்த
சீலனுன்பெரியதந்தை திருதராட்டிரமகிபன்
மேலுமுங்களையழைத்து விசைவுடன்வரவேசொல்ல
லோலையுமெழுதித்தந்தா ருள்ளடிவேறேகண்டாய்

(வசனம்)கேளும்பாண்டவர்களே உங்கள்தகப்பனுக்குமுன்மூத்த திருதராட்டிரமகாராசன்உங்களை அதிகசீக்கிரமாயழைத்துவரச்சொல்லிஓலையுமெழுதிக்கொடுத்தார் இதிலுஉங்களுக்குள்வினையும்நடந்திருக்கிறதுபாண்டவர்களே

தருமர் விதுரனுக்குச்சொல்-விருத்தம்

தகப்பனாரழைக்கநப்பதடையதுசொன்னோமானல்
நகைப்பரேயுலகிலுள்ளோர் நல்லதப்படியேபோவோம்
வகைசும்சோபனங்கள் மற்றதேதேனுமுண்டா
துகைபடவர்வேசொன்ன குட்சியையுரைசெய்வீரே

(வ-ம்)கேளும்என்சிற்றப்பனை விதுரமகாராசனேஎங்கள்பெரியதகப்பனைதிருதராட்டிரமகாராசன்வரச்சொன்னால்அதற்குத்தடைசொன்னாலுலகம்பழிக்காதா அப்படியேபோவோம்ஆகிலும்இப்போதுஎங்களை அழைப்பித்தகாரியந்தெரியசொல்லவேண்டுமையா

விதுரன்-பாண்டவர்களுக்குச்சொல்-ஆசிரியவிருத்தம்

தீசெய்யும்யாகந்தனைகுவங்கிருந்து நின்புகழ் பெருமையுங்கண்டுநெடுமுடிதுரியோதனன் கெடுசகுனி நெஞ்சினிற்பொருமையையெண்

ணி-மாசிலாப்பெரிரமண்டபஞ்செய்துமகிழ்ந்ததிற்குடிபுகுந் தினத்தில்,மை ந்தரேயும்மையதில் வரவழைத்து மாயசூதாடியே யுங்கள்தேசமுமாசுஞ்செ ல்வமும் பறிக்கதிருட்டு ஆலோசனைசெய்து, சிறந்தவுன் பெரியதகப்பனுக்கி துகள் செப்பினாவருஞ்சம்மதியாய் ஆசையாயென்னை வழைத்துநீயேபோ யவனையழைத்து வரவென்றே-படைவுனெழுதிக்கொடுத்த உன்பெரிய வப்ப ன்கையோலையிதப்பா.

தருமர்-அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்.

தொந்திரமெவர்செய்தாலுஞ் சூதுகளெவர்செய்தாலும்
தந்திரமெவர்செய்தாலுந் தருமமேசெயமென்றெண்ணி
அந்தமேமிகுந்ததம்பி யர்ச்சுனாவாடாழுத்த
எந்தையாரனுப்புமோலை யெடுத்தினைதப்படித்திடாயே

(வ-ம்) கேளடாதம்பிஅர்ச்சுனா நமக்குப் பகையாளியா யிருக்கிறபேர்கள் எத்தனை தொந்தரவுகள்செய்தாலுஞ், சூதுகள்செய்தாலும், கடாட வஞ்சனை கள்செய்தாலுந் தருமமேஜெயம் ஆகையால்அர்ச்சுனாநம்முடைய பெரியதக ப்பனார்எழுதிவரவிட்ட ஓலையை யெடுத்து வாசிடாதம்பி

அர்ச்சுனன்ஓலையைவாசிக்கும்-விருத்தம்.

சிரஞ்சீவிபாண்டவர்க்கு செயங்கள்மென்மேலுமுண்டாம்
வரஞ்செறிதம்பிமார்கள் மண்டபமொன்றுசெய்தார்
சிரஞ்சனமாகவந்து நீங்களும்பார்க்கவேண்டும்
தாஞ்செறிவிதுரன்பின்னே தடையின்றிவருகுவீரே.

தருமர்சொல்-விருத்தம்.

நன்மையும்புகழுநல்ல ஞானமுங்வள்வும்வாழ்வாம்
வன்மையுமழகுநீதி மார்க்கமுங்குலமுஞ்சீரும்
மென்மையும்விரலுமோங்கும வெற்றியுமெய்யுஞ்சார்ந்த
தொன்மையுமுடையோரய்யோ சூதாடநினைப்பதுண்டோ.

(வ-ம்) நலமும்கீர்த்தியும் தயாளமும் ஞானமும் செல்வமும் வலுமையும் அழகும்நீதியும் குலமும்சிறப்பும் பராக்கிரமமும்வெற்றியும் சத்தியமும் உ ள்ளவர்கள் சொக்கட்டான் முதலானசூதுகளாட நினைப்பார்களோ இதெ கான்னரனம் ஹரிஹரிவாசுதேவா.

பீமன்சொல்-விருத்தம்.

வசையுள்ளோர்தர்மதுஷ்டர் வஞ்சகர்மானமில்லார்
சுசிகரமில்லாயினர் சூதாடநினைப்பதல்லால்
இசையுள்ளோர்சூதமாட யிசைவரோயிதனிலுந்தான்
கசிதருசுள்ளுங்கொண்டு கள்ளையுங்குடிக்கலாமே.

(வ-ம்) பழிக்கஞ்சாதவரும் துஷ்டரும்வஞ்சனைசெய்வோரும்மானமில்லா தவரும்சதயமுமில்லாதவரும்சொக்கட்டான்முதலானசூதுகளாடநினைப்பா ர்களே இதைவிடசள்ளைச்சுட்டுக்கொண்டுகள்ளைக்குடிக்கிறது மெத்தநல்லது.

தருமர்சொல்-விருத்தம்.

பஞ்சபாதகத்திலிந்த பகடையுமொன்றேயென்று
மிஞ்சியவேதசாஸ்திர விற்பனர்விலக்கிவிட்டார்

சூ

சஞ்சலசூதுவித்தை தனக்கெதிரிருந்தேயாட
நெஞ்சினிலென்னைத்தானோ நினைப்பதுசகுனிமாமன்

(வ-ம்) ஹரி ஹரி நாராயணா செர்க்கட்டான் முதலானசூதுகள் பஞ்சபாதகத்திலே இதுவுமொன்றென்று பெரியவர்கள் தள்ளிவிட்ட இந்தசூதுவித்தையை ஆடவேண்டுமென்று நினைத்தால் தனக்கெதிராக இருந்துதன்னுடனாடுகிறதற்கு என்னைத்தானோ நினைக்கவேணடும் நம்முடையசகுனிமாமன்

அர்ச்சுனன்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்.

பொல்லாததுஷ்டரிந்த புத்தியைமனதிற்கொண்டு
மல்லாடுக்கடுஞ்சூதாட வரச்சொல்லியெழுதினாலும்
வில்லாளுமறிவினாலு மிகுந்தசித்தப்பாயிந்த
கல்லாதசிறியோர்க்குந்தன் கருத்தென்னவுரைசெய்வீரோ

(வ-ம்) நல்லதுஅந்ததுஷ்டர்தான இப்படிப்பட்டதுர்புத்தியை நினைத்து வரச்சொன்னாலும் உம்முடைய திருவுளத்துக்குச்சரியாயிருக்கின்றதாசொல்லுமையாஎங்கள் சிறியதகப்பரான விதுரமகாராஜனே.

விதுரன்-தர்மருக்குச்சொல்-விருத்தம்.

வாதாடுந்துரியனுக்குச் சகுனிக்குங்கர்ணனுக்குஞ்
சூதாடலாகாதென்று சொன்னதுகோடியுண்டு
காதாரச்சொன்னதெல்லாங் கருத்தினில்நினைத்திடாமல்
ஏதோவுன்பிதாவைக்கொண்டு வென்னையுமனுப்பினானோ.

(வ-ம்) கேளுங்கள்மக்களே துரியோதனனுக்கும் சகுனிக்கும் கர்ணனுக்கும்சூதாடுகிறதொழில்நீங்கள் நினைக்கவேண்டாமென்று அனந்தம் நீதிகளைச்சொன்னாலும்-கேளாமல் தங்களுக்குள்ளே உன்பெரியதகப்பனை திருதராட்டிரமகாராஜனுக்குச்சொல்லி அவனைக்கொண்டு எனக்குத்தெரியப்படுத்தி உங்களை அழைத்துக்கொண்டு வரும்படியாய்ச் சொன்னார்கள் அப்படியிருக்குது அவ்விடத்தில் ஆலோசனைமக்களே.

பீமன்-தருமருக்குச்சொல்-விருத்தம்.

வாவியில்வசியைகட்டி மடிந்திடச்செய்தான்முன்பு
தீவியமாளிகையில் நெருப்பிட்டுக்கொல்லப்பார்த்தான்.
மேவியசூதாலிப்போ வென்றிட நினைத்தானந்தப்
பாவிதன்முகத்தைநாமும் பார்த்திடலாமோஅண்ணே

(வ-ம்) ஆதியிலேசலத்தில் வசியைகட்டுக் கொல்லப்பார்த்தான் - மேலும் அரக்குமாளிகையில் நம்மைவைத்து நெருப்பிட்டுக் கொல்லப்பார்த்தான் அதுவும்போதாமல் இப்போது சூதாடிநம்மைப் பராதியாக்க நினைத்திருக்கிறானப்படிப்பட்டமகா பாவியான துரியோதனன் அழைத்தால்நாம்போகலாமா அண்ணாவே.

அர்ச்சுனன்தர்மருக்குச்சொல் - விருத்தம்.

வழிமறைநூல்கற்றோரு மறவுதண்ணீருமூன்று
பிழைபொறுத்திடுவதல்லாம் பின்னையும்பொறுப்பதுண்டோ
முழுதிலும்மோசம்போற முறைமைகொண்டழைத்தானந்த
வொழுவிலாப்பகைவர்தங்க ளுறவினிவேண்டாமண்ணே

(வ-ம்) கேளும் அண்ணாவே தருமசாஸ்திரமறிந்தபேரும் தண்ணீருமூன்றுபிழை பொறுப்பதல்லாமல் மேலும பொறுத்திடாது நாம் நாள்தோறும்

அவர்கள் செய்யப்பட்ட மோசத்துக்கெல்லாம் உட்படுகிறபடியினாலே இப்போதும் அழைக்கிறார்கள் அவர்களுறவும் நமக்குவேண்டாம் நாமுமங்கே போகலாகாது அண்ணாவே.

நகுலன்-தர்மருக்குச்சொல்-விருத்தம்.

விதித்தொருபாவஞ்செய்தால் மேல்தையனுபவிப்பார்
பதைத்திடாதிருந்தேயின்னம் பார்த்திடுவோமென்றாலும்
உதைத்தகாற்புழுகுமுன்னே வளப்புமேபொருக்கொணாது
மதித்தவர்நட்புவேண்டாம் வருந்துயர்நமக்குவேண்டாம்.

(வ-ம்) கேளும் அண்ணாவே அவரவர்கள்செய்த பொல்லாங்குப் பின்னாலனுபவிப்பார்களென்றாலும் உதைத்தகால் புழுக்கிறதுக்கு நாட்செல்லும்அதுதனிலும் உளப்புபொருத்து முடியாது அதுபோல் அவர்களிடத்துப் போனால் ஏதாகிலும் ஒருபொல்லாங்குவிளையும் ஆகையினால் நாமும்போகவேண்டியதில்லை ஒருபொல்லாங்கும் வரவேண்டியதில்லை அண்ணாவே.

சகாதேவன்-தருமருக்குச்சொல்-விருத்தம்.

பூனைவாயெலியும்வெங்கைப் புலியின்வாய்மானுங்காட்டில்
ஆனைவாய்த்தழையும்பொல்லா வரவின்வாய்த்தேனைப்போல
மானமும்வலுவுங்கெட்டு வையகம்யிருந்துபொல்லா
ஈனமும்வருமாமங்கே யேகவொண்ணாதுசொன்னேன்.

(வ-ம்) பூனைவாயில் யெலியைப்போலப் பதைத்தாலும் புலியின்வாய் மான்போலலைச்சலும் ஆனைவாய்த் தழைபோலக் குழைகளும் பாம்பின்வாய் தேனைப்போலமடிதலும் அநுபவிக்க வேண்டியதாய் வரும்ஆகையால் நாமங்கே போகக்கூடாது அண்ணே.

தருமர்-தம்பிமார்களுக்குச்சொல்-விருத்தம்.

எரிபடவண்டகோள மிடிந்தாலுமாழியொங்கி
பிரளயம்வந்திட்டாலும் பிதாவாக்கியந்தள்ளலாமோ
வருவதுவருமெப்போதும் வாராதுவாராதென்று
திருகொன்றுஞ்சொல்லவேண்டாஞ் சென்றுநாம்வருகுவோமே

(வ-ம்) இந்தப்பிரமாண்ட கடாகமிடிந்துவிழுந்தாலும், சத்தசமுத்திரம் பொங்கி சலப்பிரளயமானாலும் பிதாவாக்கியத்தைத்தள்ளலாமோநாம்போகாமலிருந்தாலும் வருகிறதுவரும் வாராதது வாராதுநாம் எப்படியும்போய்வருவோம் தம்பிமார்களே.

தருமர்சேர்வைக்காரனுக்குச்சொல்-விருத்தம்.

பொரிபுலிசேர்வைக்காரா புகழஸ்திணபுரிக்கு
பரிவுள்ளவிதுரன்பின்னே பயணமாய்ப்போகவேணும்
தாணியிலரசரோடுஞ் சதுரங்கசேனையெல்லாம்
விருதுபேரிகைமுழங்கி விரகுடன்வரச்செய்வாயே.

(வ-ம்) ஆரடா பொற்புலி சேர்வைக்காரா விதுரமகாராசர் பின் அஸ்திணபுரிக்குப்போகவேணும் பிரயாணபேரிகை முழக்கி சகலராஜாக்களும்ரதகஜதுரகபதாதிகளும் வரும்படியாய்ச்செய்யடா சேர்வைக்காரா.

சேர்வைக்காரன்-வ-ம்-அப்படியேசெய்கிறேன்சுவாமி.

சேர்வைக்காரன்-தருமருக்குச்சொல்-விருத்தம்.

துதிபெறுகுருகுலத்து துரைகள்ரத்னமேயுந்தன
பதுமபொற்பாதம்போற்றி பராக்குமெச்சரிக்கைசுவாமி
மதிபெறுநமதுதேச மன்னருமற்றுமுள்ள
சதுரங்கசேனைவந்து தகையொடுசேர்ந்தாரையா.

(வ-ம்) கேளும் ராசாதிராஜபரமேஸ்பராபராக்கு சகலதேசத் தரசர்களுங்
ட்வந்தார்கள் சதுரங்கசேனைகளுந் தயாராயிருக்கிறார்கள் சுவாமி.

தருமர்-அஸதினபுரிக்குவருகிற-தரு-இ-ம்-கலியாணி.

திரிபுடை-தாளம்-பல்லவி.

இராசராசன்-மதிபதிதரணியில்-மதிபதி-தர்மராஜன்வந்தானே
மாசில்லாதல்லமனுநெறிமுறையதிகுண சேகரன்
தேசுலாவிய நயகுணாரசமிலகு சுதாகரன்
வீசுபுகழ்பாண்டுபுத்திரன்வமித்திர னெவர்களும்
பேசரியமறைமத்திரன்சுபமித்திரன் பரிமள
வாசமுகுந்தன்-உருவில்மாரன்-அதிகுலசூர்பிரபலதீரன்
வரும்பிரசண்டதிண்டிறல்மநு நெறி
தருமகண்டமண்டலாபதி மக-ராச

சரணங்கள் - மருமலரின்வளர்திருமருவிநெடுமாலைகமலகரித்து நல்ல
ஒருகுலொன்ப்பிரபைதகதகெனவொளிமாமுடியைத் தரித்து
பொருதிவிருபுயமதனிலிணையுறுபுசகீர்த்தியைப்பொருத்தி நல்ல
புதியநவமணிவடமிரமதனில்புனிதமொடு திருத்தி
மருவலர்களெதிர்திறைகொடுகிடுகிடென்று தாழ
மருமகபதிகளருமையினிமருங்கு சூழ
அரிவையாகளெல்லாம்வெண்சாமரை போட
வைரிகள்பலபேர்பண்பாயிசை பாட

அம்புதிமதிக்க- தம்பியர் களிக்க வம்பனர்துதிக்க சம்பிரமதுதிக்க
அந்தரமதிர் துந்துமிகவுரிகள்-கொம்புகள் - திறையம்பைகள் , சவரிகள்
வண்டிறல்செயங்கண்டிகள் திடுகுகள்
மங்களமிகுசங்குகள் சவுரிகள்
ஆரபாரபேரிகை விர்தங்கிய
தாரைவிராபூரிகை தவண்ட
மல்லரிபலசில்லரி கருவிகள்
அலைகடலிடையெழுநெடு மொலியென
அடர்மழைமுகிலதர்தரு கலியென
அகமுமுழங்கவிருதுகள் பலர்சொல
மிகமகிழ்ந்தசுபகர குருகுல(ராச)

பாண்டவர்கள்-திருதராட்டிரனுக்குச்சொல்- போற்றி விருத்தம்.

சந்திரகுலத்தில்வந்த தயாபராபோற்றிபோற்றி
மைந்தர்மேல்கனிவுகூர்ந்த மன்னவாபோற்றிபோற்றி
விந்தைசேர்வேந்தர்க்கெல்லா மேருவேபோற்றிபோற்றி
தந்தையேயுந்தன்செம்பொற் ருளிணைபோற்றிபோற்றி

திருதராட்டிரன்-பாண்டவர்களுக்கு-வாழ்த்து-கவி.

பூவிலவரும்பூரணையசாய்
கோவியற்கைக்குவிற் குறைவிலாமையாய்
ஆவியானவென் னருமைமைந்தரே
மேவியநீங்கள் மென்மேலும்வாழ்கவே.

துரோபதை-திருதராட்டிரனுக்குப்போற்றி-கவி

பூமரதென்னம்பொறுமையுடைத்த
சேமமாயிந்தநிலம்புகழ்வெற்றி
தாமாயார்க்குத்தலைவாயந்தன்
மாயாயுர்தன்மலர்த்தாள்போற்றி.

திருதராட்டிரன்-துரோபதைக்கு வாழ்த்து-கவி.

அருமையுமறிவுமன்பும்-ஒருமையுமிகவுமுள்ள
தருமகள்கிராதான-மருமகளேநீவாழி

திருதராட்டிரன்-பாண்டவர்களுக்குச்சொல்-விருத்தம்.

வழுவிலாவரசுநலல வலுமையும்வாழ்வுஞ்சீரும்
அழகுடன்பெற்றிருக்களலங்காரசம்பிரமத்தை
தழுவுமென்தம்பியுங்கள் தந்தையாம்பாண்டுராசன்
பழுதறக்காணும்வாரும் பாக்கியஞ்செய்திலேனே

(வ-ம்) கேளுங்கள்மக்களே உங்கள்தூரத்[illegible]த்தையும் பராக்கிரமத்தையும்செல்வத்தையும் அழகையும் உங்கள்பிதாவான என்தம்பி பாண்டுராஜன்கண் களிக்கபார்த்து சந்தோஷப் படுகிறதற்கில்லாமல் போச்சுதே அதுதான் எனக்கொருகுறை பின்னொருகுறைவுமில்லை மக்களே.

தருமர்-திருதராட்டிரனுக்குச்சொல்-விருத்தம்.

தாயவிர்க்குமிழிவானில் தோன்றியமின்னல்போலும்
மாயுமிவ்வுடலமென்றால் வருந்துவதினியேதையா
தாயுமாதந்தையாக தருமமாநீயிருக்க
சேயராமெங்களுக்குச் சிந்தையிற்குறைவேறுண்டோ.

(வ-ம்) கேளும் எங்கள் பெரியதகப்பனாரான திருசாட்டிர மகாராஜனே எங்கள் வைபோகத்தையெல்லாம் எங்கள்தகப்பனாகிய பாண்டுமகாராஜன் பார்க்கிறதற்கில்லாமற் போச்சுதென்று சொல்லவேண்டிய தில்லைசகலத்துக்கும்நீரோதாயுந் தந்தையாயிருக்க எங்களுக்குவேறொரு தாழ்வுண்டோபிதாவே.

திருதராட்டிரன்-பாண்டவர்க்குச்சொல்-விருத்தம்.

மனமகிழ்தம்பிமார்கள் மண்டபமொன்றுசெய்தார்
கனமிகநீங்கள்வந்து காணவேவேணுமென்று
நினைவுகொண்டழைத்தேனப்பா நீங்களும்வந்துவிட்டீர்
இனிதுடனவரும்நீருமிஷ்டமாயிருங்களப்பா.

(வ-ம்) கேளுங்கள் என்னுடைமக்களான பாண்டவர்களே உங்களைக்காணகிறதற்கு எனக்குக் கண்ணில்லாமற்போனாலும் உங்கள்வசனத்தை யாகிலும்இந்தகாதிலேகேட்கிறதற்கு எனக்கு ஆசையாயிருக்கிறது அதுவுமல்லாமல்உங்கள்தம்பிமார்கள் ஒருமண்டபஞ்செய்தார்கள் அதைநீங்கள்பார்க்கவேணுமென்கிற ஆசையாயழைப்பித்தேன் கண்டுகேலக்குபேசி ஒருமைபாயிருக்களப்பா மைந்தர்களே.

வளருசெழுமுங்கள்வரவுகண்டோன் - உளங்களிகூர்ந்தன னருமை மைந்தரோ- விளங்கியதாயையும் வீஷ்மர்தம்மையுங் -களங்கமில்லாமற்போய்கண்டுகொள்வீரோ.

(வ-ம்) என்பிள்ளைகளைப்பார்க்கிலும் இஷ்டமான பிள்ளைகள் இங்கேவந்துவிட்டீர்களே அதுவேபோதும் வீட்டிற்குப்போய் உங்கள்தாயார் காந்தாரியைமுன்னேகண்டு கொள்ளுங்கள் பீஷ்மர் துரோணர் முதலானபேரையுங்கண்டு கொள்ளுங்கள் போங்கள் என்னுடைசைமக்களே.

பாண்டவர்கள்-வசனம்.

அப்படியே கண்டுகொள்கிறோம் பிதாவே.

பாண்டவர்கள் - காந்தாரிக்குப்-போற்றிகவி.

வயமிகுவரசர்வாழ்கவேபோற்றி-ஜெயமிகுகமலத்திருவேபோற்றி
வியமிகுமுலகவிளக்கேபோற்றி-செயமிகுபெரியதாயேபோற்றி.

காந்தாரி-பாண்டவர்களுக்குச்சொல்- விருத்தம்.

பன்றியானது நான்சும்மா பலகுட்டிப்போட்டாப்போலே
கன்றிட நூறுபிள்ளை கணக்குடன்பெற்றேனப்பா.

(வ-ம்) பன்றியானது பலகுட்டிப்போட்டாப்போலே கணக்குக்கு நூறு பிள்ளைகளைப்பெற்றேன் ஒன்றுக்காகிலும் புத்தியுண்டாதிறமையுண்டாசௌரியமுண்டா தாஷ்டீகமுண்டா உங்களைப்போல கீர்த்திபெற்றதுண்டாஆகுபேப்பாகெட்டேனே ஏதாகிலுமுண்டா அதுஎன்வயிறுசெய்தகொடுமை எப்படியாகிலும் நீங்கள்நன்றாக இருங்களப்பா.

துரோபதை-காந்தாரிக்குச்சொல்-விருத்தம்.

இ-ம்,வசந்தபைரவி.

திறவுடன்திறமுமிக்க செல்வமுஞ்சிறப்புஞ்சீரும்
பொருவிலாவளவுகல்ல புத்திரபாக்கியமும்பெற்று
ஒருவருமிணையிலாத வுத்தமியென்றுசொல்லும்
மருவியபெரியமாமி மலர்ப்பதம்போற்றிபோற்றி.

காந்தாரி-துரோபதைக்குச்சொல்-விருத்தம்.

எருமைகள்கூட்டம்போலெனக்குவாய்த்திடு
மருமகட்பெண்களென் மக்கட்கேர்வையோ
ஒருமையாயுன்னைப்போலொருபெண்காண்கிலன்
எரியுதுயென்செய்வே னெழுந்திராய்பெண்ணே.

(வ-ம்) எருமைக்கூட்டம்போல இத்தனைபேர் மருமக்களிருந்தும் என்னத்துக்காச்சு தொருநாதிக்காவது ஒருசித்துவித்தைகள் தெரியுமா உன்னைப்போலமருமக்கள் ஒருத்தி இல்லாமற்போனாளே பெண்ணே நெஞ்சு எரியுது என்னசெய்வேன் எழுந்திரம்மா எழுந்திரு,

தர்மர்-துரோபதைக்குச்சொல்-விருத்தம்.

மங்கைதுரோபதையேயுந்தன் மாமியாரிடத்திற்றானே
சங்கையில்லாயல்நீதான் சதிருடகருணதையாலை

துங்மாம்பீஷ்மர்கிர்ப்பர் துரோணரைமற்றுள்ளோரை
பொங்கமாய்பணிந்துபோற்றி பொருந்தவேவருகுவோமே.

(வ-ம்) கேளும் பெண்ணே துரோபதிநாங்கள் வீஷ்மர் துரோணர்கிருபாச்சாரியர்[illegible]க் கண்டுவருகிறோம் அதுவரையிலும் உங்கள் மாமியாரிடத்தி லிருப்பாய் பெண்ணே.

துரோபதிசொல் - வசனம்.

அப்படியே-யிருக்கிறேன்-சுவாமி.

துரியோதனன் சேர்வைக்காரனுக்குச்சொல்-விருத்தம்.

திண்டிறல்சேர்வைக்காரா சீக்கிரமாகவோடி
மண்டபந்தன்னைப்பார்க்க வரச்சொன்னேனென்றுசொல்லி
எண்டிசைபுகழுகின்ற எழிற்பஞ்சபாண்டவாளை
கொண்டயிக்கொலுக்கிப்போ கொப்பனவழைத்துவாடா

(வ-ம்) ஆடாசேர்வைக்காரா இந்திரபிரஸ்தத்திலே யிருந்துவந்த பாண்டவர்கள் ஐந்துபேரையும் இந்தமண்டபத்தைப் பார்க்கநானழைத் தேனென்றுசொல்லி சீக்கிரமாக யழைத்துவாடா சேர்வைக்காரா.

சேர்வைக்காரன்சொல்-வசனம்,

அப்படியேயழைத்து வருகிறேன்சுவாமி.

சேர்வைக்காரன் - தர்மருக்குச்சொல் - விருத்தம்,

மன்னர்கள்மன்னுபோற்றி மனுமுறைதெரிந்தாய்போற்றி
தன்னிகரில்லாபோற்றி தர்மபூபாலாபோற்றி
பொன்னின்மண்டபத்தைப்பார்க்கப் பொருந்தியுங்களையிப்போது
நன்னயராஜராஜனைலமுடன்வரச்சொன்னரே.

(வ-ம்) இராஜாதிராஜ ராஜபரமேஸ்வரா ராஜமார்த்தாண்டசத்ரியராஜேந்திரா சத்தியபிரபுடீக சத்தியபரிபாலகா தர்மபுத்திர மகாராஜனே சுவாமி பராக்கு துரியோதனமகாராசன்உங்களை அழைத்து வரச்சொன்னார்சுவாமி.

தருமர்(வ-ம்)அப்படியேவருகிறோம்பின்னால்.

தருமருந்-துரியோதனனுந்-தழுவிக்கொள்ளும்-விருந்தம்.

திருவருளுலகமூன்றுந் திறமுடன் றதித்துப்போற்றி
தருமபுத்திரனேயென்தன் தமயனேசரணம்வாரும்
பெருமையும்புகழும்வாழ்வும் பெருந்துரியோதனுவுன்
அருமைசேர்தம்பிமார்க ளனைவரும்நீயும்வாழி.

துரியோதனன்-தருமருக்குச்சொல்-விருத்தம.

வழுவுறவுங்களுக்கு மயனென்றுதெய்வதச்சன்
தழுவுறச்செய்ததந்த சபையிலுமதிகமாக
செழுகவரத்தினத்தாற் சிறக்கநான்செய்துவைத்த
அழகியமண்டபத்தி னலங்காரம்பாராயண்ணே.

(வ-ம்) கேளும் அண்ணுதர்மபுத்திரரே முன்னுலேஉங்களுக்கு மயனென்னுந்தச்சன்செய்துகொடுத்த சபையைப்பார்கிலும் அதிகஉன்னதமாகச்செய்துவைத்தேன்இந்தமணடபத்தினுடையஅலங்காரத்தைப்பாராய் அண்ணே

தருமர்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

சுந்தரமிகுந்ததம்பி துரியோதனநீகேளாய்
அந்தமாமண்டபத்தி னனேகம்பேர்பார்த்ததுண்டு

விந்தையிதென்னசொல்வேன் விளங்குமுவுலகந்தன்னில்
இந்தமண்டபத்தைப்போலே யெங்குநான்கண்டிலேனே.

(வ-ம்) தம்பிதுரியோதனநான் அனேகமண்டபங்களைப் பார்த்திருக்கிறேன்ஆனாலிந்த சொர்க்கமத்தியபாதாள திரிலோகத்திலேயும் இப்படிப்பட்ட உன்னதமானமண்டபத்தைநான் எங்குங்கண்டதில்லை வெகுலட்சணமா யிருக்கின்றது தம்பிதுரியோதனா.

சகுனி-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

நூதனமாகச்செய்து நுட்பமாயலங்கரித்து
சோதிசேர்மண்டபத்தில் துரைமக்கள்வந்துகூடி
போதவேமகிழ்ச்சியாகப் பொழுதுபோம்படியாயிங்கே
ஏதொருகாலட்சேப மில்லாமலிருக்கலாமோ.

(வ-ம்) கேளும் என்னுடைய மருமகனான துரியோதனா இந்த அலங்காரமண்டபத்திலே எங்களைப்போலொத்த துரைமக்க ளெல்லாம் வந்து கூடிச்சும்மாயிருக்கிறது நன்றாயிருக்கவில்லை பொழுதுபோகும்படியாய் ஏதாகிலும் ஒருகாலட்சேபம் பண்ணவேணுங் காணும் துரியோதன மகாராஜனே, துரியோதன்-தருமருக்குச்சொல்-விருத்தம்.

ஆமிதுமெய்தான்மெய்தா னண்ணனேகேளொருவிண்ணப்பம்
நாமெல்லாம்போசனத்துக் கெழுந்துபோந்தனிலுமிங்கே
மாமனுநீயுமாக மகிழ்ச்சியாயெதிரிருந்து
தோமரவேயோராட்டஞ் சொக்கட்டானாடுவீரோ.

(வ-ம்) ஆ-ஆ-மெய்தான்மெய்தான் மாமாசபாசு நன்றாய்சொன்னீர்நன்றாய்ச்சொன்னீர் அண்ணா தர்மபுத்திர மகாராஜனே நாமெல்லோரும்போசனத்துக்குப் போகுமுன்பாக மாமாவும் நீயும்ஒரு ஆட்டம்சொக்கட்டான்போடுங்களண்ணே.

தருமர்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம.

வேதநூலிருக்குஞானம் விளங்கநூலிருக்கநல்ல
நீதிசாஸ்திரமிருக்க நிபுணர்கள்பலரிருக்க
நூதனமாகச்செய்த நுவலுமிம்மண்டபத்தில்
சூதினைமடையர்செய்யுந் தொழிலையோசெய்யவேணும்.

(வ-ம்) கேளுந்தம்பிதுரியோதனா வேதங்கள் சாஸ்திரங்கள் மனுவிக்கியானங்கள் இதுமுதலான தர்மசாஸ்திரங்களிருக்க இந்த அலங்காரமண்டபத்தில் முதல்முதல் புத்தியில்லாதவர்க ளாடப்பட்ட சொக்கட்டா னாடவேணுமாவேறேயொரு தொழிலில்லையா தம்பிதுரியோதனா.

பீமன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

சண்டையும்பகையும்யாருஞ் சாற்றியபிழையும்பொய்யும்
கண்டிதமொழியும்பொல்லாக் கவலையுங்குடியிருப்பார்
கொண்டினசூதுவித்தை கொற்றவர்கூடாதேயிந்த
மண்டபந்தன்னிலின்ன மற்றொன்றைச்செய்யலாமே.

(வ-ம்) சண்டைக்கும் பகைக்கும் அசத்தியத்திற்கும் பொய்க்கும் சோபதத்துக்கும் ஏதுவாயிருக்கப்பட்ட இந்தசொக்கட்டானை இங்கேஆடவேணும் அதுஇராஜசபைக்கு யோக்கியமல்ல வேறேயொரு காலட்சேபஞ் செய்யலாம் துரியோதனராசனே.

அர்ச்சுனன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

மனதினிலொன்றைவைத்து வாக்கினிலொன்றைப்பேசி
தனிவருந்துரோகஞ்செய்வோர் சூதாட்டினைப்பதல்லாம்
றனதுபாராட்டிதம்பி தமையனென்றொருமையுளோர்
கனவிலுஞ்சூதமாடக் கருத்தினினைந்திட்டாரோ.

(வ-ம்) கேளுந்துரியோதனா மனதில் ஒன்றைநினைத்து வாக்கிலொன்றைச்சொல்லிஒருவருடையபொருளை அபகரிக்க வேண்டுமென்று நினைக்கப்பட்டசாமத்துரோகிகள் அந்தச்சொக்கட்டாடுவார்களேயல்லாமல்தன்தாய் அண்ணன் தம்பிகளென்று ஒருமையாயிருக்கப்பட்டவாகள்ஒருக்காலும் இந்தசூதாட்டலை நினைக்கமாட்டார்கள் துரியோதனா.

தருமர்துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

மனத்தில்வஞ்சனைநினைந்த மாமனையெதிரியாக்கி
சினத்சூதாலேயெங்கள் செல்வத்தைப்பறிக்கலுற்றாய்
நினைத்துநீயெதுகேட்டாலும் நிமிஷத்தருவேனிந்த
அனர்த்தமாஞ்சொக்கட்டானை யாடுவதொழிதிடாயே.

(வ-ம்) கேளுந்துரியோதனா சகுனிமாமனை எனக்குஎதிரியாக்கிக்கொண்டுசூதாடி எங்கள்செல்வத்தைப்பறித்துக்கொள்ள வேண்டியதில்லை நீயெதைக்குறித்துக்கேட்டாலும் தடையில்லாமல்நான் தருகிறேன் இந்தச்சூதாடுகிறதை நிறுத்தவேணுந்தம்பி துரியோதனா.

சகுனிதர்மருக்குச்சொல்-விருத்தம்.

சுந்தரமாயோராட்டஞ் சொக்கட்டானாடச்சொன்னால்
சிந்தையினடுநடுங்கி திகைப்பட்டநீசாருமேல்
புந்தியினினைந்துகெட்ட பொருளெல்லாந்தருவேனென்றாய்
பந்தமாய்நீகொடுக்கும் பவுசிதாந்தெரிந்துபோச்சே.

(வ-ம்) கேளுந்தர்மராஜனே ஓராட்டஞ்சொக்கட்டானாடுவோமென்றுசொன்னமாத்திரத்தில் பயந்து நடுநடுங்கி திகிதிகிர்பிடித்து கழகழவழவழபசபசவென்று முழிக்கிறீர்தானே துரியோதனமகாராஜன்கேட்டதெல்லாங்கொடுக்கப்போகிறாய் நீகொடுக்கப்போகிறபவுசு இதிலேதெரிந்துபோச்சுதேபோ-போ-ஆ-ஆ-சமயபத்திரமகாராஜனே.

கர்னன்-தருமருக்குச்சொல்-விருத்தம்.

கதித்தசூதாடிவெல்லக் கையிலாகாதநீதான்
எதிர்த்தபோர்க்களத்தினின்று யானைநீவெல்லப்போதீர்
விதித்ததம்பியருநீரும்விலவிலத் தாளறிக்கொண்டு
பிதத்துதீர்விட்டுவிட்டோம் பிராணனைக்காத்துக்கொள்வீர்

(வ-ம்) கேளுந்தர்மராஜனே சொக்கட்டானாடி வெல்லுகிறதற்குக்கையிலாகாத நீர்போர்க்களத்தில் நின்றுயானை வெல்லப் போகிறாய் அது வெளிச்சந்தான் இவ்வளவுக்கே உன்தம்பிமாரும்நீயும் விலவிலத்துக்கலகலத்திகிடென்று நடுநடுங்கிமுன்பின்தோன்றாமல் பினத்துகிறீர்கள்கல்லது உங்களைவிட்டுவிட்டோம் நீங்கள் அடங்கலும்உங்கள்பிராணனைகாப்பாற்றிக்கொள்ளும் போங்கள் போங்கள்.

அர்ச்சுனன்-கர்ணனுக்குச்சொல்-விருத்தம்.

வஞ்சனை நினைத்தழைத்து மாயசூதாடச்சொல்லி
கொஞ்சமொன் றிகழ்ச்சிசெய்து குதிக்கிறாய்யடாகர்ண
நஞ்சினையிகழ்ச்சிசொன்ன நாகனையுமறுத்துவுந்தன்
நெஞ்சினைப்பிளந்துவெட்டி நினைக்குடலெடுப்பேன்பாராய்.

(வ-ம்) கேளடா அடா கர்ண கபடமார்க்கமாக வெங்களை அழைப்பித்துவஞ்சூதாடச்சொல்லி யிகழ்ச்சிபேசுகிற உன்னுக்கையறுத்துநெஞ்சைபிளந்து நினைக்குடலெடுக்கிறேன் இதோஅஸ்திரம் வருகின்றது இதைத்தடுத்துக்கொள்ளடா.

தர்மர்-அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்.

அடுத்தடுக்கென்சொன்னாலும் அடா தம்பியர்ச்சுனகேள்
பொறுத்தவர் பூமியாள்வார் பொறுமைபொறுமையகற்றவேண்டாம்
சடுத்தாகாம்சொல்வதென்ன தருமமேஜெயமென்றெண்ணி
பொறுத்திடுமாமன்னோடே போராட்டமாடுவோமே.

(வ-ம்) கேளடாதம்பி அர்ச்சுனா பொறுத்தவர் பூமியாள்வார்பொங்கினவர்காடாள்வா ரென்றவார்த்தைநீகேட்டதில்லையா அவர்கள்தான் அதர்மம்பண்ணினாலும் இகழ்ந்தும்பேசினாலும் உனக்குக்கோபம்வரலாமா பொறுபொறு பற்றுதகாரியஞ்சேருது நல்லது தருமமேஜெயம் ஒரு ஆட்டந்தான்போடுவோம் திருவுளமிருக்குது.

துரியோதனன்-தர்மருக்குச்சொல்-விருத்தம்.

இதுசரிகன்றாய்ச்சகசன் நீ நின்றன்னைமெச்சிக்கொண்டேன்
சதிசெய்வென்னன்றுசொல்லி சற்றுநீயஞ்சவேண்டாம்
நிதியில்நீகேற்றதெல்லாம் நீதானேகொடுக்கவேணும்
பதிபிலெனமாமன்தோற்ற பந்தயம்நானேதாரேன்

(வ-ம்) இதுவேசரிசபாசு இப்படியல்லவோ துணியவேணும் அண்ணைதர்மபுத்திரா இப்போதுநானுன்னைமெச்சிக்கொண்டேன்முன்னே நானேசமதிக்கலாகாதா மாமனாலுந்தனும்போல்இருக்கிறஅண்ணன்தம்பிகளுக்குள்ளே ஏதாகிலுமொரு வஞ்சனைநடக்குமா நடக்காது ஆனால்நீர்தோற்றதேயுண்டானால் நீரேகொடுக்கவேணும் என்மாமன் தோற்றபொருளை நானேகொடுக்கிறேன்போடுங்கள்பார்ப்போம்.

தர்மர் சகுனிக்குச்சொல்-விருத்தம்.

எந்தனுக்கெதிரியாக யிருந்திந்தகெடுசூதாட
சொக்கமாய்வாயுங்கையுந் துடிக்கின்றசகுனிமாமா
விக்கையாய் நூறுகோடி விலைபெற்றமுத்துமாலை
பந்தயமாய்க்குறித்து வன்புடன்வைத்தேன்பாராய்.

(வ-ம்) என்னுடனேகூட சொக்கட்டாடுகிறதற்கு வாயுங்கையுந்துடிக்கின்ற சகுனிமாமா இதோ நூறுகோடிபொன்பெற்ற முத்துமாலை இதைப்பந்தயமாய்க்கட்டிவைத்தேன்பாரும்.

துரியோதனன்-தர்மருக்குச்சொல்-விருத்தம்.

சாங்கமாங்குணத்தின்மிக்க தர்மபுத்திராகேளாய்
வேங்கையென்மாமனைக்க வேண்டும்பந்தயத்துக்காக

போர்த்திடுநூறுகோடி பொன்பெற்றவலயமித்தைப்
பார்த்தமாயெவரும்பார்க்கப் பந்தயம்வைத்திட்டோராய்.

(வ-ம்) கோளாய் அண்ணேதர்மபுத்திரரே என்சகுனிமாமனை வைக்க வேண்டியபந்தயத்துக்காக இதோநூறுகோடிபொன்பெற்றவொருவலயத்தைஎதிர்ப்பந்தயமாகவைத்தேன் இதோபார்த்திராஜேதோபாரதத்திர.

முதலாட்டஞ்சொக்கட்டானுடுகிறது.

தருமர்சொல்- தரு-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

ஸ்ரீகிருஷ்ணஹரிகிருபை ... யாலா-யுந்தன்
செயலெல்லாமோ-திரு ... நினைவாலா- (ஸ்ரீகிரு)

தர்மருக்குவிழுந்தபந்தயத்தை சகுனிசொல்லிய-வசனம்.

ஓய்தருமராஜாவேமுனைத்தொண்ணூறுமுதல்முதல் விழுந்தபடியினாலேஉம்முடஆட்டந்தோற்றுப்போகும் நான்போடுகிறேன்பாரும்.

சகுனிசொல்-தரு.

ஓடிவாடாகுட்டிச் ... சாத்தான்-எங்கள்
உருட்டுக்கும்பிரட்டுக்குமஉதவிசெய்காத்தான் (ஓடிவா)

வசனம்-பன்னிரண்டு-சமபத்து-காய்வைத்திடுகு

தர்மர்சொல்-தரு.

சத்தியமேதுணை-தர்மமேஜெயம்.

சத்தியமேதுணையென்றுந் தர்மமே ... ஜெயமென்றும்
உற்றுநினைத்தபேர்க்குவுண்டோ வுண்டோ ... லயம்(சத்தி)

வசனம்-நாலுத்தோரஞ்சு.

சகுனிசொல்-தரு.

தந்திரமேதுணையென்றுஞ்சமர்த்தே ... செயமென்றும்
இந்திரஜாலங்கற்ற எனக்கென்னமே ... லயம (தந்தி)

இதுவும்-சகுனிசொல்-தரு.

அக்கிரமந்துணையென்றும-அவர்க்கு ... ஜெயமென்றும்
தக்கவித்தைகளகற்ற சகுனிக்கென்ன ... பயம்(அக்கி)

வசனம்-இருபகடை- பன்னிரண்டு- எட்டு- இருககால்-ஒன்பது.

தருமர்சொல்-தரு.

பதறுமலேபாடுங்காணும் ... மாமா
பதறுமலேபாடுங்காணும்
பதறுமற்பாச்சிகைபக்குவமாய்ப் ... போட்டு
பந்தயம்விழுந்ததைப்-பார்த்தாடவேணும் ... (பத)

வசனம்-நாலுமூணேழு.

சகுனிசொல்-தரு.

சுறுக்காகத்தானுடவேணும் ... ஆட்டம்
சுறுக்காகத்தானுடவேணும்
சுறுக்காகப்பாச்சிகை வெறுக்காமலே ... போட்டு
கிறுக்காகவேபாடு குறுக்காகப் ... பேசாதே(சுறுக்)

வசனம்-இரண்டெட்டு-இரண்டுதாயை-சம்பத்து

தர்மர்சொல்-தரு.

விழுபன்னிரண்டொருபத்து ஆ-ஆ
விழுபன்னிரண்டொருபத்து
விழுபன்னிரண்டொருபத்துவிழுந் தாக்கால்
முழுதுங்குங்குமக்காயால் முன்னேகட்டலாஞ் சோடு (விழு)

வசனம்-மூணத்தொண்ணு.

நான்கட்டுவேன்முன்னேசோடு தம்பி
நான் கட்டுவேன்முன்னேசோடு
நான்கட்டுவேன்முன்னே நமக்குண்டோ ஈடு
நான்கட்ட குங்குமக்காயை ரெண்டையுங்குத்தி (நான்)

வசனம்-இருக்கால்-பன்னிரண்டு-ஒன்பது

பத்துபகடையும்வேணும் இப்போ
பத்துபகடையும்வேணும்
பத்துடனேயொருபகடையும் விழுந்தாக்கால்
குத்தினகாய்கட்டுகுங்குமங் க[illegible]டலாம் (பத்து)

வசனம்-நாலத்தோரஞ்சு.

கட்டினசோடுபெறவேணும் இப்போ
கட்டினசோடுபெறவேணும்
கட்டினசோடுபோந்துக காயுமொயில் போட்டு
வெட்டிக்குங்குமகுத்தி லட்டுபெயோடவே வேணும் (கட்)

வசனம் இரண்டுபன்னிரண்டு-பத்து.

தர்மர்சொல்-தரு.

என்கையிற்பந்தயம்காணும் மாமா
என்கையிற்பந்தயம்காணும்
என்கையிற்பந்தயமேனுவிழக் காணும்
முன்கையிலாறுரெண்ணுமூணத்தோ னல்லாமல் (என்)

வசனம்-ஆறுரெண்ணெழு.

சகுனிசொல்-தரு,

பன்னிரண்டுதுகைபெட்டுவேணும் ஒரு
பன்னிரண்டுதுகைபெட்டுவேணும்
பனிரெண்டுதுகைபெட்டுபந்தயம்விழுந் தாக்கால்
பலிக்குங்குமகாட்டங்கெலிக்கு மொரு(பனி)

வசனம்-இருக்கால்-துகை-பனிரெண்டு-எட்டுபத்து.

சகுனியுந்துரியோதனனும் சந்தோஷப்பட்டுச்சொல்-விருத்தம்.

என்னுசைமருமகனான எழில்துரியோதனனேகேள்
மன்னனாதர்மர்முத்து மாலையைநான்கெலித்தேன்
சொன்னனமாமாவுன்னைப் புகழ்ந்திடவென்னலாமோ
முன்னாவலக்கைதாரு முத்தனென் தருகுவேனே.

(வ-ம்) ஆ-ஆ-என்னுசைமருமகனான துரியோதனமகாராஜனேதர்ம ராஜன்பந்தயமாகவைத்த முத்துமாலையை நான்கெலித்தேன்.

ஆ-ஆ-சகுனிமாமா உன்சாமார்த்தியத்தை என்னவென்றுசொல்லி முடிப்பமாஏதோஉமது வலக்கையைத்தாரும்ஒருமுத்தங்கொடுக்கிறேன்,

சகுனி-தர்மருக்குச்சொல்-விருத்தம்,

மதியுள்ள தர்மபுத்திரா மனதுநீ தளரவேண்டாம்
முதல்முதல்தோற்றவேர்கள் முற்றிலுங்கெலிப்பாருத்தன்
ரதகெஜதுரகசாதி நகரதனைக்குறித்துமேலும்
இதமுடனினியோராட்ட மின்னமுமாடுவோம்.

(வ-ம்) கேளும்தர்மராஜனே நாம்தோற்றுப்போனோமென்று நினைக்கவேண்டாம் முதல்தோற்கிறதுநல்லதுஇனிமேல் நீயே கெலிப்பாய் ஆகையால்உன்னிட ஆனைசேனை நாடுநகரம்பரிவாரமிவைகளைக்குறித்துபந்தயங்கட்டி இன்னமொருதரம் ஆடுவோம்வாரும் தருமராஜனே.

தர்மர்சொல் (வ-ம்) அப்படியே ஆடுவோம் வாரும்மாமா.

இரண்டாவது ஆட்டம்.

சகுனிசொல்-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-மிசுரதாளம்,

நானேகெலிக்கிறேன்பார் இந்தாட்டமும்
நானேகெலிக்கிறேன்பார்
கோறணதாமர் கொடிமேதரங் குதிரையும்
ஆனையுஞ்சேனையு மவராறுந் தேசமும் (நானே)

வ-ம்-துகைஇருக்கலாவ்-எட்டு-பனிரெண்டு-பத்து.

தர்மர்சொல்-தரு.

தர்மமேசத்யம் ஹரிஹரி
தர்மமேசத்யம்
இமைமயிர்க்கோடியிடறுகள் வந்தாலும்
நன்மைசேர்நாடுநகரத்தை தோற்றாலும் (தர்ம)

வசனம்-துகை-நாலத்தோராறு.

சகுனிசொல்-தரு,

இனிவிடு வேனோ நான்கொளுசத்தி
லெழுந்திருப் பேனோ
சனியாலேபூனாநாடேச் சனிபோலவே பிடித்து
முனிவாயெதிர்பந்தய முழுதமோடி யடித்து (நானே)

வசனம்-பனிரண்டு- பத்து,

தர்மர்சொல்-தரு.

விட்டுவிட்டாலும் விடாமல்நான்
கட்டுப்பட்டாலும்
குட்டுப்பட்டாலுங்குறைவந்து நேர்ந்தாலும்
கஷ்டப்பட்டாலும்நாடு நகரம் வந்திட்டாலும் (தர்ம)

வசனம்-இருக்கால்- பத்து.

சகுனிசொல்-தரு,

ஏற்கவே சூது வழலமென்று
விதமகெலிப் பேது
மார்க்கினிலென் றுனைப்பறகடை பொக்கிஷத்தொட்டு

மூர்க்கமாய்த்தடைதட்டிமுன்னே   சோடுகட்டி (நானே)

வசனம்-பனிரெண்டுதுகைபத்து,

தர்மர்சொல்-தரு,

சூதுசெய்தாலும்   என்னுமையைப்
போதனைதாலும்
சாதகஞ்செய்தாலும்கபடமே   செய்தாலும்
தோதகஞ்செய்தாலும்தொந்தனை   செய்தாலும் (தர்ம)

வசனம்- ஆறொன்னேழு,

சகுனிசொல்- தரு,

பாண்டவர்   சூரை   சகுனியென்னும்
பாம்பின்வாய்த்தேரை
பாண்டவரொனைப்பழித்துச்   சொல்லாவண்ணம்
மூண்டசூதுமுடிந்தது   என்னெண்ணம் (நானே)

வசனம்-பனிரண்டு-எட்டு-ஆறுநாலு-பத்து,

தர்மர்சொல்-தரு,

மிக்கவே   மின்று   எங்களெவ்
விதத்திலும்வென்று
சொக்கட்டாடுதிதுசங்கட்டி   யாண்டாலும்
இக்கட்டாலெங்களுக்கிடர்வந்து   மூண்டாலும் (தர்ம)

வசனம்- மூணத்தொண்ணு,

சகுனிசந்தோஷப்பட்டு-துரியோதனனுக்குச்சொல்-கொச்சகம்,

அஞ்சுபேருந்தவிர யானைபரிசேனைரதம்
இஞ்சலுள்ளநாடுநக ரின்பமிருசேனைரதம்
வஞ்சவுப்புசட்டி வரவோடிமில்லாமல்
பஞ்சவரைப்பஞ்சாய் பறக்கடித்தேன்பார்த்தீரோ,

(வ-ம்) ஆ-ஆ-கேளும என்னுசைமருமகனை துரியோதனமகாராசனே இந்தப்பாண்டவர்கள் ஐவர்தவிரமற்றஇவர்களுக்குள்ளசகஜதுரகபதாதிகளையுங்கெலித்து உப்புசட்டிவரவோடுகூட இவர்களுக்குச்சுதந்தரமில்லாமல் பஞ்சவரைஇலவம்பஞ்சாய்ப்பறக்கடித்தேன் பார்த்தையோ துரியோதனமகாராஜனே,

துரியோதனன்-சகுனிக்குச்சொல்- விருத்தம்,

இத்துடன்விடலாகாது இவர்களுக்குத்தம்பிமாரும்
அத்துடனிவருமாக வைந்துபேரையுங்குறித்து
எத்துடன்னினியோராட்ட மிசையவேநன்றாபாடிக்
கொத்துடன்கெலித்தாலெந்தன் குலதெய்வம்நீயேமாமா,

(வ-ம் கேளுங்காணும்மெய்மாமா இதிலேமகிழ்ந்துபோறுயென்னவீமனை அர்ச்சுனன் நகுலன் சகாதேவன் இன்னம் நாலுபேரிருக்கவில்லைடா இந்ததர்மராசாஇருக்கவில்லையா ஆ ஐந்துபேரையுங்குறித்துஇனியோராட்டம் போட்டாலல்லவோசரி,

சகுனி-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்,

நகைமொழிசொன்னீர்மூட்ட னைந்தவர்க்கிழைத்தோ
மருவுமென்வார்த்தைதன்னை மனதினில்நசமென்றெண்ணி
அகமகிழ்ந்தாடுவோமென் றவர்களேசொல்லுவார்கள
தருமனுமகனேசும்மா சற்றேநீயிருந்துபாராய்,

(வ-ம்) ஆ-ஆ-மருமகனே மூட்டனைந்தவர்களுக்குசதுமூலட்டாதா நிகாம ஆனைசேனைபரிவாரமிதுகளையெல்லாந்தோற்றுவிட்டமகாமோ ஷக்காரரானபாண்டவர்கள் தங்களஞ்சுபேரையுங் குறித்து ஆடுகிறதை குப்பின் வாங்குவார்களா, அவர்கள்தானே வலிய ஆடப்போகிறார்கள் பொறும் துரியோதனமகாராசனே,

சகுனி-தர்மருக்குச்சொல்-விருத்தம்,

தருமபுத்திரனேநீதான் சம்புத்திரனுனையாலே
மருவுமென்வார்த்தைதன்னை மனதினில்நிசமென்றெண்ணி
ஒருமையுன்தம்பிமாரு முன்னையுக்குறித்தேயின்னம்
அருமையாய்நாமோராட்ட மாடுவோமாடுவோமோ,

(வ-ம்) கேளும் தர்ம புத்திரனே நீ சம்புத்திர னுனைப்படியினால் என் சொல்லைத்தள்ள மாட்டாய் இப்போதுன் தம்பிமாரும் - உன்னையும் ஆக - ஐந்துபேரையுங் குறித்து இன்னமோராட்டம் ஆடுவோம்வாரும் தர்மராஜனே,

தர்மர்-சகுனிக்குச்சொல் விருத்தம்,

ஆவதுந்தெய்வத்தாலே யழிவதுந்தெய்வத்தாலே
மேவியநம்மாலிங்கே வேறொன்றுநடப்பதில்லை
தாவியெங்களையுங்கூட தனைக்குறித்தாடவென்றீர்
கோவியில்முறைமையைச்சொன்னீர் கொப்பெனவாடுவோமே,

(வ-ம்) ஓய்மாமாதோற்பும்வெலிப்பும் நன்மையுந்தின்மையும்ஆகிறதும்அறிகிறதாம் இருவராச்செயலேயல்லாமல் நம்முடையசெயலல்லவேல்லாநீதோற்றுப்போன எங்களையுங்குறித்துஆடுமென்றுசொல்லுகிறீர் நல்லதிது அப்படியே ஆடுவோம் வாரும்,

சகுனி துரியோதனனுக்குச்சொல் - வசனம்,

ஆ-ஆ-மருமகனே தருமபுத்திரன மகா புத்திசாலி ஐந்துபேரையுங்குறித்து ஆடுகிறதற்குப பின்வாங்க மாட்டானென்று முன்னேதானேசொன்னேன் பார்த்தீரா அதற்குக் கிஷ்டாந்திரம்,

மூன்றாவது ஆட்டம்.

சகுனிசொல்-தரு-சங்கராபரணம்-தாளம்-மிசரம்,

அஞ்சுபேரையுமிப்போ கெலிக்கிறேன்-நமக்
கடிமைத்தொழில்புரிய வலிக்கிறேன்
கொஞ்சம்புரியுந்தரும் குடையும்பரியும்போச்சு
தஞ்சாங்கராஞ்சகலமும்நட்டம் தாச்சு (அஞ்சு)

வசனம்-மூனுபனிரண்டு-எட்டு-இருக்கால் - நாலத்தோரஞ்சு.

உங்களுக்கேசெல்வம் பெருக்கட்டும்-நாங்க
ளெங்கிலுங்கர்ம மிருக்கட்டும்
எங்களுக்கினியில்லாவிடருகள் வந்தாலும்
அங்கங்குன்றியுங்கட்கடிமையாய் போனாலும் (உங்க)

வசனம்-நாலத்தோரஞ்சு,

சகுனிசொல் - தரு,

கடலெல்லாந்தாண்டியோர் கால்வாய்த்தாண்டவென்
கையிலைகாதென்று விடுவேனோ-பெருங்
காட்டையெல்லாம்வெட்டி சுட்டுப்போட்டு-ஒரு
கரும்பைவெட்டப்பயப் படுவேனோ-இந்த
அடியிலெறிக்காகவடர்ந்த பந்தயம்போட்டு
அக்கிக்-தக்கிப்பற்றி-சுத்திக்-கொத்திக்குத்தி (அஞ்சு)

(வ-ம்)நாலெட்டு-இரண்டுபனிரண்டு-இருக்கால்தகைநாலத்தோரஞ்சு

தர்மர்சொல்- தரு-

பேரும்வரும்வாழ்வும்பெண்டுபிள்ளையுநாம்
பிறந்தபோதுகூடப் பிறந்ததோ-இந்தப்
பேதகஞ்செய்துஅன்னீதஞ்செய்து மன்னர்
பெறறசெல்வமும்பின் சிறந்துதோ-மாமா
நேருபிரவுதனனில்நிலவுஞ் சிலதுகாலஞ்
ஆறுமுள்நடுக்குயி நளுஞ் சிலதுகாலம்(உங்)

வசனம்-காலத்தோரஞ்சு,

சகுனிசொல்- தரு,

மல்கவெல்லாங்கையால்வாரியுண்டு குண்டு
மணியைக்கண்டுபயப் படுவேனோ-பகை
வந்துநேர்ந்தபோதுவேளைக் கெல்விடாமல்
வழுவமென்றுவிட்டு விடுவேனோ-இதோ
மெலியுமெழுதிறசாலா வெளியிற்புறப்படாமல்
வெட்டிக்கிட்டிக்-குட்டிக்-தட்டிக்கொட்டிக்-கட்டி (அஞ்சு)

வசனம்-ரெண்டு-பனிரண்டு-ரெண்டெட்டு-தங்க - மூணத்தொன்னூறு

தருமர்சொல்- தரு,

போகாதபொருள்தன்னைப்போமென்று சொன்னாலும
போகாமலொன்றபத் தாகுமோ-விட்டுப
போகும்பொருள்தன்னைப் போகாமலிருக்கவும்
புனதத்துலைவத்தாலுந்தா னிருக்குமோ-மாமா
வாகானவுலகத்திலமழையுஞ் சிலதுகாலம்
வெகமானகோடைவெயிலுஞ் சிலதுகாலம் (உங்க)

வசனம்-மூணந்தொண்ணூறு.

சகுனிசொல்-தரு.

முன்னேவைத்தகாலைப்பின்னேவைத்து என்றால்
முடியாதென்றால்சகுனி யாவேனோ-என்னை
முடியமட்டுமொரு காலில்நின்றேயதை
முடிக்காமலெழுந்தான் போடுவேனோ-நான்
சொன்னசொல்லுக்கொரு சின்னம்வந்திட்டாமற்
சூட்டிக்-கூட்டிப்-போட்டு-காட்டி-மூட்டி-வாட்டி (அங்)

(வசனம்) காலெட்டுவொண்டிருக்கால-தாகை-ஒன்பது.

தருமர்சொல்-தரு.

கபடமெண்ணிப்பொல்லா துரோகஞ்செய்துவெறுங்
கனத்தைத்தேடுவதென்ன புத்தியோ-சும்மா
கதறிக்கதறிக்கள்ள கயிறுருட்டிப்படைக்
காயில்வெல்லுவதென்ன வெற்றியோ-மாமா
குவியுங்கடலினீரைக் குடித்தி லடைக்கலாமோ
குடிக்கும்வம்பனைப்போலத் துடிக்குஞ்சகுனிமாமா

வசனம - நாலத்தோராஞ்சு.

சகுனிசொல்- விருத்தம்.

தருமபுத்திரன்செருக்குந் தம்பிபீமன்கொழுப்பும்
மருவுமர்ச்சுனன் துடிப்பு மற்றிருவர்கள்பதைப்பும்
அரிவைதுரௌபதிநொடிப்பு மவள்சிரித்திடுஞ்சிரிப்பும்
ஒருகொடியினிலென்கையா லொடுங்கிப்போனதைக்கண்டீரோ

(வ-ம்) பார்த்தீர்களா பார்த்தீர்களா தர்மபுத்திரன் செருக்கும் தம்பி வீமன்கொழுப்பும் அர்ச்சுனனுடையதுள்ளலும் இந்தப்பசகளுடைய முறுக்கும் அந்தத்துரௌபதையினுடையகுலுக்கும் பலுக்கும் கெலிப்பும் சிரிப்பும் ஒரு சகுனிகையிலேவந்து ஒடுங்கிப்போனதைப்பார்த்தீர்களா-ஆ-ஆ.

துரியோதனன்-தருமருக்குச்சொல்-விருத்தம்.

தெய்வத்தின்செயலோநான்முன் செய்தபுண்ணியமோநீங்கள்
ஐவருந்தோர்த்தீரெங்கட் கடிமையாய்ப்போனீரிப்பால்
மைவருங்கண்ணுளந்த மாதுதுரௌபதையைவைத்து
கைவாவினியோராட்டங் கருத்துடனாடுவீரே.

(வ-ம்) கேட்டீரோதருமபுத்திரரே நீங்கள்ஐவருந்தோற்று எங்களுக்கு அடிமையாகப்போனதினாலே நீங்களிந்தபேருந் தோட்டுப்பார்க்கிறீர்களே அந்தஅழியாதபத்தினியைக்குறித்து ஓராட்டம்போடுங்கள் பார்ப்போம்.

பொது-வசனம்.

இந்தப்படியாய் துரௌபதியைக்குறித்து ஆடச்சொல்லி துரியோதனன்சொல்ல திருதராட்டிரனைப்பார்த்து விதுரமகாராசன் சொல்லுகிற விதங்காண்க.

விதுரன்திருதராட்டிரனுக்குச்சொல்-விருத்தம்.

ஐயையோகெடுவாமிந்த வன்னீதமுலகிலுண்டோ
வையவுன்குடிக்குநாச காலமும்வந்ததோதான்
பொய்வளர்அண்ணன்தேவி பெற்றதாயாச்சேயந்த
தையலைக்குதித்தேயாடத் தகாதென்றுசொல்லொண்ணாதோ.

(வ-ம்) கேளாயண்ணா திருதராட்டிரமகாராஜனே இவ்வனியாயம்உலகத்திலுண்டோ உன்னிடசமஸ்தானத்துக்கு என்னகேடுகாலம்வந்ததோ உனமகனுக்கு அந்தஅவளபதிதமயன் பாரியாளானபடியினால் தாய்க்குச் சமானமாச்சுதே அவளையும்வைத்தாடச்சொல்லி உன்மகன்சொல்வதைக் கேட்டு நீசும்மாயிருக்கலாமா உன்சொல்லைத்தள்ளிப்போடுவானா வேண்டாம் வேண்டாமென்று ஒருவார்த்தைசொல்லலாகாதா ஐயையோ அண்ணே.

சகுனிவிதுரனுக்குச்சொல்- விருத்தம்.

தோற்றுப்போனவர்களென்னுஞ் சொல்லாமலிருக்கமேலும்
வார்த்தைசொல்லாமல்மற்ற மன்னவர்பார்த்திருக்க
ஆத்தமாந்தனிரக்க முனக்கிப்போவந்ததென்ன
ஏற்றவுன்ஞாயமிங்கே யிருக்கட்டும்போம்போங்காணும்.

(வ-ம்) தோற்றுப்போனபாண்டவர்கள் மாணிக்கம்போலவாயைத்திறவாமலிருக்க மற்றவர்களுநு சிடுக்குப்பொடுக்கென்னாமலிருக்க உனக்குத் தயைவிரக்கம்வந்ததேன்காணு மிப்போ வெகுஞாயம்பேசவந்தாய்.

விதுரன்-சகுனிக்குச்சொல்-வசனம்.

ஓய்சகுனிமாமா என்னாலேதானிந்த சமஸ்தானம் வெட்ட வெளிச்சம்பட்டம்பகலாகப்போகுது உன்பேச்சுக்கு வரவில்லை நீர்சும்மாயிரும்.

விதுரன்-திருதராட்டிரனுக்குச்சொல்-விருத்தம்.

பிள்ளைகள்தீங்குசெய்தால் பிதாநல்லபுத்திசொல்லி
தள்ளவேவேணுமந்தத் தன்மையுன்னிடத்திலில்லை
உள்ளநாளுள்ளமட்டும் மோரவஞ்சனையேசெய்தால்
எள்ளுந்தண்ணீருங்கூட யாருனக்கிறைக்கப்போறார்.

(வ-ம்) கேளுமண்ணா திருதராட்டிரமகாராஜனே பிள்ளைகள் ஒரு பொலாங்குசெய்தால் தகப்பன்நல்லபுத்திமதியைச்சொல்லி அதைத்தடுக்கவேண்டும் அந்தநடத்தை உன்னிடத்திலில்லை எப்போதும் உன்தம்பிபிள்ளைகளுக்கு மோரவஞ்சனையேசெய்தாய் உன்பிள்ளைகள் நாளைஎள்ளுந்தண்ணீரு மிறைக்க உதவவேணுமே அண்ணே.

இதுவும்-விதுரன்சொல்-விருத்தம்.

தம்பிபிள்ளைகளைமூத்த தமயன்பிள்ளைகள்கெலித்து
கொம்பனையாளைக்கூட குறித்தாடச்சொல்லலாமா
வெம்பியுன்மகனுரைத்த வேலையேநடக்குமானால்
சம்பூரணசம்வாழ்வும் நாசமாய்ப்போகுஞ்சொன்னேன்.

(வ-ம்) தம்பிபிள்ளைகள்உடப்பிறந்ததமயன் பிள்ளைகளடிமையாக்கிக்கொள்ளுகிறது அவர்கள் பெண்சாதியைக்கூட ஏதுநியாயத்திய மடிமையாக்கிக்கொ

ன்கிறது உன்மகள்சொல்லுகிறது உனக்குச்சரியாயிருக்குதா அப்படி நடக்குமாகுல் இந்த ஆதினத்துக்குக் கெடுதிவரும் சொன்னேன் சொன்னேன்.

சகுனி-தருமருக்குச்சொல்- வசனம்.

தம்பிமார்புத்திரா அந்தக்கிழவனும் இந்தக்கிழவனும் ஏதோபேசிக்கொள்ளுகிறார்கள் இந்தக்கிழவன்பேச்சு இந்ததுரியோதனனுன கின்னுக்காரனுக்கு ஏற்கப் போகுதா துரௌபதியைக் குறித்து நாம் ஓராட்டம் போடுவோம்வாரும்.

தருமர்-வசனம்-அப்படியேசெய்வோம்

துரௌபதையை வைத்தாடுகிற

நான்காவ தாட்டம்.

சகுனிசொல்-தரு-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

என்மருமகனுக்கு இதல்லவோ காட்டம்
எப்படியாகிலுங் கெலிக்கிற விந்தாட்டம்

சகுனிசொல்- வசனம்.

இரண்டுபனிரண்டு இரண்டெட்டு இரண்டிரிக்கால்துகைபத்து.

ஆ ஆ ஆ ஆ ஓய்கர்ணமகாராஜனே பார்த்திரா எங்கள் சகுனிமாமனகையேகை மற்றபேர்கை உலக்கைதான் அடிக்கடிக்காய் பந்தயம் விழுகிறசொகுசை நான்யென்னசொல்வேன் ஓய்மாமா உன்கையை யிப்படித்தாரும்என் கண்ணிலே ஒற்றிக்கொள்ளவேணும்.

தருமர்சொல்-தரு.

ஐயையோஈதெல்லா மரசர்க்குத் தர்மமல்ல
அன்னிதஞ்செய்தாலதற்குகா னென்னசொல்ல

சகுனிசொல்- வசனம்.

ஆ ஆ விளக்குச்சேபமழையபந்தயந்தான் மூணுக்கொண்ணுதான்.

சகுனிசொல்- தரு.

நன்மையிலுஞ்சில துன்மையிலு மந்த
காளையிலுமெந்தவேளையிலும் பார்க்கில் (என்மரு)

சகுனிசொல்- வசனம்.

மூன்றுபனிரெண்டுமூன்றெட்டுமூன்றிருக்கால்மூன்றுதுகைபத்து.

தருமர்சொல்-தரு.

மெய்யானமூர்க்கமும் பொய்யான மார்க்கமும்
வீச்சுகளுங்கொஞ்சம் பேச்சுகளும்பார்த்தால் (ஐயை)

சகுனிசொல்வசனம்-துகைநாலுமூணேழு

சகுனிசொல்-தரு.

அஞ்சுபேரையுங்கூடகெலித்ததுவும்பெரிதல்ல
அடிமையாக்கிக்கொண்ட ததுவும்பெரிதல்ல
ஆனைகளும்பரி சேனைகளுமவர்
அஸ்திரங்களும்நல்ல சஸ்திரங்களும்ரத்ந
ஆரங்களுஞ்சுத்த வீரங்களுமாக
நாடைகளுஞ்சித்ர மேடைகளுங்கூடும்

அடிகளும்பிரேக்க சாடிகளுமவர்
அட்டிநலஞ்சப்ர கட்டில்களுமவர்
ஆட்டங்களுமாதர் கூட்டங்களுந்திர
ளாடுகளுமபசு மாடுகளுமவர்
ஆஸ்திகளுந்தில பாஸ்திகளுமிது
வெல்லாவமிழ்ந்தோமே யெல்லாங்கெலித்தோமே
அதுவும்பெரிதல்ல இதுவும்பெரிதல்லை

தருமர்சொல்-தரு.

சொக்கட்டாருடனே யோசனைபண்ணினதும்
தோர்க்கடிப்போமென்று மனதிலெண்ணினதும்
தோதகமும்வஞ்ச பேதகமுமொன்றைச்
சூட்டுவதுங்கோப மூட்டுவதும்பல
தொடுவழக்கும்பொல்லா படுவழக்கும்வெகு
அற்புத்தியுங்கெடு விற்புத்தியுமிந்த
சொற்பனையுங்கதி கற்பனையும்பேய்போல்
தள்ளுவதுமாடிக் கொள்ளுவதுமிந்த
சொற்பிரட்டுங்கள்ள கைப்பிரட்டுமிந்திர
சழலுகளுநம்முழுதும் பழுதுகளுங்கெட்ட
குதுகளும்வினை காதுகளும்பார்க்கில் (ஐயையோ)

துரியோதனன்-வீஷ்மருக்குச்சொல்-விருத்தம்.

தரித்திரனுந்தர்மபுத்திரன் பாவந்தானோ
தம்பிமார்செய்தவினை தாழ்வுதானோ
சிரித்துகளுக்கெனைக்குலிக்கிக் குலுக்கும்பச்சை
சேயிழையாள் துரௌபதிசெய் தீங்குதானோ
பொருத்தமுள்ளவென்மாமன் சகுனிசெய்த
புண்ணியமோநான்செய்த பூசைதானோ
வருத்தமின்றிப்பாண்டவர்கள் வந்தவாறும்
வந்தவிடத்தினில்விடிந்த வாறும்பாரீர்.

(வ-ம்) கேளும் எங்கள்பாட்டனுகிய வீஷ்மரே இந்ததர்மபுத்திரன் செய்தஅதர்மமோ தம்பி அழகப்பமாருடைய தவக்குறைவோ அல்லாமலும் அங்கனேசிரித்து அங்கனேநொடித்து அப்படிமுறிக்கி இப்படி திருப்பி கலுக்கென்றகுலுக்கி மொளுக்கென்றுமுறிஞ்சிப்போராளே அந்ததுரௌபதையான தேவடியாள்செய்தபொல்லாங்கோ என் சகுனிமாமனுடைய புண்ணியமோ என்பாக்கியவசமோ ஆ - ஆ இந்தப்பாண்டவர்கள் அங்கேயிருந்துவந்ததும் இங்கேவந்தவிடத்திலே இவர்கள் அதோ கெதியாய்ப்போனபோக்கும் பார்த்தீரா பாட்டனாரே.

வீஷ்மர்-துரியோதனனுக்குச்சொல்- விருத்தம்.

கமதகுலம்பிறர்கைக்குங் குலமேயல்ல
காரதிபருக்கிதுகளெல்லாம் ஞாயமல்ல
சமரசமாம்பாண்டவர்களன்னியரல்ல
சகோதரரைக்கெடுக்கிறது தருமமல்ல

அபிமானைபாஞ்சாலியற்பமல்ல
 அவள்பிடிகாலுனைவிட்டுப்போறதல்ல
விமலமில்லாவட்டதுரியா வையோவிந்த
 விபரீதகுணமுனக்குவேண்டாமப்பா.

(வ-ம்) ஆ-ஆ-அடா துரியோதனா என்னடா நம்முடைய குலம் பிரசகைக்கப்பட்ட குலமல்லவே அந்தப்பாண்டவர்கள் அன்னியர்களல்லவே சகோதரர்களுக்கு ஒருகேடு நினைக்கிறது தர்மமல்லவே அந்த ராசபத்தினியான துரௌபதை அற்பசொற்பமல்லவே அவள்வாக்கினாலே ஒன்றைச்சொன்னால் உன்னைவிட்டுப்போறதல்ல ஐயையோ இந்த விபரீதகுணமான வார்த்தைகள் வேண்டாமப்பா துரியோதனா.

துரியோதனன்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்.

பெருத்தவென்னப்பனென்னைப் பெற்றவன்திருதராட்டிரன்
ஒருத்தனேஎந்தன்வார்த்தைக் குடன்பட்டுகேட்பாரிந்த
நரைத்தலைக்கிழவரெல்லா நானொன்றுசொன்னாலத்தை
இருத்தவேறொன்றைச்சொல்ல தெப்போதும்வழக்கந்தானே.

(வ-ம்) சரி-சரி-சரி-சரி-ஆ-ஆ, இதிலே குறைச்சலில்லை எந்நாளும்என்னப்பன என்னைப்பெற்றவன் திருதராட்டிரமகாராசனே சரி நானெப்படி சொன்னால் அப்படிகேட்கவும் நடக்கவும் வீஷ்மர் துரோணர் என்றுஞ் சொல்லப்பட்டநரைத்தகிழவரெல்லாம் நான்றுஒன்சொன்னால் அதைவிலக்கிவேறொன்றைச்சொல்லுகிறதெப்போதும்வழக்கந்தானேசிற்றப்பாநல்லதாகட்டும்.

துரியோதனன்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்.

சிற்றப்பாசிலபேரை அனுப்பியவர்
 தேசமெல்லாந்தோரணங்கள் கட்டச்சொல்லும்
உற்றவுப்புசட்டி வரவோடுகூட
 வைக்காமலிங்கெடுத்து வரவேசொல்லு
குற்றமுள்ளஐவரை யெழுந்திருக்கச்சொல்லு
 கொத்தடிமையானதொழிற் செய்யச்சொல்லு
சித்தினிதுரௌபதையை யிச்சபையிலிப்போ
 சீக்கிரமாயிழுத்துவரச்சொல்லுவாயே.

(வ-ம்) அப்பாசிற்றப்பா இனிமேல் முன்பின் யோசனைபண்ணவேண்டிய தில்லை சிலபேரையனுப்பி பாண்டவர்கள் தேசமெல்லாம் தோரணங் கட்டச்சொல்லும் அவர்கள்வீட்டிலே இருக்கப்பட்ட உப்புசட்டி வரவோடுகூட பாக்கியில்லாமல் எல்லாம் என்வீட்டிலேகொண்டுவந்து போடச்சொல்லும் இந்தப்பாண்டவர் ஐந்துபேரையும் எழுந்திருக்கச் சொல்லி அடிமைவேலை செய்யச்சொல்லும் அந்த சித்தினி சிறுக்கியாகிய துரௌபதியை இங்கே யிழுத்துவரச் சொல்லும் எழுந்துபோம் எழுந்துபோ சிற்றப்பா.

விதுரன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

எந்தகாரியஞ்செய்தாலு மெவர்களென்செய்தாலும்
அந்தகற்புடையாளான அரிவைதுரௌபதியையன்னோர்

மந்திரிசபையிலிட்டோ மானமில்லாமற்பேசும்
நிந்தையைமறந்தாயானால் நீடுழிகாலம்வாழ்வாய்.

(வசனம்) அப்பா துரியோதனா நீ செங்கோல் செலுத்தப் பட்டவன்
செங்கோலுக்குமுன்னே சங்கிதமாகுமா நீ யாரையென்னசொன்னாலும் எ
தை எப்படிச்செய்தாலும் ஆகிலுந்தன்மானம் பிறர்மானமென்றும் பாராம
லந்த மகாகற்புடையவளான துரௌபதையை இந்தச்சபையிலே சின்னமா
சஇகழ்ந்துபேசுகிறையே அதுநலமல்ல அதைவிட்டுவிடுவையேயானால் கற்ப
கோடிகாலம் வாழ்வாயப்பா.

துரியோதனன்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்.

நற்பயனன்றாய்ச்சொன்னீர் நாலஞ்சுபேருநித்த
செப்பமாய்க்கூடிக்கூடி திரிந்ததுபௌபதியாளுக்கு
கற்பேதுமானமேது கணக்கேதுகாரியமேது
சொற்பனத்தினிலுமந்த தோகையைமறந்திடேனே.

(வசனம்.) சிற்றப்பா நன்றாகச்சொன்னீர் சுருக்குப் பையிலே அரிவாளை
வைத்தாப்போலிருக்கிறது நீர் சொல்லுகின்றது எதுகாணும் நித்தம் ஐந்து
பேருடனே கூடப்போகிறவேசி அவளுக்குக்கற்பா மானமா காரியமா கணக்
கா பளா பளா அந்தராசசுயாகத்திலே என்னையல்லவா பார்த்துநகைத்தாள்
அது என்மனதிலேயிருக்கிறது விடுவேனோ.

விதுரன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

திறமையில்லாவிகட துரியோதனாநான்
  சேதியொன்றுசொல்லுகிறேன் தெளிவாய்க்கேளு
பொறுமைதனிலேயிருக்கு பூமிதேவி
  பூமிபாரம்பொறுக்க மாட்டேனென்று
திறமுடையமாயனுடன் சொன்னதை
  தீர்க்கிறேனென்றுசொல்லி நெடியமாலும்
தரைதனில்வந்தவதரித்தா னதற்கேற்றாப்போற்
  சக்கிமுக்கிதட்டாதே சதையப்போறாய்.

(வ-ம்) கேளுமப்பா துரியோதனா பூமியிலே அக்கிரமம் மிகுந்து பூமிதே
வியானவள் பூமிபாரம்பொறுக்கமாட்டாமல் மகாவிஷ்ணுவுடனே முறைய
மிட்டாள் அந்தமகாவிஷ்ணுவும் அந்த பூமிபாரத்தைத் தீர்க்கிறே னென்று
ஒருவராகவந்து அவதரித்திருக்கின்றார் ஆகையினாலே ஏதோ ஒருவிபரீதம்வி
ளையப்போகுது அதற்கேற்றாப்போலே நீயுஞ் சக்கிமுக்கிப் போடுகிறாய் வே
ண்டாம் மோசம்வரும் சொன்னேன் சொன்னேன்.

துரியோதனன்-விதுரனுக்குச்சொல்- விருத்தம்.

பின்னையுநல்மேயந்தப் பிரகாரநடக்குமானால்
இன்னுஞ்சக்கரைப்பந்தன்மேல் தேன்மாரிபொழிந்தாப்போல்தான்
கொன்னிகும்பிடப்போய்தெய்வம் குறுக்காகவந்தாப்போல் தான்
துன்னிநானினைத்தகாரியஞ் சுருக்காகநடத்துவேனே.

(வசனம்) ஆ-ஆ-ஆ-ஆ-பின்னையுஞ்சந்தோஷந்தான் அப்படியே நடக்குமா
னால் சர்க்கரைப்பந்தலில் தேன்மாரிபொழிந்தாப்போலுந்தான் ஆனால் நான்
நினைத்தகாரியத்தையெல்லாம் சுருக்காக முடிப்பேன்.

துரியோதனன்-பிரிதிகாமியனுக்குச்சொல்- விருத்தம்.

பிரிச்சநூதானப்பா பிரிதிகாமியனேவாடா
சரிச்சகீள்மரங்கள்போல சபையிலேயிற்பதாக
பறிச்சபாண்டவர்களின்று பகடையில்வைத்துதோற்ற
மறிச்சிரிக்கியையிநீபோயென் முகத்துமுனிழுத்துவாடா.

(வசனம்.) அடா பிரிதிகாமியனேவாடா, இங்கே பாண்டவர்கள் சபையிலே வைத்துத் தோற்றார்களே அந்த முறிச்சிறிக்கியை இங்கே யிழுத்துக் கொண்டுவாடா.

பிரிதிகாமியன்-துரியோதனனுக்குச்சொல்-கவி.

கெற்பகமன்று மர்புயமன்னே
பொற்புடன்சொன்ன சொற்படிசெய்வேன்

பிறிதிகாமியன்போய்திரும்பிவந்து-துரியோதன னுக்குச்சொல-கவி.

திடம்பெறுமன்றே அடர்ந்தனனங்கே
தொடாந்தொருவழக்கு நடந்ததுகேளும்

(வ-ம்) அழைக்கப்போனவிடத்திலே நடந்ததைக்கேளுஞ்சுவாமி.

துரியோதனன்-பிரிதிகாமியனுக்குச்சொல்-கவி.

கன்னியையிழுத்துக்கொண்டு முன்னமேவரவேசொன்னால்
அன்னியவழக்குண்டென்று என்னடாசும்மாவந்தாய்

(வ-ம்) துரௌபதையை இழுத்துக் கொண்டு வரச் சொன்னால் என்னடாவழக்கென்று சொல்லவந்தாய்.

பிரிதிகாமியன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

என்னைமுன்தோற்றபின்பு எதிலவர்தோர்த்திட்டாரோ
பின்னுமைவர்கள்தோற்று பிறகென்னைத்தோர்த்திட்டாரோ
முன்னமேயென்னைதோர்த்தால் மொழியுண்டுபின்னேதோர்த்தால்
அந்தமேன்னையழைக்க வடுக்குமோமாசர்க்கென்றாள்.

(வ-ம்) என்னைமுன்னே தோர்த்து பிறகு ஐந்துபேர்களுந் தோர்த்தார்களோ ஐந்துபேருந்தோர்த்து அதின்பிறகு என்னைதோர்த்தார்களோ அப்படிஇல்லை முன்னாடி என்னைத்தோர்த்தால்பேச்சுண்டு ஐந்துபேருந்தோர்த்த பிறகு என்னைத்தோர்த்தபடியினாலே அநியாயமல்ல அந்தச்சபையிலே யழைக்கிறது தருமமல்லவென்று அந்தம்மாள்சொல்லுகிறாள் சுவாமி.

துரியோதனன்-துற்சாதனனுக்குச்சொல்-விருத்தம்.

கொம்பிலேகொம்புபன்றிக் குதிரைக்குமுளைத்ததென்றால்
நம்புபாண்டவரைப்போல நம்மையுமெண்ணிக்கொண்டாள்
தம்பிதுற்சாதனனேவோர் தாண்டிலேநீபோயந்த
வம்பிதுரௌபதையையிங்கே மயிர்பிடித்திழுத்துவாடா.

(வ-ம்) அடாதம்பிதுற்சாதனா சேட்டையா அந்தச்சிறுக்கி கொண்டபிரபகம் முன்னே தோற்றவர்களென்றும் பின்னே தோற்றவர்களென்றும். ஒருவழக்குண்டாக்கினாள் குதிரைக்குக்கொம்பிலே கொம்புமுளைத்ததென்று சொன்னாலே நம்புவாருடையவெச்சக்காரர்கள் நம்புவார்களே அப்படிநம்மையும் யெண்ணிக்கொண்டாப்போலிருக்கிறது அவளைப்போய்மயிர்பிடித் திழுத்து வாடாதம்பி

துற்சாதனன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

நாட்சண்ணியமெண்ணமாட்டேன் தயவையுமெண்ணமாட்டேன்
சாட்சென்றவைரமெல்லாம் நானிப்போதீர்த்துக்கொள்வேன்
வாட்சென்றமன்னரெல்லா மருவியகொலுவின்முன்னே
சூட்சியாய்க்கொண்டுவந்து சருக்கினில்விடுவேனண்ணே.

(வ-ம்) கேளும்அண்ணா நாட்சண்ணியமுள்வர்கள் முகத்தைக்கூடப்பார்க்கமாட்டேன் இந்த அடியிலே அவளை யிழுத்துக்கொண்டு வந்துவிடுகிறேன் பாரும் அண்ணே.

துற்சாதனன்சொல்லிக்கொண்டுபோகிற-தரு.

இ-ம்-மோகனம்-மிசிரதாளம்.

பல்லவி.

அப்படியவள்சொல்ல லாச்சா-அங்க
அடிமையாய்ப்போனபின் பேச்சா

அனுபல்லவி.

தப்பிலிசிறிக்கியைத் தவிடாகக்கொழிக் கின்றேன்
தடுத்துச்சொன்னால்வாயைப்பிடித்துக் கிழிக்கின்றேன் (அப்படி)

சரணங்கள்.

புலியைப்பூனைகள்வந்து வெல்லுமா-இவள்
பொங்கெல்லாமினியிங்கே செல்லுமா
கலியமயிர்பிடித்துநானேயிழுக் கிறேன்
ஞாயமெடுத்துச்சொன்னால்நாக்கை யறுக்கிறேன் (அப்படி)
செத்தமாடுபுல்லைத் தின்னுமா-இவள்
சித்திரமினியிங்கே மின்னுமா-எந்தன்
சித்தங்கேட்டவுடன்வந்தாலேபார்க் கிறேன்.
தடங்கல்சொன்னால்சக்கைசக்கையாய்ப் போக்கிறேன் (அப்படி)
பெண்பெண்சாதிக்கிந்த வார்த்தையா-ஒகோ
பிரிதிகாமியனே நீ பார்த்தையா
என்பதிவேசியை இப்போதழைக் கிறேன்
இகலெடுத்துச்சொன்னால் கைபிடித்திழுக் கிறேன் (அப்படி)

துற்சாதனன்-துரௌபதிக்குச்சொல்-விருத்தம்.

மதித்ததுரௌபதியே நீதான் மானமுள்ளவளேயானால்
விதித்தநூற்றொருவரன்பு வேணுமென்றவளேயானால்
கொதித்தவென்னண்ணனின்னை கொலுவினிலழைக்கச்சொன்னார்
எதிர்த்தவுத்திரஞ்சொல்லாம லெழுந்திருந்தென்பின்வாராய்.

(வ-ம்) கேளாய் துரௌபதையே நீநல்லமானமுள்ளவளேயானால் எங்கள் நூறுபேர்தயவுவேணுமென்றவளேயானால் மறுவார்த்தை சொல்லாமல் எங்களண்ணன் கொலுவுக்குச்சீக்கிரமாவா.

துரௌபதை-துற்சாதனனுக்குச்சொல்-கொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

மட்டுமருந்த மரியாதையில்லாமல்
பொட்டெனவேவந்தழைத்த புத்தியில்லாமைத்துனரே.

தொட்டமுடியுங்களண்ணன் சூழுஞ்சபையிலென்னை
இட்டுவரச்சொன்னவிதம் இன்னதென்றுசொல்வீரே.

(வ-ம்) மருக்குமரியாதையுமில்லாமல் வந்தழைத்த மைத்துனரே இராச இராஜாக்களிருக்கப்பட்ட சபையில் உங்களண்ணன என்னை அழைத்துவரச் சொன்னவிபரம்இன்னதென்று தெரியச்சொல்லவேணும் மைத்துனரே.

துற்சாதனன்-துரோபதைக்குச்சொல்-விருத்தம்.

மன்னியதர்மபுத்திரன் வலிவசூதாடியையோ
முன்னிலைசகாதி முழுதுமேதோற்றானப்பால்
தன்னையுந்தோற்றான்தம்பி மாரையுந்தோற்றான்பின்னே
உன்னையுந்தோற்றுனெல்லா மொடுங்கினான்வந்துபாராய்

(வசனம்) என்னத்தைச்சொல்லுகிறது தர்மராஜா ஒருஆட்டம் சொக்கட்டான்ஆடுவோமென்று சொன்னான் அதுஎமக்குயோக்கியமல்லவென்றுசொன்னோம்அப்படியல்லவென்று ஆடி நாடுநகரமுதலானதுகளுந்தோற்றான் அப்பால்தம்பிமாரையுந்தோற்றான் பிறகு தன்னையுந்தோற்றான் ஒருங்கடைசியிலேஉன்னையுந்தோர்த்தான் ஓடிபாடிஒடுங்கி உட்கார்ந்துக்கொண்டிருக்கிறான்அவர்களைவந்துபார்த்து வருவாய் வா.

துரோபதை-துற்சாதனனுக்குச்சொல்-விருத்தம்,

என்னையுஞ்சொக்கட்டானி லிசையவேவைத்துத்தோற்ற
மன்னவரெமக்குச்சொல்லி வரவழைத்திடுவர்கண்டாய்.
உன்னையார்கண்டாருங்க ளண்ணனையார்தான்கண்டார்
பின்னமாய்பேசவேண்டாம் பேசாமல்நடந்திடாயே.

(வசனம்) என்னைச்சூதாடிதோற்றஎன்பிராணநாயகர் என்னை வரவழைப்பார் உன்னையார்கண்டார் உங்கண்ணனையார்கண்டார் அதிகமாகப்பேசவேண்டாம்-டட-டட

115760

துற்சாதன்-துரோபதைக்குச்சொல்-விருத்தம்.

நடக்கத்தான்வந்தேனிந்த நாழிகைதனிலேயுன்னை
அடக்கத்தான்வந்தேனுங்க ளண்ணன்முன்கொண்டுபோய்
விடுக்கத்தான்வந்தேனந்த வேந்தர்கள்சபையில்வெட்கக்
கெடுக்கத்தான்வந்தேனிந்த கெர்வமேனெழுந்துவாடி.

(வசனம்) நடக்கநடக்கவும் உன்கெர்வத்தை அடக்கவும் எங்களண்ணன்முன்னே கொண்டுபோய்விடுக்கவும் அந்தசபையில உன்வெட்கத்தைக்கெடுக்க வந்தான்வந்தேன் அறியாயோபெண்ணே.

துரோபதை-காந்தாரிக்குச்சொல்-விருத்தம்.

மாமியேபாராயுந்தன் மகன்செயுமனியாயத்தை
நாமதமன்னர்சூழுஞ் சபைதனில்வாவேசொல்லி
காமிகள்போலேயுந்தன் கைப்பிடித்திழுக்கவாரான்
பூமியிலிதனைப்போலும் பொல்லாதகொடுமையுண்டோ.

(வசனம்) ஆ-மாமி யிந்த அன்னிதரூண்டா அந்தராஜசபைக்கு வரச்சொல்லி உன்மகன் கையைத்தொட்டிழுக்கவந்தது பார்த்தையாமாமி.

துற்சாதனன்-சொல்-விருத்தம்.

கொடுமையென் றுரைத்தாய்நீங்கள் கொத்தடிமைங்களுக்கு
அடிமையாய்ப்போனால்காங்கள் ளாளாமல்விடுவதுண்டோ
கடுமையாயென்தாய்பின்போய் கட்டிக்கொண்டத்தினாலே
விடுவரோவுன்னைசும்மா மினுக்காதேநடந்துவாடி.

(வசனம்) கொடுமையென்னடி சும்மாகூறுகின்றாய் நீங்கள் ஆண்பெண்அடங்கலும் எங்களுக்குக் கொத்தடிமையாய்விட்டால் சும்மா விடுவதுண்டோ ஙாங்களுடைய தாயைப்போய்க் கட்டிக்கொண்டத்தினாலே விட்டுப் போவேனோவாடி வா.

துரோபதை - காந்தாரியினிடத்திலே - புலம்பல்.

தரு-கண்டா-இ-ம்-பீசாதாளம்-கண்ணிகள்.

ஐயையோநானென்னசெய்வேன்	மாமி-இந்த
அநியாயந்தானுண்டோ	மாமி
செய்யும்வாரோது என்	மாமி-யெந்தன்
சிந்தைகலங்குதே	மாமி
தஞ்சமுநீயேயென்	மாமி-பெற்ற
தாயாருநீயேயென்	மாமி-நீ
வஞ்சனைசெய்யாதே	மாமி-யென்
மானங்காக்கவேணும்	மாமி-இவனைக்
கண்டவுடனேயென்	மாமி-யெந்தன்
கால்கள்நடுங்குதே	மாமி-உன்
அண்டையில்வந்தேனே	மாமி-யென்னை
ஆதரிக்கவேணும்	மாமி-நீ
காட்டிக்கொடாதேயென்	மாமி-என்னைக்
காப்பாற்றவேணுமே	மாமி-உந்தன்
வீட்டிலில்வந்தேனே	மாமி-என்னை
வெளியிலேதள்ளாதே	மாமி-நல்ல
பெண்ணாய்ப்பிறந்தாயே	மாமி-யென்போற்
பெண்ணையும்பெற்றாயே	மாமி-இந்த
மன்னரும்வேந்தர்க்கு	மாமி-இது
மரியாதையோசொல்லு	மாமி-நூறு
பிள்ளைகளைப்பெற்ற	மாமி-யென்னைப்
பேதகஞ்செய்யாதே	மாமி-என்னைத்
தள்ளிவிட்டாலேயோ	மாமி-இவன்
தள்ளிக்கொண்டுபோவான்	மாமி-யிப்போ
நம்பினேனுன்னையே	மாமி-யென்னை
நகைக்கப்பண்ணாதேயென்மாமி	மாமி-சும்மா

வெம்புதேயென்னுள்ளம்	மாமி-இந்த
வேலைகாக்கவேணும்	மாமி

காந்தாரி-துரோபதைக்குச்சொல்-விருத்தம்.

காகங்காரொன்றுலோடி கணவனைக்கட்டிக்கொண்டு
ஓகையாயழுதநீலி யுனையல்லால்வேறேயுண்டோ
வாகைமைத்துனன்மார்மற்று மாமனுமுற்றார்பெற்றார்
ஏகமாய்நிறைசபைக்கு யேகவொண்ணுதேபோடி.

(வசனம்) அடிகுடிப்பாயென்னடி ஆம்பிடையானையறியாமல் ஆயிரம்பே ருடனே போகிறவளொருத்தியாம் அவள் காகங்காரொன்று கத்தினால்அக்க னேயோடி ஆம்பிடையானை அப்பாவென்று கட்டிக் கொள்ளுவாளாம் அவ ளேநீ அதற்கென்னமாமன் மைத்துனன் உற்றார்பெற்றார் இருக்கிறசபைக்கு போகிறதற்கு என்னடி போடிபோ மாததங்கி.

துற்சாதனன்-துரோபதைக்குச்சொல்-விருத்தம்.

பிழையுடன்தினமுமைந்து பேருடன்போறவேசி
தழையுறுமன்னர்கூடுஞ் சபைக்குநீவரப்போகாதோ
குழையுறுய்குழைந்துசும்மா குலுக்கிறாய்செல்வங்கொஞ்சி
இழைகிறாயென்னடியுன் னெத்துனானறிவேன்வாடி

(வசனம்) அடி ஒருத்தரல்ல ஐந்துபேருடனே நாள்தோறும் இணங்கிகுளி ர்விட்டுப்போனதாசிதானேநீஎங்களண்ணன்முன்னே வாலாகாதாகுழைந் சிப்போகிறுயென்னடி நான் இந்தவித்தையெல்லாம் அறிவேன்வாடிவா.

துற்சாதனன்- துரோபதையைத்தொட வந்தபோது-துரோபதை.

சொல்வது-தரு-சங்கராபரணம்- டீசுரம்.

துரோகியிதுவென்ன	சொல்லடா-யென்னைத்	
தொடவேண்டாம்நீதூர	நில்லடா	
துரோகியென்தர்ம	துரைகளறிந்தாக்கால்	
அக்கப்போடடேச்சொன்ன	நாக்கையறுப்பாரோ	(துரோ)

துற்சாதனன்-சொல்லல்.

தொடவிழுக்காமல்நான்	போவேனோ-போனும்	
துரியோதனன்தம்பி	யாவனோ	
பட்டியுன்பாண்டவர்	பரதேசியானுரோ	
படிவாங்கிச்சோறுண்டடிமையாய்ப்	போனுரோ	(தொட)

துரோபதை-சொல்.

சக்கட்டமிங்கே	படிக்கிறாய்-உந்தன்	
சமர்த்தெல்லாஞ்சொல்லித்	துடிக்கிறாய்	
மூக்காலுங்காத	முழுகிக்குளித்தாலும்	
கொக்காகுமோபோடா	வக்காகுமோஅடா	(துரோ)

துச்சாதனன்-சொல்லல்.

என்னடிஎன்னமும் பேசுறாய்-உனக்
 கேற்றபடியெல்லாம் வீசுறாய்
மன்னிபுன்னிக்காலே பின்னிடாவிக்கொள்ள
 சின்னபின்னமாக முன்னும்பின்னுமாக (தொட்

துரோபதை-சொல்லல்.

முழுதுமென்றுமல்நீ மலைக்கிறாய்-வெறி
 முண்டைநாயைப்போல குலைக்கிறாய்
கழுதைக்குபதேசங் காதிலேசொன்னாலும்
 அவயக்குரலல்லாமலக்கில்லை யென்சொல்லாய் (துரோ)

துச்சாதனன்-சொல்லல்.

ஆட்டத்திலுன்னைத்தாத் தோற்றுரோ-நீ
 அடிமையாய்ப்போனதும் பார்த்தாயே
ஆட்டிவீட்டிப்பூச்சிக் காட்டிக்கொல்லாதேயென்
 வீட்டுக்குச்சொந்தவெள்ளாட்டியாய்ப் போனபின் (தொட்)

துச்சாதனன்-துரோபதைமயிரைத்தொட்டபோது-துரோபதை

புலம்பல்-தரு-கண்டா-இராகம்-மிசராதாளம்.

இளையோபாவிதெய்வமேயிந்த
 வலியாயத்தானுண்டோ தெய்வமே-எந்தன்
மன்னவர்கோதிமலர்சூடுங்கூந்தலை
 மடையன்தொடலாமோ தெய்வமே-எந்தன்
போர்வீரர்தொட்டுப்புகழுமென்கூந்தலை
 புலையன்தொடலாமோ தெய்வமே-எந்தன்
கன்னுளர்தொட்டுகேலிக்குமென்கூந்தலை
 கடையனுந்தொடலாமோ தெய்வமே-அந்த
குலவீரர்கூடிமுடிக்கின்றகூந்தலை
 மூடன்தொடலாமோ தெய்வமே-நல்ல
சத்தவீரர்மலர்சூடுமென்கூந்தலை
 துஷ்டன்தொடலாமோ தெய்வமே-நல்ல
மல்லிகைகுடிமணைக்கின்றகூந்தலை
 மண்மேற்புரளுதே தெய்வமே-நல்ல
சம்பங்கியென்னைந்தடவியகூந்தல்
 தரையிற்புரளுதே தெய்வமே-நல்ல
செப்பிட்டுவாரித்திகழுமென்கூந்தல்
 தெருவிற்புரளுதே . தெய்வமே

துச்சாதனன்சொல-விருத்தம்.

பஞ்சவர்கைகளுன்மேற் பட்டமாத்திரத்திற்பொல்லா
வஞ்சகியுன்றுடம்பு மணக்குமோவனர்க்குபோமோ

பிஞ்சியென்கைபட்டாலுன் பிணக்கெல்லாங்குலைந்துபோமோ
அஞ்சுடனாறாகட்டு மதற்கென்னவெழுந்துவாடி

(வ-ம்) ஓ-ஓ, என்னடி உன்னுடைய வெச்சக்கார ரைந்துபேருடையகையி
ன்பேரிலேபட்டமாத்திரத்தில்மகா கமகமவென்றுமணக்குமோபூரிக்குமோ
பிஞ்சியென்கைபட்டால் உன்தேவடியாள்பிணக்கெல்லாஞ் சிதறிப்போமோ
யதற்கென்ன ஐந்துபேருடன் ஆறுவதாயிருக்கட்டும் எழுந்துவாடிவா.

துரோபதைசொல்-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்-கண்ணிகள்.

பேசாதெல்லாம்பேசிப் பேய்போலத் துள்ளுறாய்
பெண்டுகள்மெச்சபெருமையைக் கொள்ளுறாய்
நீசனேநீதத்திலத்தில் விழுகிறாய்
நிந்தையென்றெண்ணாமல் நெருப்பில்விழுகிறாய்
பேதகனேதுஷ்டகாதகனேகெட்ட
சாதகனேநாணாபாதகனே அடா-சீச்சீபினத்தாதே
அதாதுஷ்டாசீச்சிபினத்தாதே

துச்சாதனன்சொல்-தரு.

மெத்தமெத்தத்துள்ளிவிழுகிறா யென்னடி
மேல்வரம்பெண்ணாமல்பேசுறா யென்னடி
கற்றசமர்த்தெல்லாங்காட்டுறா யென்னடி
கண்ணீருதிர்த்துக்கதறுறா யென்னடி
கத்துக்கள்ளிபோடி யெத்துக்கள்ளியிந்திர
சித்துக்கள்ளியடி-வித்தைக்கள்ளிசும்மா-நடந்துவாடி.
கொலுவுக்கு நடந்துவாடி

துரோபதைபுலம்பல்-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்-கண்ணிகள்.

ஐயையோபாவிதெய்வமேசாவித்த
அவதிப்படவிட்டாயோ தெய்வமே
ஐவர்க்குங்கைகொடுத்து அருமையாயிருந்தேனே
அதற்கோவிப்படிசெய்தாய் தெய்வமே
மணவாளருடன்கூடி மகிழ்ச்சியாய்விளையாடி
வலக்காரமாயிருந்தேனே தெய்வமே
வந்தவிடந்தனிலேயிந்தவிதியெனக்கு
வருமென்றறியேனே தெய்வமே

துச்சாதனன்சொல்-விருத்தம்.

வந்திடுமிடத்திற்பொல்லா மாரீதக்கள்ளிபட்டுச்
சிந்துபோனதாலென்ன சிணுங்கியழுவதென்ன
முந்திவில்வளைத்தபோது முடிமன்னர்சபைக்குநீதான்
வந்ததுமில்லையாசும்மா மசங்கிறுயெழுந்துவாடி

(வசனம்) வந்தவிடத்திலே யென்னடி பப்புச் சிந்திப்போனது ஆதியிலே வில்வளர்த்து மாலையிடுகிறபோது வந்தராஜாக்களெல்லாம் விழித்தகண் சிமிட்டாமல் பார்க்கும்படியாய் அந்தாசசபையிலேநின்று அங்ஙனே திரும்பி அங்கனேமுறிக்கி அங்கனேகுலுக்கி அங்கனேமினுக்கினதேவடியாள்தானே நீ இப்போது மாமன்மார் மைத்துனன்மார்களிருக்கிற சபைக்குவருகிறதற்குசும்மாய்மசக்குறாய் எழுந்துவாடிவா.

துரோபதைசொல்-கண்ணி.

பத்தினிவாக்குபலியாமற் — போகாது
பார்மன்னருக்கிந்த — துற்புத்தியாகாது
பத்தினிமூர்த்தாற் றனையும் — பொறுக்காது
வையுலர்நீங்குக்குத்தெய்வம் — வெறுக்காது
பட்டவனேகுறையிட்டவனேகிறை
விட்டவனேகடைகெட்டவனேஅடா — சிச்சிபினத்தாதே

துற்சாதனன்சொல் கண்ணி

பத்தினிவாக்குநான்பார்க்கிறேன் — வாவுந்தன்
பட்டிமிரட்டைமிரட்டாதே — வாவுந்தன்
வித்தைகள்சொல்லிவிளக்காதே — வாடிநீ
வெட்கீரிலேவீடுவேகாது — வாசும்மா
பாசிக்கிறாயென்னைத்தூசிக்கிறாயுன்னைப்
பூசிக்கிறாய்சும்மாரோசிக்குறாயடி — நடந்துவாடிவா

துரோபதை-புலம்பல்-இ-ம்-கண்டா-ஆதிதாளம்-கண்ணிகள்.

கொழுகொம்பிருக்கும்போதே கொடிவிழுந்ததைத்தாற்போல
குலையவிட்டாயோஐயோ — தெய்வமே-எந்தன்
கொற்றமன்னவருக்கும் மற்றபெரியோருக்கும்
குறையென்னசெய்தேனோ — தெய்வமே
ஒருதாயில்லாதவர்க்கு ஊரெல்லாந்தாயென்றசொல
உண்மையெனக்கில்லையோ — தெய்வமே
ஒருதுணையில்லாதவர்க்குத்திருவுளந்துணையென்றசொல்
உலகவார்த்தையும்பொய்யோ — தெய்வமே

துற்சாதனன்சொல்-விருத்தம்.

கணவனுக்குக்கலகீர்சிந்தி கதறியேயழுகின்றாய்நீ
ஒண்ணுக்குரொண்டுசொல்லி யுதாசினம்பேசுகின்றாய்
பெண்ணுக்குளுன்னைப்போலே பிரட்டுளதிருட்டுசிவி
மண்ணுக்குள்கண்டதில்லை மாரீசம்போதும்வாடி

(வசனம்) கண்ணுக்குக்கலநீர்சிந்தும்படியாயழுகிறாய் நானொன்றைச்சொன்னால் இரண்டாய்ச்சொல்லி எதிர்த்தெதிர்ந்துபோடுகிறாய்-அ-அ-ஆ-ஆ-ஓ-ஓ-ஓ உன்னுடைய திருட்டு மாரீசத்தனமும் இந்திரசித்துகளும் இந்தவித்தைகளும் எனக்கேகாட்டுறாய்டி எழுந்துவாடிவா.

துரோபதைசொல்-கண்ணி.

மயிரைப்பிடிக்கிறாய் ஐண்மே விழுக்கிறாய்
　வம்புகள்பேசியுன்வாயேன் புழுக்கிறாய்
உயிரைப்பறிக்கிறாய்ஒட்டாரங் காட்டுறாய்
　ஒருக்காலேயென்சும்மாயொடித்து முறிகிறாய்

ஓகோகெடுவாய்ஐயோகெடுவாய்
பிறகேகெடுவா இப்போகெடுவாய் ஐயையோபோடா
படுபாவிஉனக்கென்ன போங்காலமோபாவி

அற்சாதனன்-சொல்கண்ணி.

விண்ணாணம்பேசிமினுக்கிறாய் யென்னடி
　வேசிகள்போலே குலுக்கிறாய் யென்னடி
ஒண்ணுறுலெட்டாய்முடியுறு யென்னடி
　ஓகோகோசும்மாநொடிக்கிறு யென்னடி

ஒட்டாதேயுன்சொல்-கட்டாதேதென்சொல்
தட்டாதேசும்மா திட்டாதேயடி
பேசாமல்நீவாடி கொலுவுக்கு பேசாமல்நீவாடி.

துரோபதைபுலம்பல்- தரு-இ-ம்-கண்டா-சாப்புதாளம்.

பல்லவி.

ஆவிதியே ஐயையோ விதியே

அநுபல்லவி.

பாவிநானென்னபாவஞ் செய்தேனோ-இந்த
பாவிகையிற்சிக்கிப்பரதவிப் பதும் (ஆவிதி)

சரணங்கள்.

ஆருக்குநானொரு அக்கிரமஞ்செய் தேனோவிதியே-நான்
　ஆரையடித்துவலங்கோலஞ்செய் தேனோவிதியே
பாரினிலேஇந்தப்பாடுபடவோநான்
　பஞ்சபாண்டவருக்கும் பாரியாளானேனும் (ஆவிதி)

அற்சாதனன்சொல்-விருத்தம்.

நீலிகளானபேர்க்கு நிமையிலேகண்ணீரென்பார்
ஓலமிட்டழுமுனக்கு முடம்பெலாங்கண்ணீர்கண்டாய்
கோலங்கீழ்நுழையுமெந்தன் குணத்தையுமறிந்துயிந்திர
ஜாலஞ்செய்யாதேசும்மா தளுக்காதேயெழுந்துவாடி.

(வசனம்) ஆ-ஆ, நீலிக்கி நிமையிலேகண்ணீரென்று சொல்லுகிறதுஉனக்குஉள்ளங்கால் முதற்கொண்டு உச்சந்தலைவரைக்கும் கண்ணீரானால்அந்தநீலியும்உனக்கிணையல்லவே சும்மா அழுததினால் உன்னைவிட்டுப்போவேனோ நீபாயின்கீழே நுழைகிறவளென்றவளானால் நான்கோலத்தின்கீழே நுழைகிறவனென்றறியாயோ வாடிவா.

துரோபதைசொல்-கண்ணி.

பெண்ணுடன்கூடப்பிறந்தது யில்லையோ

பெண்சாதியைவைத்துவாழ்ந்தது மில்லையோ
தண்ணாருள்சுத்தநாயகனு மில்லையோ
தாயார்வயிற்றிற்பிறந்தது மில்லையோ
பட்டவனே துப-சிட்டவனேமுறை
விட்டவனேகேடுகெட்டவனே அடாபோடாபாவி

துற்சாதனன்சொல்-கண்ணி.

மாட்டுக்காரப்பயல்போலெண்ணி பேசாதே
மாதங்கிநீசும்மாய்ச்சொல்லெல்லாம் வீசாதே
சீட்டியாட்டியத்தனிட்டெல்லாங் காட்டாதே
நிமிஷம்போனால்மானம்விலைநிற்க மாட்டாதே
தளுக்காதேபேய்ப்போல்-குலுங்காதேகொஞ்சிக்
குலுக்காதேமிஞ்சிப்-பதுக்காதேயடி
பேசாமல்நீவாடிகொலுவுக்குப்பேசாமல்நீவாடி

துரோபதை-புலம்பல்.

ஆவிதியே - ஐயோவிதியே.

என்போலும்பெண்களுக்கிடரென்ன செய்தாயோவிதியே-இது
எந்தன்தலையிலெழுத்தின்படிதானோ விதியே
இன்பமாய்ப்பாஞ்சாலனென்றனைப்பெற்று
எடுத்துவளர்த்ததுமிதற்குத் தானோ (ஆவிதியே)
வல்லரவின்வாயில்தேரைபோலா னேனே விதியே-வேடன்
வலைபிடிக்கப்பட்டமான்போலுமா னேனே விதியே-இந்தப்
பெர்னிலாதவர்கூடப் புலையன்கையிற்சிக்கிப்
புலம்பிப்புலம்பிசும்மாய்ப்புலம்பிதவிப்பது (ஆவிதியே)

துற்சாதனன்சொல்-விருத்தம்.

விதிசெல்லவிதியோயாரால் வில்வளைத்திட்டபோது
மதியிலென்னண்ணனுக்கு மணமாலைசூட்டிடாயோ
கெதியில்லாபாண்டவரை கெதியென்றுநம்பிக்கெட்டாய்
இதினுடன்போமோயின்ன மிருக்கின்றதனைத்தம்வாடி

(வசனம்) ஆ-ஆ-விதியிலே என்னயிருக்குதடி எல்லாம்மதியினாலிருக்கின்றது ஆதியிலே வில்வளைத்து மாலையிடுகிறபோது இந்தஅர்ச்சுனராசனுக்குப் போட்டதாலல்லவோ எங்களண்ணன் துரியோதனமகா ராஜனுக்குப் போட்டுவிட்டால் இத்தனைபாடெல்லாம்வராதே பாண்டவர்கள்பாண்டவாளென்றுபாண்டவரைநம்பி கெட்டபடியினாலே இத்தனைபோச்சுதா இன்னம் அனேகமிருக்கின்றது எழுந்துவாடிவா.

துரோபதைசொல்-கண்ணி.

பாண்டவராலேநீபட்டு விழுவாயென்
பாவமிடித்துநீபாழாக வேபோவாய்
மூணடநரகத்தில்முழுகிக் கிடப்பாயுன்
மூர்க்கமெல்லாமப்போயார்மேல் விடுவாய்சும்மா

அலைக்காதேகெர்வம் கிலைக்காதேபேய்போல
மலைக்காதேநாய் போல்குலைக்காதே அடா
போடாபடுபாவி-உனக்கென்னபோங்காலமேபாவி

துற்சாதனன்-சொல்-கண்ணி.

மாண்டவர்பேச்சுமகளே முடிந்தது
பழியெல்லாமுந்தன்தலைமேல் விடிந்தது

தாண்டியென்னுள்ளந்தணலா யெரியுது
சபையிலேநீவந்தாலெல்லாந் தெரியுது

மடிக்காதே விங்கி-வெடிக்காதே-கல்வி
கொடிக்காதே சொல்லித்-துடிக்காதே அடி

நடந்து வாடி வாடி கொலுவுக்கு நடந்து வாடிவாடி

துரோபதைபுலம்பல்-இ-ம்-முகாரி ஏகதாளம்-கண்ணிகள்,

ஓகோயிதென்ன கொடுமையோ வையோ மன்னர்களே-ஒரு
கோதில்லாமன்னர்கள் நீதியிதுதானோ மன்னர்களே

வாகோ யிதுவோ மநுநீதியோவையோ மன்னர்களே-அபி
மானமுஞ்செங்கோல் நிதானமுமில்லையோ மன்னர்களே

பெண்ணைப்பெற்ற பெரியோர்களில்லையோ மன்னர்களே-என்னை
பேதகஞ்செய்தாற் பெண்பாதகமல்லவோ மன்னர்களே-ஒரு

பெண்ணுடன்கூடப் பிறந்தவரில்லையோ மன்னர்களே-ஒரு
பெண்ணாகப்பாரினில் பிறந்ததும்நான்தானோ மன்னர்களே
மனையாளுடன்கூடி வாழ்வாருமில்லையோ மன்னர்களே,பெண்
மானமற்றுலியார்க்கு மானமேயல்லவோ மன்னர்களே,,இந்த
அநியாயம்போலவே யவனியிலுமுண்டோ மன்னர்களே-இது
அரசாட்சிசெய்யு மரசர்க்குத்தர்ம்மமோ மன்னர்களே-எங்கள்
ஐயா துரோணரே அசுவத்தாமரேயென் ஐயமாரே-இந்த
அன்னீதம்போலவே யவனியிலுமுண்டோ ஐயமாரே-இந்த
பொய்யாதவேதம் புராணம்படித்தயென் ஐயமாரே-இந்த
பொல்லாங்கைப்போலவேபூமியிலுமுண்டோஎன் ஐயமாரேஎங்கள்
வையகம்போனாலும் வாழ்வெல்லாம்போனாலும் ஐயமாரே-இந்த
மன்னர்சபையிலென் மானம்போகலாமோ ஐயமாரே
மெய்யானமாமநு விக்கியானந்தேர்ந்தஎன் ஐயமாரே-எந்தன்
மேலென்னகுற்றம் விளங்கக்கண்டீரோஎன் ஐயமாரே
பாரம்பரியம் பலவுந்தெரிந்தயெந்தன் பாட்டனாரே-இந்தப்
பாவிகொடுமையை பார்த்திருக்கின்றீரோ பாட்டனாரே
தாரமென்றில்லாமல் தள்ளிவிட்டீர்களே பாட்டனாரே-அந்த
தன்மையினால்தயை தாட்சண்யமில்லையோ பாட்டனாரே
பெண்களறியாமலிருக்கின்ற பாட்டனாரே-உங்க
ளன்பில்லாப்போனாலும்பெண்பாவம்போகுமோ பாட்டனாரே-இந்த

உரகக்கொடியோ அரைக்கிடும்வார்த்தைக்கும் பாட்டனுரே நீ
புகன்பட்டிருக்குக்கவுன்னுள்ளங்குளிர்ந்ததோ பாட்டனுரே
ஆதரவாகயழைத்துவந்தீரேஎன் மாமனுரே-எந்த
அபிமானம்போகவலேயவிட்டீரோஎன் மாமனுரே
மாதாபிதாகுருநீயென்றிருந்தேனே மாமனுரே-என்னை
மன்னர்சபையில் வரவழைத்தீரோஎன் மாமனுரே
குருகுலமன்னர்குலமுறைகண்டஎன் மாமனுரே-உங்கள்
குலத்தினிலிந்தக் கொடுமையடுக்குமோ மாமனுரே
பெரியோரிருந்தும் பிழைகளைச்செய்தாலென் மாமனுரே-மழை
பெய்யுமோவையக முய்யுமோவையயோ மாமனுரே

பொதுவிருத்தம்-இ-ம்-தோடி.

கொஞ்சமுமிரக்கமில்லாக் கொற்றவன்சபையிலுள்ள
தஞ்சமென்பவரில்லாமல் தரையில்விழ்ந்தழுபாஞ்சாலி
கஞ்சமென்முகங்கள்வாடி கைகட்டியெதிரேநிற்கும்
பஞ்சபாண்டவரைப்பார்த்துப் பதறுவாள்கதறுவாளே,

(வ-ம்)அகோவெப்படியென்றால் தயைதாக்ஷண்ணியம் ஈவுஇரக்கம் யாதுமில்லாததுரியோதனன்சபையிலேதுரௌபதைபிரண்டழுதுபாண்டவர்களைப்பார்த்துதெய்வத்தைநினைத்துப்புலம்புகிறவிதங்காண்க.

துரௌபதைபுலம்பல்-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்கண்ணிகள்,

என்னசெய்வேனுனினி யெப்படியாறுவேன் தெய்வமே-ஓகோ
என்பிராணநாதருக் கிப்படிவந்ததோ தெய்வமே-ஒரு
துஞ்சியவஞ்சக துரோகமறியேமே தெய்வமே-ஓதர்ம
துரைகளுக்கித்தனை துன்பம்வரலாமோ தெய்வமே-ஐயோ
சத்தியமில்லையோ தர்மமுமில்லையோ தெய்வமே-ஓநிறை
சத்தியமும்நல்ல தர்மமும்பொய்த்ததோ தெய்வமே-ஓநல்ல
புத்திநெறியில்லா புல்லர்க்குக்காலமோ தெய்வமே-ஓஅந்தப்
புல்லர்கடத்தைக்குபூமிபொறுக்குமோ தெய்வமே-ஓஎன்னை

பாண்டவர்களைப்பார்த்துபுலம்பல்.

சின்னவயதினில் தேடிமாலையிட்டீர் பாவிகளா-இப்போ
தெருவிலேயேத் திகைக்கவிட்டீர்களே பாவிகளா-என்னை
கன்னிவயதிற் கல்யாணஞ்செய்தீரே பாவிகளா-இன்று
காட்டிக்கொடுத்துக் கடக்கப்போய்நின்றீரே பாவிகளா-என்னை
வர்ணக்கிளிபோலே வைத்திருந்தீர்களே பாவிகளா-எந்தன்
மானங்குலைய மரம்போலேநின்றீரே பாவிகளா-ஒரு
வர்ணக்கிளிக்குப்பால் வார்த்துவளர்த்திரோ பாவிகளா-பூனை
வாய்க்கிரையெடுத்தாப்போலாக்கிவிட்டீர்களே பாவிகளா-உங்கள்
வீரங்குலைந்ததோ வில்லுமுறிந்ததோ பாவிகளா-அந்த
மெய்க்கெட்டவேந்தன்முன் கைகட்டிநின்றீரே பாவிகளா-நல்ல
தாரத்தைவைத்துச் சபையிலேதோற்றாலும் பாவிகளா-உங்கள்
தாழ்வில்லாவீர தனத்தையுந்தோர்த்தீரோ பாவிகளா-தங்கள்

ஆதீனமெல்லாஞ்சூதாடிபறித்தாலும் பாவிகளா-உங்கள்
ஆண்மையைக்கூட அடித்துபறித்தாரோ பாவிகளா-இப்போ
நீதிநிலமை நிசமும்பொய் யாச்சுதோ பாவிகளா-யிந்த
நீசர்க்குக்கைகட்டிப் பேசவும்வாச்சுதோ பாவிகளா.

பீமன்தர்மருக்குச்சொல்-விருத்தம்.

சேயிழைதனையிழுத்து திகழ்சபைதனிலேவிட்ட
தீயவஞ்சகனாயென்கை தெண்டாயுதத்தினாலே
வாயினைபிளந்துகொத்தி மணிகூடலெடுத்துமன்னை
ஆயிரஞ்சுக்கலாக வடிக்கிறேன்பாராயண்ணே.

(வ-ம்)கேளும்அண்ணே நம்முடையமனையாளான துரோபதையை இந்தராஜசபையினில் பங்கப்படுத்திச் சபையினில் வரும்படியச்செய்தவனையும் இட்டுக்கொண்டு வந்தவனையும் வாயைப்பிளந்து மணிக்கூடலெடுத்து அவர்கள் மண்டையை ஆயிரஞ்சுக்கலாக இதோ அடிக்கிறேன் நீர்சும்மாயிரும் அண்ணாவே.

அர்ச்சுனன்-தர்மருக்குச்சொல்-விருத்தம்.

மானமில்லாமலிந்த மாதினையிழுத்துவந்த
ஈனரையென்கையம்பா லிட்சணத்தினிலேதானே
கானகத்தீப்பட்டாற்போற் கடிந்துநிர்த்தூளியாக
காணிதோவடிக்கிறேன்பார் தடங்கல்சொல்லாதேயண்ணே,

(வ-ம்)கேளும் என்னண்ணாவே நம்முடைய மனையாளான துரோபதையை இந்தராசசபைக்கு வரும்படியாய்ச்செய்த துஷ்டனைசெங்காடுதீப்பட்டாப்போலே நிர்த்தூளிபடலமாக இதோ அடிக்கிறேன்நீர்தடங்கல்சொல்லாதே அண்ணாவே.

தர்மர்-தம்பிமாருக்குச்சொல்-விருத்தம்.

சினத்தமன்னவர்கள்வாழ்வுஞ் செல்வமுஞ்சிலதுகாலஞ்
குனித்தியதுன்பம்வந்து குறைவதுசிலதுகாலம்
அனித்தியகாலம்வந்தா லடியோடேபோகுங்கண்டாய்
இனித்தியதம்பிமாரே யின்னமும்பொருங்களப்பா.

(வம்)கேளுங்கள் தம்பிமார்களே ராஜாக்களுடைய செல்வமும்செருக்கும் ஒடுங்கிறது்சிலதுகால்ம் ஒடுங்குகிறது சிலதுகாலம் அதுகளுக்கு அனித்தியகாலம்சம்பவித்தால்அடியோடேபோய்விடும்இன்னமும் பொருங்களப்பா.

அர்ச்சுனன்-துரோபதையைப்பார்த்துச்சொல்விருத்தம்.

மைச்சினமாமன்மார்கல் மாதவமுனிவருந்தன்
வெச்சக்காரர்களாமைவர் மேவியசபையில்நிற்க
அச்சமென்னடியுனக்கு வழிகிறபொழுதிப்போருய்
கைச்சனிவேசியர்க்குக் கண்ணீர்க்குக்குறைச்சலுண்டோ.

(வம்)அந்தமச்சினமார் மாமன்மார் குருக்கள்மார் உன் வெச்சக்கா

ர்கள் ஐந்துபேரும் இவர்கள்தானே இச்சபையி லிருக்கிறார்கள் இங்கே உன்னைவிட்டுக்கொண்டு வந்ததில் உன்மானத்துக்கு குறைவு வந்து விட்டதா என்னடி சும்மா அழுதழுது ஒழுகிப்போகிறாய் கைகண்டதாசிக்குக் கண்ணீரில் குறைச்சலா யில்லடி நில்.

விகர்ணன்சொல்-விருத்தம்.

மன்னூற்றும்பாவைதன்னைப் பங்கமாய்ப்பேசக்கேட்டு
பன்னூற்றுந்தெரிந்தோரெல்லாம் பேசாமலிருக்கலுற்றீர்
தொண்ணூற்றொன்பதுபேர்பின்னே தோன்றியவிகர்ணன்சொல்லும்
எண்ணூற்றும்வார்த்தையுங்கட் கேற்குமோயேர்த்திடாதே.

(வம்)கேளும்ராஜாக்களே மகாபதிவிரதையான துரோபதையை இந்தச் சபையிலே பங்கமாய்ச்சொல்ல அதைக்கேட்டு எல்லாந்தெரிந்த பெரியோர்கள் யாவரும் ஊமைகள்போல வாயைமூடிக் கொண்டு சும்மாயிருக்கிறீர்களே துரியோதனன் முதலாகிய தொண்ணூற்றொன்பதுபேருக்கு பின்னே பிறந்த விகர்ணனாகிய ஒருசிறுவனான நான்சொல்லும்வார்த்தை உங்கள் செவிக்கு ஏற்குமோ ஏற்காது ஆகிலுஞ்சொல்லுகிறேன் கேளுங்கள்.

இதுவும்விகர்ணன்சொல்-விருத்தம்.

ஐந்துபேர்தமக்கோமான மனைவர்க்குமில்லையாமானம்
இன்சொல்சேர்மனையாளென்ப தெல்லோர்க்குமுண்டுகண்டாய்
மிஞ்சிநல்லருந்ததிக்கு மிகுந்தகற்புடையாள்தன்னை
கொஞ்சமாய்ச்சொல்லும்வார்த்தை கொற்றவர்க்கடுத்திடாதே

(வம்)கேளுங்கள் மகாசபையோர்களே அந்தப்பாண்டவர்கள் ஐந்துபேர்க்குத்தானுமானம் அந்தமான மனைவர்க்குமில்லையா அவனவன்பெண்சாதியைவைத்து வாழ்கிறவனே யல்லாமல் வேறல்லவே அந்த அருந்ததிக்குச் சமானமான மகாபதிவிரதையான துரோபதையை இந்த ராஜசபையிலே வேசியென்றும் தாசியென்றும் பேசுகிறது ராசாக்களுக்கு தர்ம்மா நீதியாகுமையோ என்னபாவம்.

துரோபதைசொல்-விருத்தம்.

துன்னியசபையிலுள்ள தொழும்பெரியோரேபோற்றி
என்னைமுன்தோற்றபின்பு யெழிலவர்தோத்திட்டாரோ
மன்னவர்முன்னேதோத்து மற்றென்னைத்தோத்திட்டாரோ
கண்ணிலேநதிக்கண்டோர்கள் ஞாயமாய்ப்பேசிவீரோ

(வம்)கேளுங்கள் இந்தச் சபையிலுள்ள புண்ணியவான்களே பாண்டவர்கள் முன்னேதோத்து பிறகு என்னைத் தோத்தார்களா என்னை முன்தோத்து ஐந்துபேரும் தோத்தார்களா இதிலே கண்ணாற் கண்டதை நியாயமாய்ப் பேசவேணும் பெரியோர்களே.

விகர்ணன்சொல்-விருத்தம்,

நிலத்தினிற்குரியோரான நெடுமுடியையவர்தேவி
கலக்கமுற்றழுதுவிம்மிக் கதறியேபுலம்பிக்கேட்டாள்

நலத்தினில்மிகுந்தநீதி ஞாயத்தைத்தெரிந்தநல்லோர்
குலத்தினிற்பிறந்தோரானாற் கூசாமற்பேசிடாரோ.

(வ-ம்) இந்தக்கடல்சூழ்ந்தபூமிக்கெல்லாம்அதிபதியானபாண்டவர்களுக்கு அபிஷேகபத்தினியான துரோபதையானவள் இந்தசபையில் முறையிட்டு அலறிவிம்மி அழுது நியாயத்தைக்கேட்டாள்நீங்கள் சத்தியம் தயைதாட்சண்ணியம் நீதியுள்ளவர்களானால் நற்குலத்திற்பிறந்தவர்களானால் எதார்த்தத்தை பேசலாம் சபையோர்களே.

இதுவும்விகர்ணன்சொல்-விருத்தம்.

தன்னுடைக்கற்புடையாளிங்கே நடந்ததைக்கேட்டாலெங்கள்
அண்ணன்தன்முகத்துக்கஞ்சி யனீதஞ்சொல்லப்போனீர்
மண்ணின்மேல்நின்றுபெண்ணின் வழக்கோரஞ்சொல்லலாகாது
கண்ணினிற்கண்டதனையெள்ளுக் காய்ப்பிளந்தாற்போற்சொல்வீர்.

(வ-ம்) அந்தமகா பதிவிரதையான துரோபதைமுறையிட்டுஇந்தச் சபையில் நடந்தகாரியத்தை யெதார்த்தமாய்ச் சொல்லச்சொன்னால் எங்களண்ணன் துரியோதனன்மகா ராசன்முகத்துக்கஞ்சி அநீதியமாகச்சொல்லப்போறீர்கள் மண்ணின்மேல்நின்று வழக்கோரஞ்சொல்லலாகாது கண்ணிற்கண்டதை எள்ளுக்காய்ப் பிளந்தாற்போல்சொல்லுங்கள் பெரியோர்களே,

சகுனி-விகர்ணனுக்குச்சொல்-விருத்தம்.

கிரிகைகெட்டவனே நாற்றைக் கெடுத்ததுகுறுணியென்று
துரையுடனுலகந்தன்னிற் சொல்லுவாரதனைப்போல
விரல்மிகும் நூறுபேரில் விஷத்தைப்போல்நீயொருத்தன்
குறைசெய்யப்பிறந்தபோதே குலமினிவிளங்குமப்பா

(வ-ம்) கேளாய்என் இளையமருமகனான விகர்ணனே நாற்றைக்கெடுத்ததுகுறுணியென்று உலகத்தில்சொல்லுவார்கள் அதுபோல நூறு பேரில் நீயொருத்தன் இந்தக்குலத்தைக் கெடுக்கப்பிறந்தாய்உன்னால் உங்கவண்ணன்பேர் நன்றாய்விளங்கும்.

விகாணன்சொல்-விருத்தம்.

பார்புகழ்தர்மராசன் பதைத்தவெப்பொருளுந்தோற்று
சார்புதம்பியரைத்தோற்று தன்னையுந்தோற்றவிட்டு
சோர்வுகொண் டொருவருக்குத் தொண்டனாய்ப்போனபின்பு
கார்குழலிவளைத்தோற்கத் தகாதென்றுசொல்லலானோ,

(வ-ம்) கேளுங்கள்ராசாக்களே இந்ததுரோபதை தன்னைத்தோத்த பிறகுஐந்துபேருந்தோத்தார்களா அல்லது ஐந்துபேருந்தோத்தபிறகு தன்னைத்தோத்தார்களாவென்று கேட்டால்நீங்கள் பேசாமலிருப்பது தருமமா தருமராசன் தன்னுடைய ராஜ்யாதிகாரங்களெல்லாமுன்னே தோ

த்தபிறகு தம்பிமாரையுங்கோத்தான் பின்பு தானுங்கோத்து அடிமை யாய்ப்போனான் ஒருவருக்கு அடிமையாய்ப்போனவன் இந்த துரோப தையைவைத்து ஆடினது தருமமல்லதுரோபதையை தோத்ததில் ஜயமல்லவென்று சொல்லுங்கள் சபையிலுள்ள பெரியோர்களே.

விதுரன்சொல்-விருத்தம்.

நரைத்தென்னவயதுசென்று காட்டடவிருந்தாலென்ன
தரித்திடுஞ்சாஸ்திரங்கள் சதகோடிகற்றுமென்ன
பெருத்திடுஞ்சிறியோராலும் புத்தியுள்ளவனேதக்கோன்
இக்கவிகர்னன்வார்த்தை விதித்தான்மெய்யேமெய்யே,

(வ-ம்) காம்நரைத்துப்போனதினுலென்ன நாட்டமிருந்தாலெ ன்ன அநேகஞ்சாஸ்திரங்கள் படித்தாலென்ன சிறுபிள்ளைகளானு லும் புத்தியுள்ளவனே பெரியவன் இக்கவிகர்னன்சொன்னவார்த்தை மெய்சரி நன்றாய்ச்சொன்னான்,

கர்னன்-விகர்னனுக்குச்சொல்-விருத்தம்.

ஒஞ்சரிவழக்குச்சொல்ல வுன்னையாரழைத்தாரிங்கே
நெஞ்சொம்நீதிசாஸ்திரம் நீதானுகற்றுக்கொண்டாய்
கஞ்சிலேவடிக்கக்கற்றாய் கற்றோர்போல்பேசலுற்றாய்
பஞ்சிலேபழுத்தப்பாராய் பேசாதேநீவிகர்னு.

(வ-ம்) ஓய்தம்பிவிகர்னு ஒருதலைவழக்குப்பேசவேண்டாம் உன்னை அழைக்கவில்லை தர்மசாஸ்திரமெல்லாம நீதானுபடித்துக் கொண்டாய் சபையிலுன்னைவிட பெரியவர்களில்லையா வடித்தகஞ்சியிலே வடிக்க வும் கல்லானைகற்றுபேசவும் பஞ்சிலேபழுத்தவன் நீயொருத்தன் புற ப்பட்டாய் பேசாமல்சும்மாயிரு விகர்னு.

இதுவுங்கர்னன்-சபையிலுள்ளவர்களுக்குச்சொல்-விருத்தம்.

தெரியாமல்சிறுவிகர்னன் செப்பியவார்த்தைதன்னை
பெரியோரென்றுரைத்தீர்நல்லபெரியோருங்களைப்போலுண்டோ
சரிதானுவழக்கிலுள்ள சங்கற்பந்தெரிந்திட்டீரா
வரிவாகயிதோநான்கேட்கும் வார்த்தைக்குத்திரஞ்சொல்வீரே,

(வ-ம்) கேளுங்கள் ராசாக்களே அறியாதபிள்ளை இக்கவிகர்னன் இவ ன்வெகு ஞாயத்தை சொன்னுனென்று அவனை மெச்சிக்கொண்டீரோ தே இவனைவிடநீங்கள் யோக்கியர்தான்-ஆ-ஆ-இந்தவழக்கிலுள்ளகு ட்சத்தைத் தெரிந்துகொண்டீர்களா இதோநான் கேட்கிற கேழ்விக்கு உத்திரவுசொல்லுங்கள் பார்ப்போம்,

இதுவுங்கர்னன்சொல்-விருத்தம்.

தனக்குள்ளபொருளுந்தம்பி மாரையுந்தன்னையுங்கோத்தா
புனக்கெளியவர்படைத்தபொருளெல்லாம்வேறேயுண்டோ
குனிக்கவோர்மாத்தைநாடிக் குறித்தாடிவெல்த்துகொண்டால்
கனக்கமேதறையுமூ[illegible]ஞ்ச கா[illegible]லேவேறுசொல்வீர்

(வ-ம்)கேளுங்கள் இச்சபையில்வந்திருக்கும் உரியவர்களாகிய பெரி
வர்களே தனக்குள்ள பொருள்களெல்லாந் தோற்று தம்பிமாரையுந்
தோற்றுப்போனால்இந்த துரோபதையை அவர்களுக் குட்பட்ட பொரு
ளேயல்லாமற்படிக்குவேறுண்டோகல்லது ஒருமரத்தைக்குறித் துக்குத்தா
டிகெலித்துக்கொண்டால் அதில் தழைவேறு பூவேறு பிஞ்சுவேறு கா
ய்வேறுகனிவேறு மளாமளா கன்றுய்ச்சொல்லீர்கள்.

விகர்ணன்சொல்-ஆசிரியவிருத்தம்.

தடைக்கஞ்சாபாம்புக்கோராணையில்லை
சாந்தமில்லாமூர்க்கருக்கோ தருமமில்லை
மடைக்கஞ்சாவெள்ளமதை மறிப்பாரில்லை
மனம்போனபோக்குக்கோர் வழியொன்றில்லை
புடைக்கஞ்சாவுங்களுக்கும் புத்தியில்லை
பூவைதன்னீர்விருதாவிற்போவதில்லை
சடைக்கெஞ்சாக்குடியரைப்போற் சேர்ந்திரிந்தச்
சமஸ்தானத்தைக்கெடுக்கத் தலைப்பட்டீரே.

(வ-ம்) தடைக்கஞ்சா பாம்புக்கு ஆணையில்லை மூர்க்கருக்குத் தர்ம
சிந்தையில்லை அணைகடந்த வெள்ளத்தை மறிப்பாரில்லை மனம்போன
போக்குக்குவழியில்லை பழிக்கஞ்சாதவுங்களுக்குப்புத்தியில்லை இந்தப்
பதிவிரதைகண்ணீர்பழுதாய்ப்போகிறதில்லைகெஞ்சாகுடியரைப்போ
ல்நீங்கள் இரண்டுபேருஞ்சேர்ந்து இந்தசமஸ்தானத்தைக் கெடுக்கக்
கங்கணங் கட்டிக்கொண்டிருக்கின்றீர்கள்.

கர்ணன்-விகர்ணனுக்குச்சொல்-விருத்தம்.

என்னடாவிகர்ணநீதா விரைசமைதனிலேநின்று
நன்றிசேர்சமத்தனென்று நல்லுரைபகர்ந்திட்டாய்நீ
துன்னலர்மாலைமார்பன் துரியோதனமகாராஜன்
மின்னிடைவிழியாள்தன்னை விட்டிடான்கண்டிடாயோ.

(வ-ம்) ஆனால்கேளடாவிகர்ணா நீ யென்னசொன்னாலுந் துரியோத
னமகாராசன் துரோபதையை விடப்போகிறதில்லைசும்மாயிருவிகர்ணா

துரியோதனன்-துற்சாதனனுக்குச்சொல்-விருத்தம்,

இத்தனைப்பேச்சென்னடா வாடாதம்பி
யெழில்துற்சாதனப்புலியே யென்சொற்கேளாய்
மெத்தபுத்திசாலியிந்த விகர்ணனென்றும்
மென்மேலுந்தலையசைத்த வேந்தர்முன்னே
பித்தனென்னும்பாண்டவர்கள் துகில்முன்வாங்கி
பேதித்தபடிவழக்குப் பேசுமிந்த
சித்தினியையெதிர்நிறுத்தி மானபங்கந்
தெரிந்திடவேயிவள் துகிலை யுரிந்திடாயே

(வ-ம்) அடாதம்பிதுற்சாதனா இக்கேளா அந்தவிகர்ணன் மெத்தபு
த்திசாலியென்று மெச்சிக்கொண்டார்களே இந்தராஜாக்களிவர்கள்பார்

க்கும்படியாய் அந்தப்பாண்டவர்களைந்துபேருடைய வஸ்திரத்தைகழன்றெவாங்கிச்சொன்னீ இப்போது எதிர்வழக்குப் பேசவந்தானே இவனை நிறுத்தி அவன்சேலையை உரியடா தம்பி.

விதூரன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

மன்னியவிகர்னன்சொல்லை மறுத்தென்றதுரியாகேளாய்
என்னமோகெடிகால மிசைந்ததுஉங்களுக்கு
கன்னியைபங்கஞ்செய்யக் கருத்தினிற்நினைத்தபோதே
மன்னுமுன்குடிக்குத்தீங்கு வந்ததுவந்ததப்பா

(வ-ம்) அடா துரியோதனா உனக்குஎன்னமோ பொல்லாதகாலஞ் சம்பவித்தது அந்தமகாபத்தினியான துரோபதையை மானபங்கஞ்செய்யவேண்டுமென்று எப்போது நினைத்தாயோ அப்போதேஉன்குடிக்கு அனர்த்தகாலம்வந்தது சொன்னேன்சொன்னேன் துரியோதனா.

விதூரன்-கர்ன்னனுக்குச்சொல்-விருத்தம்,

தன்பதிமுலகங்காக்குந் தார்மன்னரிடத்திருந்து
புண்படுங்கோலைப்போலப் புகலின்றகர்னாநீதான்
எண்படுநூல்கடேர்ந்து பிழிவழக்குரைக்கலுற்றாய்
பெண்பழிதேடிக்கொண்டோ பெரியவனாகப்போறாய்.

(வ-ம்) கேளுங்கர்னா தர்மசாஸ்திர மெல்லாம் பார்த்திருந்தும்ராசாக்களிடத்திலிருந்தும் புண்ணில் கோலிட்டாற்போல் இருவழக்குபேசுகிறாய் பெண்ணைப்பார்த்தால் பேயுமிரங்குமென்பார்கள் அவ்வளவுமில்லாமல் ஒருபெண்பிள்ளையின்பேரில் உன்பிரதாபமெல்லாங் காட்டுகிறாய் இதனாலேயா பெரியவனாகப் போறாய்.

கர்னன்-விதூரனுக்குச்சொல்-விருத்தம்.

பெரியோரைத்துணைக்கொள்ளென்று பேசினப்படியேநீங்கள்
உரியோரென்றிங்கேசேர்ந்து உதவியில்லாமற்போச்சு
பிரியவுட்சுவரிருக்கப் புறஞ்சுவர்பூசப்பட்ட
சரியானபெரியோர்நீதான் சமாசுவன்றாகச்சொன்னீர்.

(வ-ம்)கேளும் விதூரமகாராசனேபெரியோரைத் துணைக்கொள் ளென்றல்லவா வேதஞ்சொல்லுகிறது அப்படி நீங்கள்பெரியோர்களென்றும் உங்களைச்சேர்த்ததற்கு ஒரு வுதவியுமில்லாமற் போச்சுது அதிலேயும் உட்சுவரிருக்கப் புறஞ்சுவர் தீத்தப்புறப்பட்டீர் சரிதானபெரியவர்தான்,

விதூரன்-கர்னனுக்குச்சொல்-விருத்தம்.

பொய்சாட்சி சொன்னவருஞ்சபையிலொரு தலைவழக்காய்ப்புகன்றபேரும், பைசாசமாம்நரகில் வீழ்வனென்றநான்முறையைப்பறக்கடித்தாய்,மெய்சாந்தவிகர்ணனையு மெடுத்தெறிந்தாய அவிலாவிகாதஞ்சொன்னாய், பொய்சாருவழக்குரைத்தாய் அறிவனைவையுங் கெடுத்தாய் புகழ்நாகர்னா.

(வ-ம்) கேளும்கர்ண பொய்சாட்சி சொன்னவரும் சபையில் ஒரு தலைவழக்காகப்பேசினவனும் நரகத்திலடைவார்களென்று சொல்லப்பட்ட தருமசாஸ்திரத்தை தள்ளிபோட்டாய் அந்த விகர்னன் சொல்லும் வார்த்தையும் எடுத்தெரிந்துபோட்டாய் அந்த துரியோதனன் புத்தியையும் கெடுத்தாய் இப்படிப்பட்ட துர்கடத்தையினலேயா நல்லவனுகப் போகிறாய் கர்ண-

துரியன் விதுரனுக்குச்சொல்-விருத்தம்.

நல்லதுசிற்றப்பாவுன் ஞாயத்தைநிறுத்திவையும்
எல்லையில்கர்னன்சொல்லு மென்சொல்லுமுனக்கொவ்வாது
வல்லதுற்சாதனகேள் வலியவெம்புலிபோற்பற்றி
சொல்லுமிவ்விவளுடுத்தத் துகலைநீயுரிந்திட்டாயே,

(வ-ம்)கேளுஞ்சிற்றப்பா கர்னன்சொல்லும் என்சொல்லும் உன்செவிக்கேற்கப்போகுதா உன்னுடைய நியாயம்-அங்கேயிருக்கட்டும்அடா துற்சாதனா இவளுடுத்தியிருக்குஞ் சேலையைஉரியடாஎன்றுமுன்னே நான்சொன்னேனே இன்னமுந்தாமிஷமா தம்பி துற்சாதனா.

துற்சாதனன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

உரிக்கிடுஞ்சேலையென்றே யுரைத்தவென்னண்ணனேகேளீர்
மரிந்திநீசொல்லுமுன்னே பதைக்குதேயெந்தன்கைகால்
தெரிந்திடசபையிலுள்ளோர் சிரித்திடவைவர்நெஞ்சம்
கரிந்திடவிவள்தன்சேலை கடுசெனவுரிவேன்பாராய.

(வ-ம்) கேளும் என்னண்ணனே நீசொல்லுகிறதற்குமுன் என்கைகாலும்பதைக்குது அப்படியே உரிந்துபோடுகிறேன் பாரும்.

துரோபதையைத் துற்சாதனன் மேடையின்மேல் இழுக்கிறகண்ணி.

பாங்காயென்னண்ணனேப்பார்த்துநகைத்தவள்
ஆங்காரமிப்போ அறுக்கிறேன்வாடி.
தாங்காமலிந்தசபையிலேநீகேட்ட
தீங்காம்வழக்கைநான் தீர்க்கிறேன்வாடி.
வேணமட்டுஞ்சும்மா விம்புபேசுமுந்தன்
ஆணவமிங்கே அடக்கிறேன்வாடி.
நாணயமாகவுன்துகிலெல்லாம்
காணவேயெல்லோர்க்குங் காட்டுறேன்வாடி.

துரௌபதை-மேடையின்மேல்-போகிறபோது

சொல்விருத்தம்-இ-ம்-முகாரி.

பெரியோரில்லையோபெண்களையும்பெற்றாரில்லையோமானமுள்ள
உரியோரில்லையோவெங்களுக்கிங்கொருதிக்கில்லையோநீதிசொல்ல
அரியோரில்லையோவொருவருக்குமருளில்லையோயாதொன்றும்
தெரியாயேழையென் பக்கில் தெய்வமில்லையோலுவிதியே.

(வ-ம்.)ஹரிஹரிகைவருத்தவாசா முகுந்தா அன்பனாக்கார்க்குங்கோவிந்தா இத்தமகாசபையினில் மனுக்கியாநக்தெரிந்த பெரியோர்களில்

லையா என்போலும் பெண்களைப்பெற்றோரில்லையா மானுபிமான மு டைய சுற்றத்தாரில்லையா நன்மை தீமையென்னும் நீதிமொழி களைச் சொல்லும்படியான அர்தாகிய கனவான்களில்லையா ஒருவருக்காலதா அருளில்லையா எதுந்தெரியாத ஏழையான என்பங்கில் தெய்வமுமில் லையாவிதியே.

துற்சாதனன்சொல்-கண்ணி.

தெய்வந்தானென்னசெய்யுமோபார்ப்போமுன்
சித்துவித்தையிங்கேகாட்டாதே
சேலையுரிந்திந்த சபையிலேநானுன்னை
திகம்பரமாக்காமல் விடுவேனோ

துரௌபதை-ஸ்ரீகிருஷ்ணசுவாமியைத்துதிசெய்கிறபுலம்பல்

தரு-இ-ம்-கண்டா-ஆதிதாளம்.

பல்லவி.

மாயவனேவைகுந்தவாசா எந்தன்-மானங்காக்கவேணுஞ்சர்வேசா

அநுபல்லவி.

ஆயநான்மறைதேடும் ஆதிமூலப்பொருளே
அபயமபயமுந்தன் உபயபாதமேகெதிஹரி(மாயவனே)

துற்சாதனன்சொல்கண்ணி

நேயமாகஆதி மாயனென்றுசொன்னால்
நிலைநிற்குமோமானமென்றெண்ணாதே ஒரு
நிமிஷத்திலேயிந்த அரசர்க்குள்ளேயுன்னை
நிர்வாணமாக்கிறேன் பாரடி.

துரௌபதைசொல்-தரு.

கருதுமெய்யாருக்கெல்லா மெய்யா-என்னைக்
கைசோரவிட்டிடாதே ஐயா
விரிகடல்மேற்றுயின்ற தூய்யா-இந்த
வேளைகாத்தருள்செய்வாய் ஐயாஹரி(மாயவ)

துற்சாதனன்சொல்-கண்ணி

உரிந்தசேலையெல்லா முரிந்துகொண்டேயின்ன
மொருசுத்திருக்குது பாரடி-இந்த
ஒருசுத்தும்போனாலுன் பரிசுத்தமெல்லாமின்
குடனேவெட்டவெளி யாமடி

துற்சாதனன்சொல்-விருத்தம்.

சேலைநாமுரிவோமென்று திருடிநீயறிவையோதான்
மூலையிலொருவுள்ளாடை முன்னமேயுடுத்திக்கொண்டாய்
எலநீயுடுத்தவாடை யிதனையுமுரிந்துகொண்டால்
நீவிகள்குருவேயப்பால் நீயென்னசெய்யப்போறாய்,
(வ-ம்) ஆ-ஆ, இதென்னஆச்சரியமடி இந்தச்சபையில் உன்தங்கை

நாங்கள்உரிவோமென்று உனக்குத்தெரியுமா சேலைக்குள் ஒருசேலைக் கட்டிக்கொண்டாயே இதையும் உரிந்துப்போட்டா பின்னொருசே லைகொடுப்பேனென்று நினைத்தையோ என்னடி உன்புத்தி.

வீமன் - துரியோதனனுக்குச்சொல் - விருத்தம்

பதித்ததுரௌபதையைத்தீண்டி வஸ்திரங்களையுநாங்கள்
எதிர்த்துமைப்பொருளாயெண்ணியிருப்பமோதுரியோதனாய்
குதித்தவிகர்ணன்போக தொண்ணூற்றொன்பதுபேர்தன்னைச்
சிதைக்கிறேனெமபுரத்திற் சேர்க்கிறேனெழுந்துவாரீர்.

(வம்) அடா துரியோதனா இந்தராசசபையிலே துரௌபதையைநிரு த்திவஸ்திரபங்கம் பண்ணும்படிநாங்கள் பார்த்திருப்போமா எங்க ளண்ணன் சொல்லுக்கு அடங்கியிருந்தோமேயல்லாமல் நீங்களெனவரு ம் ஒருபொருட்டா இப்பவும்இந்தவிகர்ணன் ஒருத்தன்தவிரமற்றதொ ண்ணூற்றொன்பது பேரையும் எமபுரத்துக்கு இப்போதனுப்பி வைக் கிறேன் எழுந்திருந்து வாங்களடா.

தருமர் - பீமனுக்குச்சொல் - கவி.

மறுத்தேனென்றுமறுகாதே, கருத்தேதுகையில்கதைகொண்டாய்
ஒறுத்தால்தெய்வமொன்றுதோ, பொறுத்தாயின்னம்பொறுபீமா.

துரௌபதைசொல் - முன்தரு.

தேவாதிதேவனே — யின்னேரம்-என்னைத்
திருக்கண்பார்த்தாலே — யுபகாரம்
பாவிநான்செய்த — அபசாரம்-பொறுத்துப்
பரிவாயிரட்சிப்ப — துன்பாரம்அரி(மாயவனே)

துச்சாதனன்சொல் - கண்ணி,

மலைபெருமெய்யென்று — மெச்சிக்கொள்ள-வுந்தன்
பத்தினித்தனமிங்கே — காட்டாதே-யிப்போ
பரிந்துன்சேலையை — யுரிந்துசபைதனிலே
யவிழ்க்கக்கெடுக்கிறேன் — பாரடி

துரௌபதைசொல் - முன்தரு.

ஆனைமுறையிடவே — வந்தாய்-மடுவில்
அன்றுமுதலையைப் — பிளந்தாய்
ஒதுங்கக்கஜேந்திரனைப் — புரந்தாய்-இனி
புனையல்லாற்றிக்கில்லை — மறந்தாய்அரி(மாயவனே)

துச்சாதனன்சொல் - கண்ணி.

மானாகதுகில்வர — மந்திரங்கற்றுயுன்
மந்திரவித்தைக்குச் — சலிப்பேனோ-கமலாய.
வாருந்துகிலெல்லாம் — வாங்கிவாங்கியுந்தன்
பாரங்குலைக்கிறேனி — பாரடி

ள்மேலே சந்தோஷப்படுகிற படியினாலே மாளாத் துகில் இவளுக்கு வளர்ந்தது ஆனபடியினாலே எனக்கிவள் என்னகுற்றஞ் செய்திருந்த போதிலும் பொறுத்துக் கொள்ளத்தான் வேணும் இடைவென்றுவந்து என்தொடைமேலே உட்கார்ந்தால் பொறுத்துக் கொள்ளுகிற தற்குச் சம்சயமில்லை நல்லது நீயாகிலும் எடுத்துவந்து என் தொடை மேலே உட்காரவையடா தம்பிதுற்சாதனா.

விகர்ணன் துரியோதனனுக்குச்சொல்-ஆசிரியவிருத்தம்.

தாவியெதிர்வரு மெமனைத்தடுக்கலாகும்
  தலைகொண்டபடுவிஷத்தை யிறக்கலாகும்
மேவுவடவாக்கினையை யவிக்கலாகும்
  மேல்வரும்பிரம்மாஸ்திரத்தை விலக்கலாகும்
ஆவதுகேள்கற்புடையோர் சபித்தால்தீர்க்க
  ஆதிமும்மூர்த்திகளாலு மாகாதண்ணே
பாவையிவள் மகிமைதனைக் கண்ணிற்கண்டும்
  பழிதேடிக்கொள்வதற்கோ யதைக்கின்றீரே.

(வ-ம்) கேளும் அண்ணே, கொல்லவருகிற எமனைத் தடுக்கலாம், தலைக்கேறின விஷத்தையு மிறக்கலாம், வடவாமுகாக்கினியையும், விலக்கலாம் மேலேவரும் பிரம்மாஸ் திரத்தையும் விலக்கலாம் கற்புடைய ஸ்திரீகள் மனம்நொந்து அவர்கள்வாக்கினாலே ஒன்றைச்சொன்னால் அதைதடுக்க, மும்மூர்த்திகளாலு மாகாது, இவர்கள் மகிமையைக்கண்ணாலேகண்டு பழியைத்தேடிக் கொள்ளலாமா அண்ணே.

துரோபதைக்கும்-துரியனுக்கும்-தர்க்கம்.

தரு-காம்போதி-மிசுரதாளம்.

ஒருமைத்தராணியர்க்குள் பெருமைப்படவுதித்தாய் படுபாவி-இந்த
  அருமைகுருகுலத்தின் முறைமைதவிரவிட்டா யடதோஷி-அடி
முறைமைதவிரவிட்டவர்கள்நித்தமுமிழிக்குமொரு வேசி-உன்
  முறைப்படியிருக்க சபைமெச்சவும்நடத்தாயடிபோடி-உந்தன்
மனதிற்பகையைவைத்து பிடவைதனிலழைத்து படுபாவிநீ
  வலியப்பகடைவைத்து அடிமையடாகெலித்தா யடதோஷி-அடி
அடிமைபடகெலித்து அவர்கைப்பொருள்பறித் தறிவாயே-நீயென்
  அடிமைப்படுசிறுக்கி துரைசொற்படிநடக்க வருவாயே-யெந்தன்
தருமத்துரைகளுக்குச் சதிசர்ப்பனைநினைத்த படுபாவி-இந்தச்
  சகுனிபுலையனிட்ட வினைசொற்படிமுடித்தா யடாதோஷி-எந்தன்
சலவைத்தொடைமடிக்குள் சரசத்துடனிருக்க வருவாயே-இந்தச்
  சகுனிசொல்லையெடுத்துக் கடலுக்கப்புறமெட்டி எறிவேனே-நானுன்
தொடையிற்றினியிருக்கச் சபையிற்பழுதுரைத்த படுபாவி-உந்தன்
  தொடையிற்கழுகுகொத்த வெளியப்புழுபுழுத்துமடியாயே-எந்தன்
தலைமயிர்ப்படுகளத்திலுருளககளைகள்பட்டென்னுயிர்போயும்-உன்னை
  தழுவிக்கொள்ளஎதிரெனத்தகுமா கெட்டபாதகனுக்குமறுவேனே-என்னைத

தழுவிக்கொள்ளநினைத்தமடியில்தனையழைத்த படுபாவி-எந்தன்
தர்மத்துரைகள் கைக்குளடிபட்டலறியெப்போவிழுவாயே-உன்னைச்
சபையில் துகிலவிழ்த்துத்தலையைகுனியவைத்தவர்தானோ-என்னை
சபதத்துடனடித்துப்புகழ்பெற்றிடசெய்விப்பாரடிபோடி-என்னைச்
சபையிற்றனிநிறுத்தித் துகிலைக்களையவிட்ட படுபாவி-உந்தன்
தலையைக்கணை தறிக்கதரையிற்புரள்வதெப்போயடதோஷி-எந்தன்
தலையைக்கணைதறிக்கூடி பெற்றிடுஞ் சயத்தரிவர்தானோ-இந்த
சவலைப்பசகளுக்குமினிமற்றொருவருக்கு மசைவேனோ-நீங்கள்
அடியற்றவொருமிக்கக்கொடியப்படுகளத்தில் மடியாமல்-மண்மே
லலையச்சுருளவிழ்ந்தமயிரைக்கையாலெடுத்து முடிவேனோ,

துரோபதைசொல்-விருத்தம்-இ-ம்-முகாரி.

கொலுவினில்நிறுத்தியெந்தன் கூந்தலுந்துகிலுந்தீண்டி
மெலிவுசெய்தவரைநானே மேவருடன்போர்க்களத்தில்
தலைதனைதுணித்துவெற்றி தனிமுரசறைந்திடாமல்
இலகவேவிரித்தகூந்த லெடுத்தினிமுடித்திலேனே,

(வம்)கேளுஞ்சபையிலுள்ளராஜாக்களே என்னைஇந்தராசசபையிலேநிறுத்தி என்கூந்தலையுந் துகிலையுந்தீண்டி என்னை அபிமானபங்கஞ்செய்தவனைநானே ரணகளத்தில் அவன்மார்மேலேயிருந்து மயிரைமுடிக்காவிட்டால் நான்துரோபதையல்ல.

வீமன்சொல்-விருத்தம்.

மங்கைதுரோபதையையிந்த மகாசபைதனில்நிறுத்தி
பங்கமாய்ப்பழுதுசொன்ன பாதகர்தம்மையிந்தச்
செங்கையிற்கதையினாலே சின்னபின்னங்களாகச்
சங்கரித்திடுவேன்சொன்ன சபதமுமுடிப்பேன்பாரீர்.

(வம்)கேளுங்கள்சபையிலுள்ளவர்களே துரோபதையைச்சபையிலேநிறுத்தி மானபங்கஞ்செய்துவைத்தவனை என்கையிலிருக்கும் கதையினாலே அடித்துக்கொன்று நான்சொன்ன சபதத்தைமுடிக்கிறேன்பாருங்கள் ராசாக்களே.

இதுவும்-வீமன்சொல்-ஆசிரியவிருத்தம்.

மதிகததுரோபதையை மயிர்பிடித்திழுத்து
வஸ்திரமுரிந்தவன்றன்னைச்
சதைத்தவனுயிரமன்னியுண்டெனது
தாகந்திராமல்நானினிமேல்
கதித்தவென்கையாம்புனலெடுதுன்னோன்
கதையினாற்சலத்தினையடித்துக்
குதித்துமேலெழுந்ததிவ்வலையையுண்டு
கொண்டவென்பகைமுடித்திடுவேன்

(வம்)கேளுங்கள் ராசாக்களே மந்திரிகளே துரோபதையை மயிரை த்தொட்டிழுத்துவந்து வஸ்திராபங்கம் பண்ணினவனெவனோ அவனை நெஞ்சைப்பிளந்து அவனுடைய உதிரத்தையென்கையினாலே யள்ளிக் குடித்து என்னுடையகோபமென்னப்பட்ட தாகந்தீர்க்காமலினிமேல் என்கையினாலே சலத்தையள்ளிதாகபானம் பண்ணேன் சலம்சாப்பிட வேணுமானலிந்தக்கதையினால் சலத்தையடித்து மேலேயெழுந்தசல த்தைசாப்பிடுவேனேயல்லாமலென்கையினாலள்ளிச்சாப்பிடுகிறதில்லை

அர்ச்சுனன்சொல்-விருத்தம்.

படுதுரியோதனன்சொற் பழுதுபோகாமலேந்தி
விடுவிடென்றுனக்குமிந்த விரோதியாங்கர்னன்றன்னை
தொடுகணையாலேயாவி துள்ளவேயடித்துநாளைப்
படுகளஞ்சேர்க்காவிட்டாற் பார்த்திபனலவேனே.

(வம்)கேளுங்கள் ராஜாக்களே இந்தத்துரியோதனன் சொல்லைக்கீழேவிடாமலெடுத்துக்கொண்டு இச்சகம்பேசுகிற இந்தக்கர்னனுயிரை என்னுடைய அஸ்திரங்களுக்கிரைகொடாவிட்டா லென்பேர்அர்ச்சுனனு நல்லது ஆகட்டும்,

நகுலன்சொல்-விருத்தம்.

கபடுவஞ்சனைக்குப்பொல்லாக் கறடகதமனகம்போல்
தவறுகள்மிகவேசெய்யுஞ் சவுபலநாதன்தன்னை
அவமதித்தமர்களத்தி லதோகதியாக்கிவெற்றி
நவின்றிடச்செய்யாவிட்டால் நகுலனனுகுவேனே.

(வம்)கேளுங்கள்ராசாக்களே மகாகறடகதமனக வித்தைகளாலேபி த்துருபேதஞ்செய்யப்பட்ட சவுபலநாயகனை ரணமுகத்திலே சங்கார ம்பண்ணுமற்போனால் நான்நகுலனு நல்லதாகட்டும்,

சகாதேவன்சொல்-விருத்தம்.

புகுநரிகுருக்கள்போலும் புருஷவேசிகளைப்போலும்
வெகுபகைமனதில்வைத்து மித்திரபேதங்கள்செய்து
மகுடமன்னரைக்கலைத்து மாரீசஞ்செய்யுமிந்த
சகுனியைக்கொல்லாவிட்டால் சகாதேவனனுவேனு.

(வம்)கேளுங்கள்ராசாக்களே நரிகுருக்களென்றுஞ்சொல்வார்களே அவர்களைபோலவும் புருஷவேசிகளைப்போலவும் சதிசர்ப்பனை ராமத் துரோகம் மித்திரபேதகமெல்லாஞ்செய்து சமஸ்தானத்தைக் கலைக் கப்பட்ட இந்தசகுனியைச் சித்திரவதைசெய்துக் கொல்லாவிட்டால் நான்சகாதேவனுபாருங்கள்.

பொது-விருத்தம்.

தருமபுத்திரனில்லாமல் தம்பிமார்நான்குபேரும்
அரிவைதுரோபதையுஞ்சொன்ன அடல்பெருசபதங்கேட்டு

மருவியபெரியோரெல்லா மனமிகக்கலங்கும்போது
குருகுலக்கொடியோனை குருடனுங்கூறுவானே

கட்டியன்-வசனம்

அகோதெப்படியென்ருல் தர்மபுத்திர மகாராசன்தவிரமற்றதம்பிமார்நால்வரும்துரோபதையுஞ்சொன்னசபதங்களைக்கேட்டிச்சபையிலுள்ளபெரியோர்களும்இராசராசர்களும்மனதில்விசனமடைந்திருக்குந்தருணத்தில் திருதராஷ்டிரமகாராசன் துரோபதைக்குச்சொல்லுகிறவிதங்காண்க

திருதராட்டிரன்-துரோபதைக்குச்சொல்-விருத்தம்

கற்பினுக்கரசேதெய்வகடாட்சமுள்ளவளேபோற்றி
மற்பெருமைவர்சிந்தைமகிழ்குலக்கொடியேபோற்றி
பொற்புறுமாதர்க்குள்ளே பொறுமையுள்ளவளேபோற்றி
அற்புதத்திருவேயிந்த வபசாரம்பொறுப்பாய்போற்றி

(வ-ம்)அம்மா துரோபதையேநீ என்தாயாச்சேளங்களைரட்சிக்கவந்ததெய்வமாச்சே அப்படியா இப்படிப்பட்டவளாநீ வேண்டாமென்று நானுஞ்சொன்னேனே என்பேச்சைஇந்தப்பசகள்கேட்கிருர்களாஉன்மகிமைஇந்தபசகளுக்கும் எனக்கும்இப்போதுதான் தெரியவந்தது நாங்களென்ன அபசாரஞ்செய்தாலும்பொறுத்துக்கொள்ளவேணும்.

விகர்னன்சொல்-விருத்தம்

எட்டிநைற்குடுமிகையிலெட்டாமற்போச்சுதானல்
திட்டெனக்கால்பிடிக்குந்திருடர்போல்வந்தாயப்பா
கட்டிதங்கத்தின்மாத்தைக் கண்ணிலாரறிவரோதான்
துஷ்டபிள்ளைகளுக்கின்னஞ் சொல்லுவதெல்லாஞ்சொல்வாய்.

(வ-ம்) கேளுமையாஎன்பிதாவேஎட்டிநைற்குடுமி எட்டாவிட்டால் கால்பிடித்துக்கொள்ளுகிறதென்றுசொல்லிக்கொள்வார்களேஅப்படியிருக்கிறதுஇந்ததுரோபதையை நீ துதிசெய்கிறதுதங்கத்தினுடையபிரகாசமுமமாத்தும்குருடனுக்குத் தெரியுமாஇந்தத்துரோபதைமகிமைநமக்குத்தெரியுமாஒருக்காலுந்தெரியாதுநீசொல்லவேண்டியதெல்லாம்உன்னுடையதுஷ்டப்பிள்ளைகளுக்குச்சொல்லும்இந்த அம்மாளுக்குநீர்உபசாரஞ்சொல்லவெண்டியதில்லை

திருதராட்டிரன்-துரோபதைக்குச்சொல்விருத்தம்

உச்சிதமயிலேகேளா யுணர்வில்லாயெந்தன்மைந்தர்
மச்சினமுறைகொண்டேதோவகைவிளையாடினர்கள்
குச்சிதமாயெண்ணுதே குறைமனதினில்வையாதே
பிச்சர்களென்றேயிந்தப்பிழைபொறுத்தாள்வாயம்மா

(வ-ம்) அம்மா துரோபதை என்பிள்ளைகள் கள்ளங்கபடு தெரியாதபிள்ளைகள் சூதுவாது ஒன்றுந்தெரியாது இப்படிப்போனால் இப்படிவருமென்றுந்தெரியாதவர்கள்மேலும் உனக்குமச்சினமாராகையாலே அந்த முறைகொண்டு நாமெதைச்சொன்னாலுமெதைச்செய்தாலும்கோபித்துக்கொள்ளமாட்டார்களென்கிற நம்பிக்கையினாலே விளையாடினார்கள் அந்தவிளையாட்டை நீவினையமாக நினைக்கவேண்டாம் ஆயிரங்குற்றமானாலும் அடியேனைப்பற்றிபொறுத்து எப்படியாகிலுமிதைமன்னிக்கவேணுந்தாயே.

திருதராட்டிரன்சொல்-கவி.

பொன்னுலகம்புகழும்-கன்னியற்கரசே
என்னவரம்வேணும்-முன்னிநீமொழிவாய்

(வ-ம்) கேளுமம்மா துரோபதையே உன்மனதுதுயரமெல்லாம்நீக்கினன்னாலே உனக்குவேண்டியபிரயோசன மின்னதென்றுகேட்டால் நான்கொடுக்கிறேன் கேளுமம்மா

துரோபதை-திருதராட்டிரனுக்குச்சொல்-விருத்தம்

ஒருமைகள்பலவும்பேசி யுளமெலாமுருகிநின்ற
அருமையென்மாமாவுந்தனரவிந்தபாதம்போற்றி
வருமஞ்ஞீதியன்றிமற்றுமக்கடிமையான
தருமமூர்த்திகளைத்தொண்டுதவிர்த்துநீவிடுகுவீரே

(வ-ம்) கேளும் என்மாமா கேட்டதைக்கொடுக்கிறேனென்றுசொன்னபடியினாலே நீங்கள்சூதாடி அடிமைப்படுத்திக்கொண்ட அந்ததருமமூர்த்திகளை அடிமைத்தனத்தைமீட்டுக்கொடிக்கவேணும் மாமா

திருதராட்டிரன்சொல்-வசனம்

அப்படியேகொடுத்தேன் அம்மா.

இதுவும் திருதராட்டிரன்செல்-கவி.

கனியெனும்மிரம்போல்-இனியசொற்கோதாய்
மனதினில்வருந்தா-தினியொருவரங்கேள்

வம்) கேளுமம்மா துரோபதை இன்னமொருவரங்கேள் கொடுக்கிறேன்

துரோபதைசொல்-விருத்தம்-இ-ம்-ஆகிரி

நூல்வரும்நீதியாய்ந்து நுண்ணியகேள்விகேட்டு
மால்வரும்புகழைப்பெற்ற மாமாகேளொருவிண்ணப்பம்
ஆல்வரும்வெற்றிபெற்ற வாயுதத்துடனேமற்ற
நால்வர்தளைடுமைநீக்கி நயமுடன்தந்திடாயே

(வ-ம்)கேளும்மாமாவே இன்னம்வேண்டியதைகேட்க்கசொன்ன படியினாலேமற்றநாலுபேரையும்ஆயுதத்துடனே அடிமைத்தனத்தைநீக்கிவிடவேணும்மாமா

திருதராட்டிரன்சொல்-வசனம்

அப்படியேகொடுத்தேன் இன்னமொருவரங்கேளம்மா

துரோப்தைசொல்-வசனம்.

கேளும் மாமாவேஸ்திரீஜாதிகள்வரம்பெற்றால்பிராமணஸ்திரீகள் ஒருவரமும்க்ஷத்திரியஸ்திரீகள் இரண்டுவரமும் வைசியஸ்திரீள்மூன்றுவரமும்பெறலாமேயல்லாமல் அதற்குமேலும்பெறலாகாதேமாமாவே

திருதராட்டிரன்-வசனம்-அப்படியா அம்மா

திருதராட்டிரன்சொல-விருத்தம்

தேடக்கிடையாமைந்தர்களேநீதாஞ்சூதில்நீதோற்ற
நாடுகொடுத்தேன்நகர்கொடுத்தேநாலுவிதச்சேனைகள்கொடுத்தேன்
வீடுகொடுத்தேனெப்பொருளும்விளங்கக்கொடுத்தேன்கைக்கொண்
பீடுபடைத்துமுன்போலும்பேராற்பெருத்துவாழ்வீரே [டு

வசனம்

கேளுங்கள்பெருமையுள்ளஎன்கட்டிமக்களேநீங்கள்ஆயாசப்பட வேண்டாம்அந்தப்பிள்ளைகள்வேறல்லநீங்கள்வேறல்ல இப்போதுநீங்கள்சொக்கட்டாடித்தோற்ற நாடுநகரம்ரதகஜதுரகபாதாதிசதுரங்கசேனைகளெல்லாம்கொடுத்துவிட்டேன்நீங்கள்எப்போதும் போல ராச்சியபரிபாலனம்பண்ணிக்கொண்டுசுகமாயிருங்களப்பா

தருமர்திருதராட்டிரனுக்குச்சொல்-விருத்தம்

அப்படித்தானேசெய்வோ மையனேநின்றன் போற்றி
பெட்புறுமுலகந்தன்னிற்பிதாவாக்கியந்தள்ளுவாரோ
எப்படிநீர்சொன்னாலும்யாமதைத்தடுப்பதில்லை
மெய்ப்புடன்விடைகொடுத்தால்மென்னகர்க்கேகுவோ

வசனம்

கேளும்என்பிதாவேஉலகத்திலேபிதாவாக்கியந்தள்ளுவார்களா நீர்எப்படிச்சொன்னாலும்அப்படியேகேட்போம் செலவுகொடுத்தனுப்பினாலநாங்கள்இந்திரபிரஸ்தம்போய்ச்சேருகிறோமையா

சகுனிசொல்விருத்தம்

பகையெல்லாம்போச்சேநான்றான்பட்டதுவீணாய்ப்போச்சே
வகையெல்லாம்போச்சேயுங்கள் வைரங்கள்விட்டுப்போச்சே
சுகமுடனவரும்நீருந்துசங்கட்டிவாழ்ந்திருங்கள
தருமிதுநன்றாய்ச்செய்தீர்சபாசுன்னைமெச்சினேனே

வசனம்-

இன்றோடேயிருந்தபகையும்போச்சுது நான்பட்டபாடெல்லாம் ஆற்றிற்கரைத்தபுளியாபோச்சுது இருக்கட்டும்எப்படியானாலும் நீங்களும்அவர்களும் ஒருமித்துச்சுகமாயிருந்தால்சரிகேடுவரும்போதுமதிகெட்டுவருமென்றுசொல்லுவார்களேஅப்படியிருக்குதுஅடாபோங்கள் வேலைமெனக்கிட்டாதாசிரிகளா. ஆ-ஆ-ஆ,

கர்னன்-சகுனிக்குச்சொல்-விருத்தம்.

மதிப்புடன்தன்னைத்தேடி வந்திடுஞ்செல்வந்தன்னை
உதைத்துமேதள்ளிவிட்டா லுமக்கென்னநமக்கிங்கென்ன
பிதைப்பைகளென்றுசொல்லி பேச்சென்றுநின்றுபோச்சு
விதைப்படுசகுனிமாமா விடுவிடுபேசவேண்டாம்.

(வ-ம்)கேளும்சகுனிமாமாவேணுமென்றுதனக்குத்தானேவந்தசெல்வத்தைவேண்டாமென்றுஉதைத்துத்தள்ளிவிட்டால்இப்போதுஉமக்கும்எனக்கும்என்னமுழுகிப்போச்சுது துரியோதனன்பங்காளியென்றிறபட்சமாத்திரம்வந்தது இதனாலே நீரேன்பேசுகிறீர்சும்மாயிரும்!.

துரியோதனன்-துற்சாதனனுக்குச்சொல்-விருத்தம்.

துற்சாதனைவாடாசுருக்காயோர் நொடியீற்சென்று
பொய்ச்சார்ந்தவைவர்தன்னைப் போகாமல்மடக்கிக்கொண்டு
பிச்சானகிழவன்பேச்சைப் பெரிதென்றுநம்பிப்போக
உச்சாபமல்லவென்று யுடனேபோய்தடுத்துவாடா.

வசனம்.

அடாதம்பிதுற்சாதனைஇங்கேவாடாசீக்கிரமாயோடி தர்மபுத்திராதிகளைப்போகவொட்டாமல் மடக்கிக்கொண்டுவாகண்ணிலலாதபயித்தியக்காரகிழவன்பேச்சைநம்பிப்போகிறது காரியமல்லவென்றுஅதற்குண்டானபேச்சுகளெல்லாம்பேசிஅவர்களை இந்திரபிஸ்தத்துக்குப்போகவொட்டாமல் இங்கேயிட்டுக்கொண்டுவாடாதம்பி-

துற்சாதனன்சொல்-வசனம்.

அப்படியேசெய்கிறேன் அண்ணா,

துற்சாதனன்-பாண்டவர்களுக்குச்சொல்-விருத்தம்

ஐவரேகேளீருங்களறிவென்னவாண்மையென்ன
மெய்வரும்படியாய்த்தோற்றீர்விழியிலாக்கிழவன்பேசவசை
வைகவரும்படியாவெண்ணிக்கடிந்துலகாளப்போறீர்
பெய்வரும்புகழும்போகும்பொறியிலாநெறிசெய்தீரே,

வசனம்,

கேளும்பாண்டவர்களேநீங்கள்சத்தியமாய்அடித்தோற்றநாடுநகரமுதலானதை நான கொடுத்தேன் போய்விடுங்களென்றுமுன்னும்

பின்னுந்தோன்றுத கிழவன்சொன்னால் அதைக்கேட்டுக்கொண்டுநீங்கள்போகலாமா இதுதருமமா இதுவரையிலுஞ்சத்தியமாயிருந்து இப்போது அசத்தியத்தைக்கொண்டாபோகிறது நில்லுங்கள் நில்லுங்கள் இன்னம்பேசவேண்டியதிருக்கின்றது வாருங்கள்,

தர்மர்சொல்-வசனம்,

அப்படியேவருகிறோம் தம்பிதுற்சாதனா,

தர்மர்-சபையில்வந்து-சொல்லுகிற-விருத்தம்

இதாயிதந்தெரிந்துசொல்லு மிரைவரேசொல்லக்கேளீர்
பிதாசொன்னவார்த்தையெல்லாம் பிழைபிழையிதுதானென்று
சுதாவிலேவந்துசொன்னான் தோன்றுதுற்சாதனன்றான்
எதாகிலுமொருமார்க்கத்தை யின்னதென்றுரைசெய்வீரே,

வசனம்,

ஐயா துரோணரேவீஷ்மரேநாங்கள்சொக்கட்டாணுடி தோற்றநாடுநகர முதலானதெல்லாம்மறுபடியும்உங்களுக்குக்கொடுத்துவிட்டேனென்றுஎன்பிதாவானதிருதராட்டிரமகாராசன் சொலவிவிடைகொடுத்தனுப்பியிருக்கஅதுதகாததென்றுதுற்சாதனன்தடுக்கிறான் அதைத்தெரிந்துசசொல்லுங்களையா

துரியோதனன்-பாண்டவர்களுக்குச்சொல்-விருத்தம்.

சொல்லுவதென்னமுன்பின் தோன்றுதகிழவன்பேச்சை
கல்லின்மேலெழுத்தெண்ணெண்ணிக் கடிந்துலகாளப்போநீர்
நல்லதுதானுயீதுநியாயமாயினிமேலுங்கள்
வல்லபங்கட்டிவைத்து வனத்திலுக்கேகுவீரே

வசனம்.

என்னத்தைக்காணும் இங்கேசொல்லுகிறது பிரமாணிக்கமாய்சகூதாடி எப்போதோர்த்தீர்களோ அன்றே போசசுது எங்கள் தகப்பன்பெரியமனிதனாச்சுதே கண்ணில்லாதகிழவன்எதொன்றுந்தோற்றாமல் ஒன்றைச்சொன்னால் அதைச் சிலாக்கியமாய்ப்பிடித்துக்கொண்டுபோகஎத்தனப்பட்டீர்கள்அதுகூடாது இந்தக்ஷணத்திலே நீங்கள்காட்டுக்குப்போய்விடுகிறதே தீர்மானம்.

துரோணர்-தருமருக்குச்சொல்-விருத்தம்

பகடையிற்றோற்றதெல்லாம் பரிந்தவர்தந்திட்டாலும்
இகழ்வதுகொள்ளலாகா திரர்சருக்கியத்தையன்றோ
தரும்பழிமுன்பின்னிந்தத் தாணியையாளுமன்னர்
புரும்நெறிப்படியேசெய்தால் புரவலர்வாழ்க்கையாமே

வசனம்

கேளுந் தருமராசனேஎப்போசூது ஆடித்தோற்றுப்போனதைக் கொடுத்துவிட்டேனென்று அவர்கள்சொன்னாலும்நீங்கள் அசைக்கை கொள்ளுகிறதுயோக்கியமல்லமுன்பின் இராசாக்கள்போன வழிப்படி யேபோகவேணுந்தருமராசனே

அசுவத்தாமர்-தர்மருக்குச்சொல்-விருத்தம்.

தருமபுத்திரனேயுங்கள் தம்பிமார்நாலுபேரும்
சபதமிட்டிருக்குமந்தத் தன்மையைமறந்திட்டாயோ
மருவுமுன்செல்வமெல்லா மறுபடிகிடக்குங் கண்டால்
ஒருவர்தன்னருளுமற்ற தொருவர்தன்பகையாகாதே

வசனம்

கேளுந்தர்மராசனே உங்கள் தம்பிமார் நாலுபேருமிட்டசபதம் பொய்த்துப்போமோ அந்தப்படியேமுடியும் எப்படியும் நாடு நகரமுதலானதுகளும்உங்களுக்குக்கிடைக்கும்திருதராட்டிரனுடையஅன்பும் துரியோதனன்பகையும்பெற்றுப்போனதினாலே காரியமென்ன தர்மராசனே.

பீஷ்மர்-தர்மருக்குச்சொல்-விருத்தம்

அறிவுடனயோத்தியாண்ட வரிச்சந்திரராஜன்செல்வம்
பறிகொடுத்தப்பாறபிள்ளை பத்தினிதன்னைவிற்று
விறல்விட்டுத்தானுங்கூட விலைப்பட்டுமீண்டுவந்து
கறையறவுலகமெல்லாங் கைக்கொண்டதறிகிலாயோ

வசனம்

கேளுந்தர்மராசனேமகாசக்கிரவர்த்தியான அரிச்சந்திரன்நாடுநகரமெல்லாம்விசுவாமித்திரனுக்குக்கொடுத்துவிட்டுப் பிள்ளையைவிற்றுப்பெண்சாதியைவிற்றுத்தானும்விலையாகிப், படாததுன்பங்களைப்பட்டுமறுபடியும்உலகத்தை ஆளவில்லையா இதைகேட்டதில்லையா தர்மராசனே.

விதுரன்-தர்மருக்குச்சொல்-விருத்தம்.

நளச்சக்கிரவர்த்திசூதால் நாடெல்லாமிழந்துகானில்
உளமகிழ்ந்துமன்றுகொண்டே யொண்டொடியாளைநீக்கி
வளமிகுமங்கங்குன்றி வலியதேர்ப்பாகனாகிக்
களைதுயர்நீக்கிதெய்வங் காத்ததுமறிந்திலாயோ.

வசனம்,

கேளும்தர்மராசனேநளச்சக்கிரவர்த்திநாடுநகரமிழந்து வனத்திலேசஞ்சரித்துபெண்சாதியைநீக்கித் தேர்ப்பாகனாகிமறுபடியும்இந்தப்பூச்சக்கிரமெல்லாம் ஏகமாய்ப்பெற்றிருக்கவில்லையா இதுவுங்கேட்டதில்லையாதர்மராசனே

துரோணர்-தர்மருக்குச்சொல்-விருத்தம்

ஆகையால்நீருமிந்த வரிவைதுரோபதையுங்கூடி
பாகமாய்வனத்துக்கேகிப்பனிரெண்டுவருடந்தங்கி
ஓகையோர்வருங்காட்டி லொருவர்க்குந்தெரியாவண்ணம்
வாருடன்மறைந்திருந்துவந்துபின்னுலகையாள்வீர்

வசனம்.

கேளுந்தர்மராசனே நீங்களைந்துபேரும் இந்தத்துரோபதையுங் காட்டுக்குப்போய்பன்னிரண்டுவருஷம்வனவாசம்பண்ணி ஒருவருஷம் ஆருக்குந்தெரியாமல்காட்டிலேமறைந்திருந்துவந்தீர்களானல் மறுபடியும்உங்கள்நாடுநகரமெல்லாம் பெற்றுக்கொண்டுசுகமாயிருக்கலாந் தர்மராசனே.

இதுவும்-துரோணர்சொல்விருத்தம்

மறைந்திருக்கின்றநாளில் மற்றொருவர்கண்டால்
இறைமறுபடியுங்காட்டுக்கேகுவதென்றுரிந்த
நெறியினில்நீங்கள்சென்று நீங்கள்வனஞ்சஞ்சரித்து
குறைவறவந்தாலுங்கள் குவலயங்கைக்கொள்வீரே

வசனம்

கேளும்என்னருமையானபிள்ளைகளேபன்னிரண்டுவருஷம்வனவாசமும்ஒருவருஷம்அக்கியாதவாசமுமிருந்துமறுபடியும்இந்தஅக்கியாதவாசத்திலே உங்களையாராகிலும்இன்னாரென்று தெரிந்துக்கொண்டால்மறுபடியும்பதின்மூன்றுவருஷமும்இந்தப்படிக்குச் சஞ்சரிக்கின்றதென்று இருக்கிறதுசமஸ்தானத்தின்கருத்துஅப்படியே இந்தப்படிக்குவனம்போய்வந்தால் உங்கள்செல்வத்தைப்பெற்றுக்கொள்ளலாந்தர்மராஜனே

துரோபதைசொல்-விருத்தம்,மூகாரி

துறையிதுவென்றுசொன்ன துரோணரேநின்றாள்போற்றி
அறைதருமிவர்களை வராசர்களாவதென்றுந்
திறமுடனிவர்களுக்குத்தேவினாவதென்று
குறைவரவினியொருக்காற்கொடியசூதாடவேண்டும்

(வ-ம்)ஐய துரோணரே நீங்கள்சொன்னதுசரியேஆனாலும்இந்த ஐந்துபேரும்அடிமையென்று அவர்களுக்குட்பட்டபொருள்நானென்றும்அவர்கள்சொல்லச்சே அந்தவில்லங்கத்தைவைத்துக்கொண்டுவனத்திற்குப்போகிறது யோக்கியமெல்லஇனியொருதரஞ்சூதாடவேண்டும்ஐயரே.

தர்மர்சொல்-விருத்தம்

மெய்யிதுதையல்வார்த்தை விகிதந்தானவர்க்குநாங்கள்
கையுறுமடிமையாக்கிக்காட்டுக்குப்போனால்நாளை
வையகமடிமைப்பட்டவனிதர்க்கிங்கேதென்பாரே
துய்யனேயினியோராட்டஞ்சூதாடவேணுமையா

வசனம்

கேளுமையா துரோணரே துரோபதைசொல்லுகிறதுமெய்யே அடிமைத்தனத்தோடேவனம்போய்வந்தால்நாளை அடிமைப்பட்டவர்களுக்குப்பூமியேதென்று சொல்லுவார்கள் அந்தஅடிமைத்தனத்தைஇப்போதுதீர்த்துக்கொள்ளுகிறது நல்லதுஆகையாலே இன்னமோர்தரஞ்சொக்கட்டானுடவேண்டுமையா

விதுரன்; துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

சரிசரியிதற்குவேறேதடங்கலைச்சொல்லொணாது
துரியனேசகுனிகர்ணதுற்சாதனுகேளீர்கள்
தர்மருஞ்சகுனிதானுந்தனித்தனியெதிரிருந்து
பரிவுடனினியோராட்டம் பகடையையாடச்செய்வீர்

வசனம்

கேளுந்துரியோதனுகர்ணதுற்சாதனுதர்மராஜன் சொல்லுகின்றதுசரியேஆகையினாலே முன்போலத் தர்மராசனும்சகுனியும்இன்னமொருஆட்டஞ்சொக்கட்டான்போடட்டும்பார்ப்போம்

சகுனிசொல்-விருத்தம்

நாட்டையுங்கொடுத்துவுள்ள நகரையுங்கொடுத்துச்சொந்த
வீட்டையுங்கொடுத்துச்சும்மாவெறுங்கையைத்தட்டிக்கொண்டு
காட்டுக்குப்போறபேர்க்குக்கைப்பொருளேதணக்கண்டு
ஆட்டத்தையாடச்சொன்னீரதற்கொருவயணஞ்சொல்வீர்

வசனம்

நாடுநகரம்ரொக்கரோசனே ஆனைசேனைமுதலானதுகளெல்லாந்தோற்றுக்கையைத்தட்டிக்கொண்டு காட்டுக்குப்போறபேர்களுடனேசூதுஆடச்சொல்லிக் குதிக்கிறீர்களேஅவர்கள்கையிலென்னயிருக்குதுஎன்னபந்தயம்வைத்தாடுவார்கள்கேளுங்கள்

தர்மர்-சகுனிக்குச்சொல்விருத்தம்

நான்தோற்றுலெந்தன்புண்ணியம்நல்குவேனல்லாமல்நீர்
தான்தோற்றுலெங்கள்தொண்டு தவிர்வதுயிதைக்குறித்து
தேன்தோற்றவாயாயிங்கே திறல்மன்னர்பார்ப்பதாக
வான்தோற்றகையாலிங்கேவலியசூதாடுவோமே

வசளம்

கேளுஞ்சகுனிமாமாநான்தோற்றுல்நான்செய்தபுண்ணியமெல்லாங்கொடுத்திவிடுகிறேநீர்தோற்றீராகுல் எங்களுக்குஅடிமைத்தனமக்களாயில்லைஇந்தப்படிக்குஆடுவோம்வாரும் மாமா

சகுனிசொல்-வசனம்.

அப்படியே ஆடுவோம்வாருந் தருமராசனே

தர்மருஞ்சகுனியும்.

ஐந்தாவது ஆட்டம் ஆடுகிறது

தர்மர்சொல்-தரு-இ-ம-காம்போதி-மிசுரதாளம்,

தாமோதராவாசுதேவா கோவிந்தா
தற்காத்தருள்முகுந்தா வைகுந்தா

வசனம்-இரண்டுபன்னிரண்டு-பத்து.

சகுனிசொல்-தரு,

இன்னமுஞ்சூதாடவந்தீரோ வாரும்
இனியாகிலும்மென்கைதிராணியைப் பாரும்

வசனம்-மூணத்தொண்ணு,

தர்மர்சொல்-தரு,

நாராயணாவச்சுதா பத்மநாபா
நம்பினேனுன்னையேமெய்ஞ் ஞானசொரூபா

வசனம்,

இரண்டுபன்னிரண்டு-இரண்டெட்டு-இரண்டிருக்கால்-இரண்டு
துகை-பத்து,

சகுனிசொல்-தரு.

அனைத்துந்தோற்றேருமென்று சற்றுமெண்ணாதா
அத்தனையாலும் போகவொண்ணாதா

வசனம்-நாலத்தோரஞ்சு,

தர்மர்சொல்-தரு,

அண்டமெல்லாம்வாரி யுண்டசெவ்வாயா
ஆதரிக்கவேணு மார்க்கசகாயா

வசனம்,

நாலுபன்னிரண்டு-நாலிருக்கால்-நாலெட்டு-துகை-நாலுமூணேழு

சகுனிசொல்-தரு,

விபரீதபந்தயம் விழுந்ததுவும்போச்சே
விழுவதெல்லாஅஞ்சு மூணத்தொண்ணாச்சே

வசனம்-மூணத்தொண்ணேழு,

தருமர்சொல்-தரு.

தாரணியெல்லா மளந்தபொற்பாதா
தட்சனேயாதி லட்சுமிசமேதா

வசனம.

இரண்டுதுகை-நான்கிருககால்-எட்டு- பன்னிரண்டு-ஆறேழொண்ணேமு

சகுனிசொல்-தரு.

ஆட்டத்திலெல்லாங் கொடுத்துச்சலித்தான்
அடிமைத்தனம்போக இப்போகெலித்தான்

வசனம்-நாலுமூணேழு

பீஷ்மர் - துரோணர் - அசுவத்தாமர்- விதுரன்

இவர்கள்சொல்லுகிற-விருத்தம்

தொண்டரென்றவர்சொல்லாமற் சூதாடித்தீர்த்துவிட்டீர்
விண்டிடுமடிமையான வில்லங்கமினிமேலில்லை
பண்டுறைசெய்யுமிந்தப் பதின்மூன்றுவருஷஞ்சென்றால்
கொண்டிடுநாடும்வாழ்வுங்கொள்ளுவீர்சொல்லுவீரே

வசனம்

கேளுங்கள்பாண்டவர்களே அம்மாதுரௌபதையே அடிமையென்றவார்த்தையை அவர்கள்சொல்லாமல் அந்தவில்லங்கத்தைத் தீர்த்துவிட்டீர்கள்இனிமேல்நீங்கள் ஆரணியத்துக்குப்போய்பன்னிரண்டு வருஷம்வனவாசமும்ஒருவருஷம்அக்கியாதவாசமு மிருந்துவந்தால்மறுபடியும்எப்போதும்போலஉங்களுடைய இராச்சியமெல்லாம் பெற்றுக்கொள்வீர்கள்.

தர்மர்-சபையோர்களுக்குச்சொல்-விருத்தம்,

அருள்பெருந்துரோணராதி யையரேபாட்டானாரே
மருவுசிற்றப்பாவுங்கள் மலர்ப்பதம்போற்றிபோற்றி
கருதியேபெரியோருங்கள் கடாட்சம்வைத்தருளவேணும்
விரவியவனத்துக்கேக விடையதுதருகுவீரே.

வசனம்.

ஐயா துரோணரே அஸ்வத்தாமரே வீஷ்மரே பாட்டனரே எங்கள்குருக்கள்மாரே எங்கள்சிற்றப்பாகிய விதுரமகாராஜரே உங்களனைவருக்கும் சரணஞ் சரணம் உங்கள் திருக்கடாட்ச மிருக்கவேண்டும் நாங்கள் வனத்திற்குப் போய் வருகிறோம் செலவு கொடுங்கள் பெரியோர்களே

வீஷ்மர்-துரோணர்-அஸ்வத்தாமர்விதுரர்

இவர்கள்-சொல்-விருத்தம்

மறிகடல்வற்றினாலுமகமேருகுருகினாலும்
அறைதருப்புவியாழ்ந்தாலுமண்டளங்களிடிந்திட்டாலும்
குறையிலாமக்களுங்கட்கொருதீங்கும்வருவதில்லை
துறைவனஞ்சென்றுமீண்டுசுகமுடன்வருகுவீரே

வசனம்

மகாசத்தியவந்தரான பாண்டவர்களே இந்தசத்தசாகரங்கள்வற்றிப்போனாலும் மகம்மேருவுக்கொருசஞ்சலம்வந்தாலும் பூமியானது ஆழ்ந்திப் போனாலும்பிரம்மாண்டகடாகங்கள் இடிந்துப் போனாலும் உங்களுக்கொருதுன்பமும் வருகிற தில்லைசுகமாய்ப்போய்வாருங்கள் மைந்தர்களே

தர்மர்சொல்-வசனம்

அப்படியேபோய்வருகிறோம்பெரியோர்களே

பாண்டவர்கள்-காட்டுக்குப்போகிற-தரு

இ-ம்-தோடி-தாளம்-மிசுரம்.

பல்லவி

வனத்திற்பன்னிரண்டுவருஷஞ் சஞ்சரிப்போம்
வாருந்தம்பிமாரே

அநுபல்லவி

தொனித்தசகுனிமாமன்சுழலினி லகப்பட்டோம்
துரைத்தனமும்நாடுஞ் சூதிற்றோற்றுவிட்டோம் (வன)

சரணங்கள்.

எம்மாலேயாதொன்று மாகுமோ-ஆயன்
எழுதின்துந்தப்பிப் போகுமோ

M74

தம்மாலேயொன்றுமில்லை யெவர்களுக்கானலும்
 தாழ்வுஞ்சிலதுகாலம் வாழ்வுஞ்சிலதுகாலம்(வன)
பங்கும்பங்காளியாய்ப் பிறந்தோமே-இந்தப்
 பாரெல்லாம்விட்டுத் துறந்தோமே
கொங்கலர்மாலைமகுட மன்னவருக்கும்
 குறையுஞ்சிலதுகாலம் நிலையுஞ்சிலதுகாலம்(வன)
மன்னவர்க்கிதுமெத்த தொல்லையோ-இந்த
 வருத்தப்பட்டபேர்க ளில்லையோ
இன்னமின்னந்துயரெண்ணுவ தென்னமதி
 என்னறைக்குமாயனிரண்டு பாதமேகெதி(வன)

விருத்தம்-இ-ம்-மகாரி

வரியராய்பாண்டவரும் வனந்தனிற்சென்றுதானும்
அரியதோர்பனிரண்டாண்டும் அஞ்ஞாதவாசனுஞ்செய்துந்
துரியனுதிகளைக்கொன்று துரோபதைசமேதராக
மருவியேதர்மராசன் மகுடாபிஷேகங்கொண்டார்

தளாத்திகங்கைமதித்தலைமிற்சூடுந்
 தற்பரனுஞ்செவ்வந்திநாதர்வாழி
மாளாததுரோபதையின்கற்புகாத்த
 மட்டுவார்குழலம்பாள்மலர்த்தாள்வாழி
மீளாதநகர்தருநாதுரியனுரை
 மெய்ந்நடுங்கப்போர்க்களத்தில்வென்றுபூமி
நீளாதநபாகரற்பஞ்சவர்க்கு
 நிகரில்லாவரசளித்தநெடுமால்வாழி

கார்வாழிசுதிர்மதியினுடைக்கார்வாழி
 கற்புடையதுரோபதையாள்கணவரைந்து
பேர்வாழிபெரியோர்கள்தானும்வாழி
 பேசிமெச்சான்றோர்களதும்பெருகவாழி
ஊர்வாழிதிரிசிரமாநகரம்வாழி
 உற்றமட்டுவார்குழலாள்சாலைவாழி
ஏர்வாழிசைவநெறிசமையத்தோர்வாழி
 இதைப்படித்தசபாபதிமாலென்னுளும்வாழி

115760

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

ஸ்ரீமகாபாரதவிலாசம்.

முற்றிற்று

3230